www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**பார்வியக்கும் அழகு!**

போர்நடக்கு மோர்பால், பொதியிறங்கு மோர்பால்
ஆர்கடலிற் சடலம் அடித்தொதுங்கும் - ஓரொருபால்
கார்குழலிற் பூமணக்கும், கணைபிரிக்க ஈர்பறக்குமிந்நாட்டின்
பார்வியக்கு மழகுதனைப் பார்!

- ஈழமோகம்

இதழ் 80 | செப் 7-செப் 20, 1995 | 7.00



# புல்லர்ஸ் வீதி படுகொலைகள்!

கொழும்பு புல்லர்ஸ் வீதியில் அமைந்துள்ள அதிரடிப்படை (STF) முகாமிலுள்ள பாவிக்கப்படாத கழிப்பறையொன்றில் வைத்து கொல்லப்பட்ட தமிழர்களின் படுகொலைகள் தொடர்பான திடுக்கிடும் தகவல்கள் இப்போது வெளியாகத் தொடங்கியுள்ளன. இந்தப் படுகொலைகளுக்கும் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியொன்றின் முக்கியஸ்தர் ஒருவருக்கும் தொடர்பிருப்பதாகவும் ஆளும் கட்சியின் அதிகாரம் படைத்த அமைச்சர் ஒருவருக்கும் கூட இதில் சம்பந்தம் இருப்பதாகவும் இப்போது தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. ஜனாதிபதியின் விசேட பணிப்பின் பேரில் இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்ற போதும்; இம்முக்கிய புள்ளிகளின் சம்பந்தம் இருப்பதால் இவ் விசாரணைகள் உடைப்பில் போடப்பட்டு விடுமோ என்ற சந்தேகமும் பரவலாக எழுப்பப்படுகிறது.
தமிழர்களின் நாடளாவிய கைதுகள் படுகொலைகள் தொடர்பாக சரிநிகர் ஏற்கனவே பல உண்மைகளை வெளியிட்டிருந்த போதும் எத்தகைய நடவடிக்கைகளும் அப்போது எடுக்கப்பட்டிருக்கவில்லை. இப்போது கைது செய்யப்பட்டுள்ள சில அதிரடிப்படை அதிகாரிகள் தொடர்பாகவும் இவர்களுடன் சம்பந்தமுடைய வேறு சில நபர்கள் தொடர்பாகவும் சரிநிகர் ஏற்கனவே தகவல்கள் வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

(மேலதிக விபரங்கள் பக்கம் 4;16இல்)



யுத்தத்தின் இன்னொரு முகம்




பெண்கள் உரிமையும் மனித உரிமையே!




STF படுகொலைகளுக்கு பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக்கினாலான கைவிலங்கு இது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மட்டக்களப்பு: புலிகளுக்கு தேனீர்கொடுத்த குவளை இதுதானா?

## மேயரிடம் படையினர் கேள்வி!

ஓகஸ்ட் மாதம் 19ம் திகதியன்று இரவு இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளதும், இராணுவத்தின் மிகப் பெரிய முகாம்கள் அமைந்துள்ளதும், பலமான பாதுகாப்பை உடையதுமான மணிலத் தீவு பகுதியில் இருந்து எவ்வித காரணமும் இன்றி அன்று இரவு முழுவதும் பொதுமக்கள் வாழும் நகர்ப்புறத்தை நோக்கி மிகப் பெரிய அளவில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. மறுநாள் காலை இப்பிரதேசம் முழுவதும் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்பட்டது. படையினரின் இத்தேடுதல் நடவடிக்கையின் போது இப்பகுதி வாழ் பொதுமக்கள் வயது வித்தியாசம் இன்றி தாக்கப்பட்டுள்ளனர். தேடுதல் நடைபெற்ற பிரதேசத்தினுள் தான் மட்டக்களப்பு மேயர் செழியன் பேரின்பநாயகத்தின் இருப்பிடமும் உள்ளது. செழியன் பேரின்பநாயகமும், அவரது மெய் பாதுகாவலர்களும் கூட இராணுவத்தினரால் நாகரீகமற்ற முறையில் நடாத்தப்பட்டுள்ளனர். மேயரிடம் தேவையற்ற கேள்விகள் கேட்கப்பட்டன. நீர்தானா இரவு வந்த புலிகளுக்கு தங்க இடம் கொடுத்தனீர் என்றும், வெளியில் கிடந்த அழுக்குத் துணியொன்றைக் காட்டி இத்துணியால் தானா இரவு வந்த புலியினர் தமது துப்பாக்கிகளை துடைத்தனர் என்றும் வெளியில் இருந்த தேனீர் அருந்தும் குவளைகளைக் காட்டி இதில் தானா இரவு வந்த புலிகளுக்கு தேனீர் கொடுத்தீர் என்பதும் போன்ற பல கேள்விகள் கேட்கப்பட்டன. அவரது உடமைகள் அனைத்தும் அக்கு வேறு, ஆணி வேறாக சோதிக்கப்பட்டன. மேயருக்கு அரசாங்கத்தால் பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்ட இரண்டு பொலிஸாரினதும் துப்பாக்கிகளும் மிக நுணுக்கமாக பரிசோதிக்கப்பட்டன. பொலிஸாரிடமும் தேவையற்ற பல கேள்விகள் கேட்கப்பட்டன.

இந்நிகழ்ச்சி உண்மையில் நேயரை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு நடாத்தப்பட்ட ஒரு செயற்பாடு போல தோன்றுகின்றது. ஏனென்றால் மட்டக்களப்பு மாநகரசபையின் அலுவலகத்தில் மட்டக்களப்பு மாவட்ட பிரிகேடியரின் அலுவலகம் பலவந்தமாக முன்னைய பிரிகேடியரான ரொஹான் குணவர்தனாவின் காலத்தில் அமைக்கப்பட்டது. இதனால் மட்டக்களப்பு மாநகரசபை அலுவலகம் புதிய செயலக கட்டிடத்தின் ஒரு பகுதியில் பல சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது. அண்மையில் அதிலும் ஒரு பகுதி அரசாங்க அதிபரின் உத்தரவை அடுத்து கலையரங்கு நிர்மாணிக்க கொடுக்கப்பட்டு விட்டது. இதன் காரணத்தினால் தற்போதும் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பத்மநாதனுக்கும், மேயர் செழியன் பேரின்பநாயகத்திற்கும் இடையில் தொடர்ச்சியான பனிப்போர் நடந்த வண்ணம் உள்ளது.

இவ்வாறு மாநகர சபை இயங்குவதற்கு உரிய அலுவலகம் இல்லாத காரணத்தைக் காட்டி மாநகரசபையின் பழைய அலுவலகத்தில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றி விட்டு அக் கட்டிடத்தை உடன் மாநகரசபைக்குத் தர வேண்டும் என செழியன் பேரின்பநாயகம் வெளிப்படையகப் பேசியதன் விளைவே அண்மையில் அவர் அவமானப்படுத்தப்பட்ட சம்பவம் என பரவலாக பேசப்படுகின்றது.

தான் இராணுவத்தினரால் அவமானப்படுத்தப்பட்டது குறித்து பத்திரிகைகளிலும் கூட்டங்களிலும் அறிவித்தும் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மீது இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படாததில் இருந்து இவ்விடயம் இராணுவ மேலிடத்தின் அனுசரணையுடன் நடை பெற்றதாகவே தெரிகின்றது என மேயர் செழியன் பேரின்பநாயகம் கூறுகின்றார்.

இச்சம்பவத்தை விட அன்றைய தினம் பெண்களும் கேவலமான முறையில் நடாத்தப்பட்டுள்ளார்கள். புலிகள் கொண்டு வந்த வெடிகுண்டை எங்கே வைத்திருக்கிறீர்கள் என அசிங்கமான முறையில் எல்லாம் பல கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. அன்று வைத்தியசாலையில் அண்டிய பகுதியிலே துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட காரணத்தினால் வைத்தியசாலைக்கு வெளியே இருந்த விடுதிகளில் தங்கியிருந்த வைத்தியர்கள் அன்று இரவு கடமைக்குச் செல்லவில்லை. இதனால் வாட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு பெண் உரிய பராமரிப்பு இன்றி மரணம் அடைந்துள்ளார்.

எதுவுமே நடைபெறாத ஒரு விடயத்திற்கே நிலைமை இப்படி என்றால் உண்மையில் புலிகள் தாக்கி அதனால் மட்டக்களப்பு நகரினுள் உள்ள இராணுவத்திற்கு ஏதும் இழப்புக்கள் ஏற்பட்டிருந்தால் பொதுமக்களின் நிலை கணிப்புக்கு அப்பாற்பட்டதாகவே இருந்திருக்கும். மேயர் செழியன் பேரின்பநாயகமும் இச்சம்பவங்கள் குறித்து தெரிவிக்கையில் அரசின் பாதுகாப்போடு இருக்கும் தனது நிலையே இப்படியென்றால் நிர்க்கதியான அப்பாவிப் பொதுமக்களின் நிலையை எப்படி கூறுவது என கேள்வி எழுப்பினார்.

**-சாரங்கன்**



# திருமலை: புலிகளை வெல்ல மக்களைக் கொல்!

திருகோணமலையில் பொலிஸார் இளைஞர்களை வகைதொகையின்றி அள்ள ஆரம்பித்தார்கள். சந்திகள் தோறும் நின்று வருகின்ற போகின்ற இளைஞர்களை மறித்து நன்றாகத் திரட்டி வாகனங்களில் ஏற்றி பொலிஸ் நிலையம் கொண்டு சென்றார்கள். இளைஞர்கள் வந்த சைக்கிள்கள் அவர்கள் கொண்டுவந்த பொருட்கள் தெருக்களில் அந்தந்த இடங்களிலேயே போடப்பட்டிருந்தன.

கொண்டு செல்லப்பட்ட இளைஞர்கள் முகமூடிகளின் முன்னால் நிறுத்தப்பட்டனர். வீடியோ எடுக்கப்பட்டனர். எவ்வித உடல் இம்சையும் இன்றி மூன்று அல்லது நான்கு மணி நேரங்களில் அனைவருமே விடுவிக்கப்பட்டனர்.

நகரபிதா சூரியமூர்த்தி பொலிஸாரிடம் காரணம் கேட்டார். பெண் பிள்ளைகளை இந்த இளைஞர்கள் பகிடி பண்ணுகிறார்கள். பல பெற்றோர்கள் எங்களுக்குப் புகார் செய்துள்ளார்கள் எனப் பதில் கிடைத்தது. அப்படியே நம்பிவிட்ட நகரபிதா வாகனத்தில் ஒலிபெருக்கியைப் பூட்டி வீதிகள் தோறும் இளைஞர்களுக்கும் பெற்றோர்களுக்கும் விநயமாக வேண்டுகோள் விடுத்தார். ஆனால் பகிடி பண்ணும் இளைஞர்கள் எதற்காக முகமூடிகளின் முன்னால் கொண்டு வரப்பட்டனர் என்பது (பாதிக்கப்பட்ட பெண் பிள்ளைகள் தாம் இப்போது முகமூடிகளோ) வீடியோ எடுக்கப்பட்டனர் என்பதோ நகரபிதாவிற்கு தெரியப்படுத்தப்படவும் இல்லை. அவர் கேட்கவும் இல்லை.

உண்மையில், பிடிக்கப்பட்டவர்கள் அத்தனை பேரும் தமிழ் இளைஞர்களே. அது மாத்திரமல்ல பெண்களை பகிடி பண்ணுவதற்கென்றே உடம்பு வளர்த்துக் கொண்டிருக்கும் கூட்டங்கள் இவர்களில் அடங்கவில்லை. த.வி.கூ. செயலதிபர் சம்பந்தன் தலையில்தான் இந்த நாடகம் இரண்டு நாட்களிலேயே நிறுத்தப்பட்டது ஆறுதலான விடயம். மாகாணசபைக் காலத்தில் தமிழ் தேசிய இராணுவத்திற்கு ஆளுங்கட்சிகள் ஆட்கள் பிடித்தது போன்ற இந்த சம்பவம் ஓய்ந்ததில் பெற்றோருக்கு திருப்தி.

இவ்வாறிருக்க திரியாய் இராணுவ முகாம் பலப்படுத்தப்பட்டுள்ளது. ராணுவத்தினரின் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. முகாமின் பரப்பளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. சமார் 25 பொதுமக்களே அங்கு குடியிருக்கிறார்கள். ஆட்கள் இல்லாத வீடுகள் எல்லாம் உடைக்கப்படுகின்றன. வீட்டு மரங்கள் கதவு நிலைகள் என்பன விறகுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

தென்னை மரங்கள் தறிக்கப்பட்டு அரண்கள் அமைக்கப்படுகின்றன. எல்லாம் அவன் செயல்! வீட்டு உடமையாளர்கள் எங்கோ அகதிகளாக இருந்து பெரும்மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மூதூர் கட்டைப்பறிச்சான் கிராமத்தில் ஷெல் விழுந்து இரண்டு வயோதிபர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். புலிகள் உணவுப் பொருட்களை வண்டிகளில் ஏற்றிச் செல்ல முனைந்த சமயம் இராணுவம் குறுக்கிட்டிருக்கின்றது. புலிகள் நழுவி விட்டார்கள். உணவுப் பொருட்கள் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டன. அக்கம் பக்கத்தில் வீட்டுக்காரர்களுக்கு அகோர அடி! ஆறு வீடுகள் எரிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஏவப்பட்ட ஷெல் காரணமாக கணபதிப்பிள்ளை செல்லையா (65) என்கிற வயோதிபரும் சுப்பையா மாணிக்கம் (80) என்ற மூதாட்டியும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் கடந்த மாதம் 30ம் திகதி இடம் பெற்றது. உணவுப் பொருட்களை ஓரளவு எடுத்துச் செல்ல அனுமதித்த இராணுவம் இச்சம்பவத்தினால் கட்டுப்பாடுகளை மீண்டும் இறுக்கமாக்கியுள்ளது.

ஓகஸ்ட் 10ம் திகதி ரோந்து சென்ற இராணுவத்தினரை புலிகள் எதிர் கொண்டனர். வெகுண்டெழுந்த இராணுவத்தினர் சம்பூரைச் சேர்ந்த ப.சுப்பிரமணியம் (55) என்பவரையும் விசுவலிங்கம் தவராசா எனப்படும் வைத்தியரையும் வீட்டில் இருந்து இழுத்தெடுத்து அவர்களது மனைவி மக்கள் கதறக்கதற சுட்டுக் கொன்றுள்ளனர். கிருபைநாதன் என்ற நபர் படு மோசமாக தாக்கப்பட்டுள்ளார். இராணுவத்தின் வீரதீர செயல்களுக்கு மக்கள் கூட இரையாகி உள்ளனர்.

இப்போது அந்தப் பகுதி மயானமாக உறைந்து போய் கிடக்கிறது. பத்திரிகைகளில் சமாதான திட்டத்தைப் பார்த்து பரவசப்பட்டு கொண்டிருந்த மக்களுக்கு இந்த இரண்டு சம்பவங்களும் பேரிடியாக அமைந்து விட்டன. புலிகளை வெல்வதற்கும், மக்களை கொல்வதற்கும் சம்பந்தமுண்டு என்று இராணுவம் செயற்படும் வரை ஏட்டளவுத் திட்டங்கள் எவருக்குத் தான் திருப்தியைத் தரும்?

**-விவேகி**

# ஓட்டமாவடி: தொண்டர் ஆசிரியர் பிரச்சினை!

கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர் சம்பந்தமான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்படவுள்ளன. அதில் அதிக மோசடிகளும், ஊழல் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவர்களில் 7பேர் ஓட்டமாவடியை சேர்ந்தவர்கள். இவர்கள் 1989ம் ஆண்டு தொண்டர் ஆசிரியராக கடமையாற்றியதாக ஆவணங்களை சமர்ப்பித்து நியமனம் பெற்றார்கள், ஆனால் இதே காலப்பகுதியில் இவர்கள் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள்.

இருந்தும் இது சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதற்காக பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்புமாறும் முஸ்லீம் இளைஞர்கள் சிலர் மட்டு.எம்.பி. பரராஜ சிங்கத்தை வேண்டியுள்ளனர். இது சம்பந்தமாக தேவைப்படும் ஆவணங்களை வழங்கினால் இடமாற்றம் செய்யப்படுவீர் என ஐக்கிய தேசியக் கட்சி தீவிர ஆதரவாளரும் ஓட்டமாவடி மத்திய கல்லூரி அதிபருமான எம்.சி.ஏச்.முகமட் அவர்கட்கு கல்குடா முஸ்லீம் காங்கிரஸ் முக்கியஸ்தர் ஒருவர் எச்சரிக்கை செய்துள்ளார். ஏனெனில் இவருடைய இரண்டு குடும்ப அங்கத்தவர்களும் இவ்வாறு நியமனம் பெற்றுள்ளனர்.

**-நெள**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தத்தளிக்கும் ஐரிஸ்மோனாவும் தோற்றுப்போன அரசாங்கத்தின் தந்திரமும்!

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம தொடர்பாக அண்மைக்காலத்தில் முறுகிக் கொண்டிருந்த அரசும், இராணுவமும், ஐரிஸ் மோனா விடயத்தில் மீண்டும் அந்த நிறுவனத்துடன் ஓரளவு சமரசத்துடன் உறவாட முற்பட்டுள்ளன. முன்னோக்கிய பாய்ச்சல் நடவடிக்கையின் போது நடைபெற்ற நவாலி தேவாலய குண்டு வீச்சுச் சம்பவத்துடன் செஞ்சிலுவைச் சங்கத்தை அரசும் இராணுவமும் குரோதத்துடன் நோக்கலாயின. பிரச்சினை அத்துடன் நிற்காது தொடர்ந்து செஞ்சிலுவைச் சங்கத்தை சில சிங்கள இனவாதப் பத்திரிகைகள் தாக்கி வந்தமைக்கும், யாழ்ப்பாணத்திற்கு உணவு கொண்டு செல்லும் விடயத்தில் அந்நிறுவனம் தேவையில்லாமல் நிபந்தனைகள் விதித்து முரண்டு பிடிக்கிறாற் போல இராணுவம் சித்திரிக்க முற்பட்டமைக்கும் வேறு ஒரு பின்னணியும் உண்டு.

1990 இல் அப்போதைய அரசாங்கம் வடக்கிற்கு பிரயாணிகள், உணவு, மருந்து ஆகியவற்றை ஏற்றிச் செல்லும் கப்பல்களை செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடன் கொண்டு செல்லுமாறு கேட்டுக் கொண்டது. இதற்கிணங்க மோதலில் ஈடுபட்டுள்ள இரு பகுதியினருக்குமிடையிலான ஒரு சர்வதேச நடுநிலையாளர் என்ற வகையில் இந்த வேலையை செஞ்சிலுவைச் சங்கம் செய்து வந்தது. காரை நகருக்குப் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் கப்பலான நக்ரோமாவை இதனடிப்படையில் நான்கு வருடங்களாக செஞ்சிலுவைச் சங்கம் பாதுகாத்துச் சென்று வந்தது.

இத்துடன் பிளம்போயன்ற் என்னும் அதனால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பலையும் நோயாளரை வடக்கில் இருந்து கொண்டு வருவதற்காக செஞ்சிலுவைச் சங்கம் சேவையில் ஈடுபடுத்தியிருந்தது.

இக்கப்பலின் வாடகைக் காலம் முடிந்த பின் கடல் நர்த்தகி என்னும் கப்பலை செஞ்சிலுவைச் சங்கம் தனது சேவையில் ஈடுபடுத்தியிருந்தது.

கொழும்பிலும் (உணவு மற்றும் சரக்குக் கப்பல்கள்) திருமலையிலும் (பிரயாணிகள் கப்பல்கள்) கடற்படையினால் சோதிக்கப்படுவதே இவற்றிற்கெல்லாம் வழமையான பாதுகாப்பு நடைமுறையாக இருந்து வந்தது. ஆனால் கடற்புலிகளின் வளர்ச்சி, அதனால் திருமலை, கொழும்பு துறை முகங்களுக்கு ஏற்பட்ட ஆபத்து என்பவற்றைக் கருத்திற் கொண்ட கடற்படை, செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பின் கீழ் வரும் அனைத்துக் கப்பல்களும் காங்கேசன்துறை கடற்படை துறைமுகத்தினுள் கொண்டு வரப்பட்டு சோதனைக்குள்ளாக்கப்பட்ட பின்னரே தாம் செல்ல வேண்டிய இடங்களுக்குப் போகலாம் என நிபந்தனையொன்றை 94 ஆரம்பத்தில் விதித்தது.

இந்த நிபந்தனைக்கிணங்க செஞ்சிலுவைச் சங்கமும் நக்ரோமா, கடல் நர்த்தகி, மற்றும் பிற அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் அமர்த்தப்பட்ட சரக்குக் கப்பல்கள் ஆகியவற்றை காங்கேசன்துறை கடற்படைத் துறைமுகத்தினுள் பாதுகாப்புச் சோதனைக்காக கொண்டு சென்று வரலாயிற்று.

இந்த விடயங்களெல்லாம் புலிகளுக்கும் அதிகார பூர்வமாக செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அறிவிக்கப்பட்டே நடைபெற்று வந்தன. புலிகளும் ஆட்சேபிக்கவில்லை.

இங்கு நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். மோதற் பிரதேசங்களில் செஞ்சிலுவைச் சங்கமானது வழமையாக மோதலில் ஈடுபட்ட (இயலுமானளவு) அனைத்துத் தரப்பினருடைய உடன்பாட்டுடனேயே தன் கடமைகளில் ஈடுபடும். அந்த வகையில் வடக்கில் இப்படியான பாதுகாப்பு வழங்கும் விடயங்களிலும் புலிகள், அரசு ஆகிய இரு தரப்பினருடனும் பேசி பொது உடன்பாடு கண்டே அது செயல்பட்டு வந்தது.

விஷயங்கள் இப்படியாக இருந்து வரும் வேளையில் பாதுகாப்புச் சோதனைக்காக காங்கேசன்துறை துறைமுகத்தினுள் நுழைந்த கடல் நர்த்தகி கடற்கண்ணி வெடியில் சிக்கி உடைந்தது. (இது வேறு வகையாக நடைபெற்றிருக்கலாம் எனவும் ஊகங்கள் கூறப்படுகின்றன.)

கடல் நர்த்தகி தகர்ந்ததையடுத்து செஞ்சிலுவைச் சங்கம் காங்கேசன்துறை துறைமுகத்தினுள் சோதனைக்காக செல்வதற்கான ஒரு பாதுகாப்பு உத்தரவாதத்தைக் கோரிற்று. ஆனால் புதிய இராணுவச் சூழ்நிலைகளின் கீழ் அவ்வாறான ஒரு உத்தரவாதத்தை வழங்க முடியாது என புலிகள் மறுத்துவிட்டனர்.

இது அரசு வடக்கின் மீது ஒரு பெரும் தாக்குதலை மேற்கொள்வதற்காகத் துரிதமாக படைகளையும், இராணுவத் தளபாடங்களையும் கடல் வழியாக பலாலியில், காங்கேசன்துறை துறைமுகத்தினூடாகக் கொண்டு போய்க் குவித்துக் கொண்டிருந்த கால கட்டமாகும். இந்நிலையில் பலாலித் தளத்தின் கடற்தொடர்பு மையமான காங்கேசன்துறை துறைமுகத்தினை இயங்கா நிலைக்கு கொண்டு வந்து விட்டால் இராணுவத்தின் பிரதான வழங்கல் கதவு மூடப்பட்டுவிடும். மூடப்பட்டால் உணவு, எரிபொருள் தளபாட தட்டுப்பாடு ஏற்பட்டு பெரும் படை நகர்வுகளை மேற்கொள்ள முடியாத ஒரு நிலை அரசிற்கு ஏற்பட்டு விடும் என்பது புலிகளின் திட்டம். இந்தப் பின்னணியில் தான் அவர்கள் செஞ்சிலுவைச் சங்கம் காங்கேசன்துறையினுள் செல்ல பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க முடியாது என மறுத்துவிட்டனர்.




இருதரப்பு உத்தரவாதமும் இல்லாமல் காங்கேசன்துறையினுள் கடற்படையினரின் பாதுகாப்புச் சோதனைக்காக தன் பாதுகாப்பின் கீழ் வரும் கப்பல்களை அனுமதிக்க முடியாதெனவும், இந்த சோதனை துறைமுகத்திற்கு வெளியே கடலில் வைத்து செய்யப்படுவதற்கே இந்தச் சூழ்நிலையில் தான் உடன்பட முடியுமெனவும் செஞ்சிலுவைச் சங்கம் அரசிற்குத் தெரிவித்து விட்டது. இத்துடன் நக்ரோமாவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பும் நிறுத்தப்பட்டது இதன் பின்னரே கற்பிட்டிக்கும் மன்னார் தீவிற்கும் இடையில் பிரயாணிகளை ஏற்றச் சென்று வந்து கொண்டிருந்த ஐரிஸ் மோனா தீவுப் பகுதிக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு இல்லாமல் பயணிகளை ஏற்றிச் செல்ல அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் அமர்த்தப்பட்டது. (ஐரிஸ் மோனா வல்வெட்டித்துறையை சேர்ந்த ஒருவரின் நிறுவனத்திற்குரியது எனக் கூறப்படுகிறது. பலாலிப் படைத் தளத்திற்கு தெற்குடனான கடல்வழித் தொடர்பை உறுதிப்படுத்தும் ஒரே வாயிலான காங்கேசன்துறை துறைமுகத்தின் மீது புலிகளின் கடும் அழுத்தம் தோன்றுவதற்கு செஞ்சிலுவைச் சங்கக் கப்பல்கள் அடிக்கடி உள்ளே வந்து செல்வது ஒரு தடையாக இருக்கும் என கடற்படையினரும் இராணுவமும் கருதினாற் போல் தெரிகிறது.

ஏனெனில் பாதுகாப்புச் சோதனை என்ற வகையில் செஞ்சிலுவைச் சங்கத்துடன் துறைமுகத்தினுள் கப்பல்கள் அடிக்கடி வரவேண்டுமானால் கடற்புலிகள் அங்கு கடற்கண்ணிகளை விதைப்பதோ அல்லது தாக்குதல்களை மேற்கொள்வதோ கடினம். செஞ்சிலுவைச் சங்கத்தினுடைய அல்லது அதன் பாதுகாப்பின் கீழ் வரும் கப்பல்கள் அடிக்கடி கடற்படைக்கு வைத்த கண்ணிகளில் அல்லது கடற்படை மீதான தாக்குதல்களில் அழிந்தால் சர்வதேச கண்டனம் புலிகள் மீது கடுமையாக இருக்கும். அதற்குப் பயந்து புலிகள் காங்கேசன்துறை துறைமுகத்தின் மீது அதிகமாகக் கைவைக்க மாட்டார்கள் என கருதியது இராணுவம்.

உதாரணமாக முன்னோக்கிய பாய்ச்சல் நடவடிக்கைக்கு ஏராளமான இராணுவத் தளபாடங்களையும் உணவையும் கொண்டு சென்றிருந்த எடித்தரா கப்பலானது கடல் நர்த்தகியின் காயம்பட்ட மாலுமிகளை பலாலியிலிருந்து கடல் வழியாகக் கொண்டு வர செஞ்சிலுவைச் சங்கம் சென்றிருந்த சந்தர்ப்பத்தையே காங்கேசன்துறை துறைமுகத்தினுள் நுழையப் பயன்படுத்திக் கொண்டது எனத் தெரியவருகிறது.

ஆனால் எடித்தராவிலிருந்து பொருட்கள் முழுமையாக இறக்கப்படுவதற்கு முன்னர் அதைப் புலிகள் தகர்த்தனர்.



டி.சி.

இதனால் புலிப்பாய்ச்சல் நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டிருந்த இராணுவத்திற்கு வழங்கற் சிக்கலும் தோன்றிற்று. பலாலிக்கு வழமையாக கடல்வழியாக அனுப்பப்பட்டதை விட கூடிய அளவு பொருள் அனுப்பி வைக்க வேண்டிய நெருக்கடி அரசிற்கு. இந்த நெருக்கடியின் போதுதான் செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பின் கீழ் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் சிவிலியன் சரக்குக் கப்பலான லங்கா முடித்த விலிருந்து கட்டாயமாக பொருட்களை கடற்படை இறக்க முற்பட்டது. (இரு வாகனங்கள் இறக்கப்பட்டன.) இதை கடுமையாக செஞ்சிலுவைச் சங்கம் ஆட்சேபித்து, தன் பாதுகாப்பை வாபஸ் பெற்றுக் கொண்டது. புலிகளுக்கும் தன் நிலையை அறிவித்தது. ஒன்று, தன் பாதுகாப்பின் கீழ்வரும் சரக்கு மற்றும் பிரயாணிகள் கப்பல்கள் கடற்படையின் நிபந்தனைகளுக்கு இணங்க காங்கேசன்துறை துறைமுகத்தினுள் வைத்தே சோதிக்கப்படுவதனால் புலிகளும், அரசும் திட்டவட்டமான பாதுகாப்பு உத்தரவாதம் தனக்கு வழங்க வேண்டுமெனவும்;

இரண்டு, அப்படி ஒரு உத்தரவாதத்தை வழங்க முடியாத நிலையில் தன்னுடையதும், தன் பாதுகாப்பின் கீழ்வரும் கப்பல்களும் துறைமுகத்திற்கு வெளியே கடலில் வைத்துப் பரிசோதிக்கப்படுவதற்கே தான் உடன்பட முடியம் எனவும் செஞ்சிலுவைச் சங்கம் அரசிற்கு தெரிவித்து விட்டது.

அத்துடன் முன்னோக்கிய பாய்ச்சலில் 'கைப்பற்றப்பட்ட' (!) பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு உணவு அனுப்பப் போவதாகவும், அதைக் கொண்டு போகும் கப்பல்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் பாதுகாப்பு வழங்கிட வேண்டும் எனவும் அரசு தெரிவித்ததையும் செஞ்சிலுவைச் சங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. அவ்வுணவு படைகளுக்கே பிரதானமாகப் போய்ச் சேரும் என்பதும் அது தன் விதிமுறைகளுக்கு முரணானது என்பதும் செஞ்சிலுவைச் சங்கத்திற்குத் தெரியும்.

இந்த நிலையில் தான் அரசும் இராணுவமும் அதனூடாக சிங்கள இனவாதப் பத்திரிகைகளும் செஞ்சிலுவைச் சங்கம் மீது கடுமையாகப் பாயத் தொடங்கின.

யாழ்ப்பாணத்திற்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பின் கீழ் செல்லும் கப்பல்களில் உள்ள உணவை புலிகளும் எடுத்துக் கொள்கிறார்கள் எனில் ஏன் பலாலியில் இராணுவம் அப்படிச் செய்ய முடியாது என்பது அவர்களின் எண்ணம் போலும்.

8 இலட்சம் மக்களுக்கு கொண்டு போகப்படும் உணவில் பத்தாயிரம் புலிகளுக்கு ஒரு பங்கு போவது தவிர்க்க முடியாதது; ஆனால் 25000 படையினர் மத்தியில் இரண்டாயிரத்திற்கும் குறைவான மக்கள் இருக்கும் போது அவ்விடம் போகும் உணவு யாருக்குப் பயன்படும் என்பது வெள்ளிடைமலை. இந்நிலையில் உணவுக் கப்பல்கள் வடக்குக்குச் செல்ல முடியாததால் அங்கு கடுமையான உணவு நெருக்கடி ஏற்பட்டது.

இராணுவத்தின் நெருக்கடியை சரியாக உணர்ந்து கொண்டதாலேயே அரசு, புளொட், ஈ.பி.டி.பி. ஆகியன வேண்டுகோள் விடுத்தும் கூட உணவு அனுப்பும் விடயத்தில் படைத்துறைத் தலைமையின் நிலைப்பாட்டை அரசு ஏற்றுக் கொண்டது என்பது தெரிகிறது.

காங்கேசன்துறை துறைமுகத்தினுள் செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பில் வரும் சரக்குக் கப்பல்கள் சோதிக்கப்பட வேண்டும் என்பதே இராணுவத்தின் நிலைப்பாடு.

கடைசியாக மேற்கு நாடுகளின் நெருக்கடியின் பேரில் தற்போது செஞ்சிலுவைச் சங்கத்தின் நிபந்தனைப்படி துறைமுகத்திற்கு வெளியே சோதனை என்பதற்கு அரசு ஒத்துக் கொண்டு, மீண்டும் குடாநாட்டிற்கு உணவு போகிறது. ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# STF பயங்கரம்!



"ஏரிகளில் மிதக்கும் மர்மச் சடலங்கள் பற்றி நாளை நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி விளக்குவார்" இது ஓகஸ்ட் 27ம் திகதியன்று சகல பத்திரிகைகளிலும் வெரியான ஒரு செய்தி. 28ம் திகதி ஜனாதிபதியின் தலைமையிலான விசேட பத்திரிகையாளர் மாநாடு நடத்தப்பட்டு அதில் சகல விபரங்களும் தெரியப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடக்கவில்லை. இறுதி நேரத்தில் ஜனாதிபதியின் பத்திரிகையாளர் மாநாடு ஒத்தி வைக்கப்பட்டது. வழமையாக வியாழக்கிழமைகளில் நடத்தப்படும் சம்பிரதாயபூர்வமான பத்திரிகையாளர் மாநாடு மட்டுமே நடந்தது.

பத்திரிகையாளர் மாநாட்டை ஜனாதிபதி தீடீர் என்று ஒத்தி வைப்பதற்கான காரணம்.என்ன? வழமையாக நடத்தப்படும் பத்திரிகையாளர் மாநாட்டிலாவது இக்கொலைச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட "அந்த முக்கிய அரசியல் புள்ளி"யைப் பற்றிய தகவலையாவது வெளியிட்டிருக்கலாம் அல்லவா? இந்தக் கேள்வி எல்லாப் பத்திரிகையாளர்களிடமும் இருந்தது! அமைச்சர் தர்மசிறி சேனாநாயக்க தலைமையில் நடந்த இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் இதுபற்றி கேட்ட போதும் அது பற்றி மழுப்பலான பதில்களே தரப்பட்டன. இதுபற்றி சரிநிகருக்கு கிடைத்த தகவல்களின் படி பல உண்மைகள் தெரிய வருவதோடு சில கேள்விகளையும் எழுப்ப வேண்டியுள்ளது.

### மர்மச் சடலங்களின் ஆரம்பம்

மர்மச் சடலங்கள் விவகாரம் 1987 - 1989 ஜே.வி.பி. வன்முறைக் காலப்பகுதியில் பிரபல்யமான சமாச்சாரமாக இருந்தது. இந்த அரசாங்கத்தின் கீழ் அது தொடராது என்றே பொதுவான எதிர்பார்ப்பாக இருந்து வந்தது. ஆனால் மே மாத இறுதியில் பொல்கொட ஏரியில் கண்டெடுக்கப்பட்ட சிதைக்கப்பட்ட சடலம் எல்லோரது கவனத்துக்கும் உள்ளானதுடன் பலர் அதிர்ச்சிக்கும் உள்ளானார்கள். மே, யூன், யூலை, ஓகஸ்ட் என தொடர்ச்சியாக பொல்கொட, களுகங்க, தியவண்ணா ஓயா, கெமில்டன் வாவி, மோதர கடற்கரை ஆகிய இடங்களில் இருந்து சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட போது மக்கள் பேரதிர்ச்சிக்குள்ளானார்கள். மொத்தம் இதுவரை 28 சடலங்கள் கிடைத்துள்ள்தாக பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன.

இதே காலப்பகுதியில் தான் ஆயுதப் படையினரால் தமிழ் இளைஞர்கள் பெருமளவு கைது செய்யப்படுதல், கடத்தப்படுதல், காணாமல் போதல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றன. அதேவேளை ஆறுகளில் கண்டெடுக்கப்படும் சடலங்களில் சிதைக்கப்பட்ட சடலங்கள் தமிழர்களது என்றும் அடையாளம் காணப்பட்ட சகல சிங்களப் பத்திரிகைகளும் கூட (திவயின உட்பட) அதை உறுதி செய்தன.

ஒரு பக்கம் தமிழ் இளைஞர்கள் காணாமல் போவதும், மறுபக்கம் தமிழர்கள் என அடையாளம் காணக்கூடிய வகையிலான சடலங்கள் கிடைத்துக் கொண்டிருப்பதையும் இச்சம்பவங்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்றும் பேசப்பட்டது. ஆனால் அரசாங்கத் தரப்பில் அதுபற்றி எந்த வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. காணாமல் போவது மற்றும் கடத்த முயற்சிக்கும் போது தப்பி, அதுபற்றி முறைப்பாடு செய்ய பொலிஸ் நிலையம் சென்றாலும் அங்கு பதியப்படாத முறைப்பாட்டாளர்கள் உதாசீனம் செய்யப்படும் நிலையே நிலவியது.

### திருப்பம்

இந்த சம்பவங்களின் தொடர்ச்சி பற்றி அரசு மௌனம் சாதித்தாலும் தென்னிலங்கையில் இயங்குகின்ற மனித உரிமைகள் அமைப்புகள் சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புகளின் கண்டனங்களை தொடர்ந்து ஜனாதிபதி இதுபற்றி விசாரிக்கக் கோரி ஆணையிட்டார். விசாரணைகள் ஆமை வேகத்தில் போய்க் கொண்டிருந்தன. சிதைக்கப்பட்ட சடலங்களைக் கொண்டு ஆணினதா, பெண்ணினதா என அடையாளம் காணவும், அவர்கள் கொலை செய்யப்படுவதற்கு முதல் சித்திரவதைப்படுத்தப்பட்டு, பட்டினி போடப்பட்டு, கழுத்து நெரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை கண்டு பிடித்து சொன்னதை விட வேறு புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. பத்திரிகைகள் தான் இச்சடலங்கள் தமிழர்களது என்பதை வெளிக் கொணர்ந்தன. அதன் பின்னர் தான் விசாரணை செய்தவர்களும் அதை ஒப்புக் கொண்டனர்.

இப்படியிருக்க இவ்விசாரணையில் திருப்பத்தை ஏற்படுத்தியது ஒரு மோதிரம். ஒரு பாதுகாப்பு படையினன் அணிந்திருந்த மோதிரத்தை காணாமல் போன தனது கணவனின் மோதிரம் என அடையாளம் காட்டினார் ஒரு பெண். இந்த விசாரணையோடு இச்கொடூர சம்பவங்களுக்கு பொறுப்பானவர்கள் பொலிஸ் அதிரடிப்படைப் பிரிவினர். (STF-Special Task Force) என்பது வெளியானது. கொழும்பு பௌத்தாலோக மாவத்தை (பழைய புல்லர்ஸ் வீதியில்) அமைந்துள்ள விசேட அதிரடிப்படையினரின் தலைமையகத்திலே கைது செய்யப்படுபவர்களை / கடத்தப்படுபவர்களை கொண்டு செல்லப்பட்டு சித்திரவதை செய்து கொன்றுள்ளனர் என்பதும் வெளியானது.

அதைத் தொடர்ந்து இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த (DMI -Directorate of Military Intelligence) 35 பேரும் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 6 பேரும் உட்பட கப்டன் முனாஸும் கைது செய்யப்பட்டனர். இளைஞர்களைக் கடத்துவதற்கென பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஐந்து ஜீப் வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. இவ்வாகனங்கள் வெலிக்கடை மற்றும் கறுவாக்காடு பொலிஸில் இருந்தும் கைப்பற்றப்பட்டன. இவ்வாகனங்களில் இருந்து 20 க்கும் மேற்பட்டவர்களில் கைவிரல் அடையாளங்களும் விசாரணைப் பிரிவினரால் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கடத்தப்பட்ட இளைஞர்களை சித்திரவதை செய்ததன் பின்னர் இஸ்ரேலில் இருந்து வருவிக்கப்பட்ட விஷவாயு ஒன்றை முகத்துக்கு அடித்து கொன்று போட்டிருக்கலாம் என புலனாய்வுப் பிரிவினர் சந்தேகிக்கின்றனர்.

### முனாஸ்

முனாஸ் என்றதுமே சரிநிகர் வாசகருக்கு அவரைப் பற்றிய பின்னணி தெரிந்து விடும். கிழக்கு மாகாணத்தில் அவர் புரிந்த அட்டூழியங்களுக்கு அளவேயில்லை. பல தமிழ் இளைஞர்களது படு கொலைகள் பல தமிழ் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் என்பவற்றிற்கு காரணமான மிகவும் கொடூரமான நபர் என்பதைப் பலர் அறிவர். கப்டன் முனாஸ் பற்றி பல சம்பவங்கள் சரிநிகரில் வெளிவந்திருக்கின்றன.

ஏரிச் சடலங்கள் பற்றி சம்பவத்தின் பின்னணியில் கப்டன் முனாஸ் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கண்டு பிடிப்பதற்கு முன்னரே சரிநிகர் வெளிப்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. 1990களில் மட்டக்களப்பு வந்தாறு மூலை பல்கலைக்கழக அகதி முகாம்களிலிருந்து ஆண், பெண், குழந்தைகள் உட்பட 185 பேர் கைது செய்யப்பட்டு பின் கொல்லப்பட்ட சம்பவத்துடன் இவரே தொடர்புள்ளவர் என்பதை பலர் அறிவர். அதுபோல் ஆள்கடத்தி பணம்

**என்.எஸ்.குமரன்**

பறிக்கும் நடவடிக்கைகள் பலவும் இவரால் நடத்தப்பட்டிருப்பதையும் பலர் அறிவர். இவா பற்றிய தகவல்களை கிழக்கு மாகாணத்திலுள்ள பலருக்கு தெரிந்திருக்கிற போதும் அவற்றை பகிரங்கமாக வெளியிட பத்திரிகைகள் கூட தயங்கியதற்கு பல காரணங்கள் இருந்தன. "அத்தனை அட்டூழியங்கள் செய்த காலத்திலேயே ரஞ்சன் விஜயரத்னாவினால் கப்டன் பதவி அவருக்கு கொடுக்கப்பட்டது. இனி அடுத்ததாக அவர் பிரிகேடியர் ஆகக்கூட ஆகக்கூடும். இவரைப் பற்றி நாங்கள் தகவல் கொடுத்துவிட்டு நிம்மதியாக வாழ்ந்து விடத்தான் முடியுமா?" என்ற பரவலான பயமே இந்த விடயங்கள் வெளியில் வராததற்கு பிரதான காரணங்கள் ஆகும். அவ்வளவு மேலிடச் செல்வாக்கு இருந்தது. அவருக்கு!

ஆற்றுச் சடலங்கள் சம்பவத்துடன் கப்டன் முனாஸ்தொடர்புற்றிருக்கிறார். விசேட அதிரடிப்படையினர் இதில் முழுமையான ஈடுபாடுள்ளனர் என்ற விபரங்களும் இப்போது வெளியாகி விட்டன. இப்போது எழுகின்ற கேள்வி என்னவென்றால், இவர்களால் இவை எதற்காக செய்யப்பட்டன? பரவலாக இருக்கும் கருத்துக்களில் முக்கியமாக பேசப்படுபவை இரண்டு விடயங்கள். ஒன்று; பணம்பறிப்பதற்காக திட்டமிட்டு செய்யப்பட்ட ஆட்கடத்தல் வேலை இது. இரண்டாவது; புதிய அர





சாங்கத்தை பலவீனப்படுத்தவதற்காக எதிர்கட்சியினரின் அல்லது இராணுவத்தரப்பிலுள்ள எதிர்கட்சியின் ஆதரவாளர்களால் நடத்தப்பட்டவை என்பனவே.

இதில் முதலாவது காரணமே ஆரம்பத்தில் வலுவாக இருந்தது. இப்போது இரண்டாவது காரணமே நிருபிக்கப்பட்டு வருகிறது. இதில் விசேட அதிரடிப்படை ஐ.தே.கவில் ஆட்சிக் காலப்பகுதியில் உருவாக்கப்பட்டது. ஒரு காலப்பகுதியில் ஜே.ஆர்.ஜெயவர்த்னாவின் மகன் ரவி ஜெயவர்த்தனா இப்பிரிவுக்கு பொறுப்பாகவும் இருந்தார். அத்துடன் பிரேசதாச காலத்தில் நடந்த பல படுகொலை சம்பவங்களுக்கும் இந்த விசேட அதிரடிப்படையினருக்கும் பங்குண்டு.

இன்று கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்று வரும் பொது மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கும் இப்பிரிவு பாரிய பங்காற்றி இருக்கிறது. இப்போது பகிரங்கப்படுத்தப்படாத ஒரு முக்கிய விடயம் இதனுடன் பேசப்படுகிறது. அதுதான் தற்போது அம்பலமாகி இருக்கும் விசேட அதிரடிப்படையினரின் அட்டூழயங்களுக்கும் தற்போதைய பிரதான எதிர்கட்சியின் முக்கியஸ்தரில் ஒருவருக்கும் சம்பந்தம் இருக்கிறது என்பதே அப்பேச்சாகும். மிஸ்டர் கிளீன் என அழைக்கப்படும் இவருக்கும் இச்சம்பவங்களும் இடையில் தொடர்பு இருப்பதாக பத்திரிகைகள் சூசகமாக தெரிவித்து வருகின்றன. ஏற்கனவே பத்திரிகையாளர்கள் றிச்சார்ட் டி சொய்சா கொலைச் சம்பவத்தோடு இதே முக்கியஸ்தரின் பெயரும் அடிபடுகிறது. இதேவேளை அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட "சபுகஸ்கந்த வதை முகாம்" ரணில் விக்கிரசிங்கவினால் பயன்படுத்தப்பட்ட அலுவலக கட்டிடத்தில் நடத்தப்பட்டது என்பது பற்றி சரிநிகரில் ஏற்கனவே வெளியிட்டும் இருந்தோம் என்பதும் இவ்விடயத்தில் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவால் கூட்டப்படவிருந்த பத்திரிகையாளர் மாநாடு ஒத்திவைக்கப்பட்டதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் வற்புறுத்தலும் பொலிஸ் மா அதிபர் ராஜகுருவின் ஆலோசனையுமே காரணம் என பேசப்படுகிறது. இதனால் ஜனாதிபதி கூறவிருந்த "முக்கிய அரசியல் புள்ளி" ரணில் விக்கிரம சிங்கவோ என்ற சந்தேகமும் பரவலாக அடிபட்டு வருகிறது.

இந்த வதந்திகளில் உண்மையிருந்து அவை அப்படி நிருபிக்கப்பட்டு வெளிக் கொணரப்பட்டால் நாட்டில் அரசியல் மாற்றத்திற்கு அது ஒரு முக்கிய காரணிகளாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுபற்றி சிங்களப் பத்திரிகைகளும் கிடைத்திருக்கும் சடலங்கள் தமிழர்களது தான் என ஆரம்பத்தில் ஒப்புக் கொள்ளாத போதும் தற்போது அவை ஒப்புக் கொண்டுள்ளன. இதை விட அண்மையில் பத்திரிகைக்கு பொலிஸ் அதிகாரி ஒருவர் வழங்கிய பேட்டியொன்றில் "கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் தமிழர்களது தான். இச்சம்பவங்களினால் நன்மையடையப் போவது தமிழர்கள்தான். இதைப் பயன்படுத்தியவர்கள் ஐரோப்பிய நாடுகளில் அகதிகள் அந்தஸ்து கோருவார்கள். வானத்தில் இருந்து மன்னா பொழிந்தது போல் (பழைய எகிப்தில் இருந்து யூதர்களை மீட்ட போது இறைவன் வானத்தில் இருந்து பொழிந்த உணவு) தமிழருக்கு இது ஒரு அரிய சந்தர்ப்பம்" எனக் கூறியிருக்கிறார்கள். "திவயின", "லங்காதீப" போன்ற சிங்களப் பத்திரிகைகளும் தமது ஆசிரிய தலையங்கம் மற்றும் கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை எவ்வாறிருப்பினும் இத்தனைக்கும் பின்னால் பல சந்தேகங்களும் கேள்விகளும் இருக்கின்றன.

இந்தத் திசையில் விசாரணைகளும், பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கும் போது கிடைத்த இன்னொரு தகவல் விசாரணைகள் சென்று கொண்டிருக்கிற திசைக்கு ஆப்பு வைக்கின்றன.

நடந்த- நடந்து கொண்டிருக்கின்ற இம் மர்ம கொலைகள் அனைத்தும் பிரதி பாதுகாப்பு அமைச்சின் கீழான விசேட ஆயுதப்படைக் கழு ஒன்றினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக இன்றுள்ள சூழ்நிலையில் பிரதிபாதுகாப்பு அமைச்சுடன் கேள்வியெழுப்ப பொ.ஐ.மு. அரசாங்கத்தின் அமைச்சர்கள் எவரும் தயாராக இல்லை. நாங்கள் கட்டுப்படுத்த முடியாதவர்களாக இருக்கிறோம் என்று பொ.ஐ.மு. அரசின் அமைச்சர் குறிப்பிட்டதாகவும் தெரியவருகிறது. இந்த எழுந்தமனமான கைதுகளை நியாயப்


→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முஸ்லிம் காங்கிரஸும் அதன் வரலாற்றுக் கடமையும்!



இலங்கை முஸ்லீம் மக்கள் குறிப்பாக வடகிழக்கு மாகாண முஸ்லீம் மக்கள் வரலாற்று திருப்புமுனையில் நிற்கிறார்கள். எதிர்வரும் நூற்றாண்டுகளில் அவர்களது எதிர்காலம் எப்படி அமையும் என்கிறது 21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முடிவாகி விட்டிருக்கும்.

எனினும் பரந்துபட்ட முஸ்லீம் மக்களது தலைவிதி நிர்ணயமாகிற வெகுஜனப் போராட்டங்களையோ, அரசியல், சமூக நடவடிக்கைகளையோ, புத்திஜீவிகளின் பங்களிப்புகளையோ முஸ்லீம் மக்கள் மத்தியில் காணமுடியவில்லை. அடிமட்ட தொண்டர்களை அடிப்படையாக கொண்டதும் அடிமட்ட மக்கள் அமைப்புகளின் முடிவுகளில் இருந்து அமைப்புரீதியாக மேல்மட்ட முடிவுகளை எடுக்கும் ஒரு அரசியல் சமூக இயக்கத்தை தானும் அவர்கள் மத்தியில் காணவில்லை. மாறாக பரந்து பட்ட மக்கள் மத்தியில் சில கிலு கிலுப்பைகளும் பலகாரங்களும் பகிரப்பட்டுள்ளது. அக்கறை உள்ள தலைவர்கள் கூட சரணாகதி மூலமோ, சூதாட்ட வெற்றி மூலமோ அல்லது ஒரு அற்புத நிகழ்ச்சி மூலமோ முஸ்லீம் மக்களது உரிமைகள் வென்றெடுக்கப்படும் என்று நம்புகிறவர்களைப் போல் காணப்படுகிறார்கள்.

இன்றைய காலகட்டத்தில் முஸ்லீம் மக்களுக்கு தேவை பிரபலமான முஸ்லீம் தலைவர்கள் மட்டுமல்ல தலைவர்களை தமது முடிவுகளின் மூலம் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தக் கூடியதும் அத்தகைய வெகுஜன நடவடிக்கைகளைக் கொண்டதுமான பரந்துபட்ட முஸ்லீம்களது -குறிப்பாக முஸ்லீம் இளைஞர்களதும் பெண்களதும் முதன்மைப் பங்களிப்பைக் கொண்ட கட்சிகளாகும். கட்சிகள் என்று குறிப்பிடுகிறபோது முஸ்லீம் மக்களது சிதறிய புவியியல் பரம்பலையும் தென்னிலங்கை -வடகிழக்கு மாகாணம் என இரு அரசியல் புவியியல் அலகுகள் நாட்டில் வளர்ச்சி பெற்றிருப்பதையும் நான் கருத்தில் கொள்கிறேன்.

பாராளுமன்ற அரசியலில் முஸ்லீம் மக்களது பெரும் பிரச்சினையாக இருந்த விடயம் முஸ்லீம் மக்களை அமைப்புரீதியாக ஒருங்கிணைப்பதாகும். ஏனைய இனங்கள் மத்தியில் முஸ்லீம் மக்கள் புவியியல் ரீதியாக இனதீவுகளாக சிதறப்பட்டுள்ளமையே இப்பிரச்சினையின் அடிப்படை யாகும்.

மேலும் தமிழ் பேசும் மக்களான இவர்களை பலகீனமாக்கும் மற்றொரு அம்சம் இவர்களுள் பெரும் பகுதியினர் (60%) சிங்களவர் பெரும்பான்மையாக உள்ள தென்னிலங்கையிலும் மிகுதி (40%) தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் வடகிழக்கு இலங்கையிலும் சிதறப்பட்டுள்ளமையாகும். தென் இலங்கை முஸ்லீம்கள் சிங்களம் பேசுகிறவர்களாகவும். வடகிழக்கு முஸ்லீம்கள் தமிழ் பேசுகிறவர்களாகவும் கலாசார ரீதியாக பிளவு பட்டிருந்திருப்பின் ஒருவேளை அவர்களுக்கு தம் தமது அரசியல் மூல உபாயங்களையும் தந்திரோபாயங்களையும் கண்டடைவது இலகுவாக இருந்திருக்கலாம்.

இலங்கைத் தமிழர்களுக்கும் ஒருசில ஒத்த பிரச்சினைகள் இருந்தது. முன்னர் புவியியல் ரீதியாக பலகீனப்பட்ட கொழும்புத் தமிழர்களே அரசியலில் முன்னணி வகுத்தனர்.

வடமாகாணத்திலும் புறநடைகளுடன் கிழக்கு மாகாணத்திலும் கிட்டிய புவியியல் பலம் தமிழர்களது அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் முக்கியமான அம்சமாகவும் அமைந்தது. 1949 களிலேயே முன்னணி தமிழர்கள் தலைமை துணிச்சலாக இலங்கை இரண்டு (மொழிவாரி) ப்வியியல் அலகுகளாக இருப்பதை அங்கீகரித்து அரசியல் செய்தனர். தமது அரசியலை வடகிழக்கு மாகாணங்களில் மையப்படுத்திய போது தென்னிலங்கை தமிழர்கள் கதி என்ன என்ற கேள்வி எழவே செய்தது. எனினும் வரலாறு வடகிழக்கில் தமிழர்கள் தமது அமைப்புகளையும் போராட்டங்களையும் மையப்படுத்தியதாலேயே சரணாகதி அரசியல் மன நோய்க்கு அவர்கள் பலியாகிவிடவில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. இதைவிட முக்கியமாக வடகிழக்கு இலங்கையில் இவர்கள் நடத்தி வருகிற போராட்டங்கள் மூலமே தென்னிலங்கை தமிழர்களது அரசியல் அந்தஸ்தும் பாதுகாக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கைத் தமிழர்கள் குறிப்பாக 1965களிலும் தமிழர் தலைமையை கையகப்படுத்தி சீர்குலைத்த போதும் தமிழர்கள் மீண்டும் தமது போராட்ட பாதையை 1970களில் செம்மை செய்து கொண்டனர்.

தென் இலங்கை தலைவர்கள் முஸ்லீம்களது புவியியல் பெலகீனங்களை மேவும் வகையில் மக்களை அணிதிரட்டி அமைப்புரீதியாக கட்சி கட்டவில்லை. இலகுவான சரணாகதி அரசியலே அவர்கள் தெரிவாயிற்று. ஓரளவேனும் புவியியல் பலம் கொண்ட வடகிழக்கு மாகாணத்து முஸ்லீம் மக்களது கட்சி ஒன்றுதான் வடகிழக்கு மாகாணத்து முஸ்லீம்களது உரிமைகளுக்கும் தென்மாகாண முஸ்லீம்களுக்கும் பாதுகாப்பாக நிமிரமுடியும். துரதிர்ஸ்டவசமாக இத்தகைய சிந்தனை உள்ளவர்கள் ஒருபுறம் உழைப்பு இல்லாதவர்களாகவும் மறுபுறம் சபலபுத்தியுடன் முதலில் தாம் நிராகரித்த சரணாகதி வாதத்தின் பால் இழுபடுகிறவர்களாகவும் மாறிவிடுகின்றனர்.

ஒருவிடயத்தை நாம் நிராகரித்து விட முடியாது. பாதகமான முஸ்லீம் விரோத தவறுகளுடனும் கூட, மலையகத் தமிழர்களதும் முஸ்லீம் மக்களதும் உரிமைகள் அரசியல் அந்தஸ்து பற்றிய விடயம் தொடர்ந்தும் உயிர்ப்புடன் இருப்பதற்கு தமிழர்களது போராட்டங்களே பெரிதும் உதவியிருக்கிறது. பெரும் தவறுகளுடனும் இன்றுவரை தமிழர்கள் பலமான இனத்துவ சக்தியாக இருப்பதற்கும் சரணகதியடையாமல் போராடுவதற்கும் அவர்களது முக்கியமான மூலோபாய தெரிவே காரணமாகும், என்றும் தமிழ் அரசியலின் பெலகீனம் சரியான தந்திரோபாயங்கள் தொடர்பானதாகும். நடைமுறையில் சரியான மூலோபாயத்தை கொண்டிருக்கிற ஒரு இனழ் தாக்குப் பிடிக்குமானால் பல்வேறு பெரும் தவறுகளையும் திருத்திக் கொண்டு முன் செல்ல முடியும் என்பதையே வரலாறு காட்டுகிறது. இதைவிட தமிரசுக் கட்சியின் ஆரம்ப காலத்திலிருந்தே (1949) பரந்துபட்ட தமிழர்களை -ஆண்களையும் பெண்களையும் அமைப்புரீதியாக அணிதிரட்டி வெளிப் பாராளுமன்ற நடவடிக்கைகளை மையப்படுத்தி தமிழர்கள் அரசியல் செய்தனர்.

தமிழர்களை தவிர்த்து தொழிற்சங்க மட்டத்திலேனும்மலையக தமிழர்களே வெளிப்பாராளுமன்ற போராட்ட அனுபவங்களை பலத்தை கொண்டிருக்கின்றனர்.

இன்று முஸ்லீம் மக்கள் தம்முன் உள்ள புவியியல் சிதறல், அடிமட்ட தொண்டர்களை அடிப்படையாக கொண்ட அமைப்புகள் இன்மை- 1980பதுகளின் பிற்பகுதியில் வடகிழக்கில் மையம் கொண்ட இஸ்ரவேல் எதிர்ப்பு நடவடிக்கைகள் புறநடையாக நீண்டகாலமாக வெளிப்பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு பரீட்சயமின்மை என்கிற சவால்களை எதிர்நோக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

1985-1990களில் இடம் பெற்ற தமிழ் முஸ்லீம் விரோதத்துக்கு வழிவகுத்த பெருந்தவறுகளுக்கு தமிழர் தலைமைகளே பெரிதும் பொறுப்பெடுக்க வேண்டும். எனினும் விமர்சனத்துக்குள்ளக்கப்பட வேண்டிய தவறுகள் கிழக்கு மாகாண முஸ்லீம்களது வரலாற்றிலும் உள்ளது. இத்தகைய ஒரு விமர்சனம் எதிர்காலத்தை வென்றெடுக்கும் மூல உபாயத்தை கண்டறிவதற்காக முஸ்லீம் மக்கள் மத்தியிலும் இடம் பெறுவது அவசியம். அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் நாலாம் காலனியச் சம்பவங்களை கூட இங்கு நினைவு கூரலாம்.

எப்பொழுதும் முஸ்லீம் மக்களது தவறுகள் மூலோபாயமற்று தந்திரோபாயங்களை மட்டுமே முதன்மைப்படுத்துவது தொடர்பானதாகும்.

1980களில் நம்பிக்கை தருகிற ஒரு முஸ்லீம் இயக்கம் கல்முனை பகுதிகளில் மையம் கொண்டது. கல்முனையில் முஸ்லீம் மக்கள் தமிழ் பேசும் மக்கள் மட்டத்தில் ஏற்கனவே கலாசார கலை இலக்கிய விழிப்புணர்ச்சி மையப்பட்டிருந்தது. 1970பதுகளில் திரு பத்திதியூன் முகமது அவர்களது வரலாற்று பங்களிப்பான முஸ்லீம் கல்வி பரம்பலால் அளவில் முஸ்லீம் மக்கள் மத்தியில் பரந்துபட்ட எழுச்சி நிலை காணப்பட்டது. இயல்பாகவே முஸ்லீம் மக்கள் அதிக விகிதாசாரத்தில் வாழ்கிற அம்பாறை மாவட்டத்தின் வடக்கு கரையோரங்களில் குறிப்பாக கல்முனை பகுதியில் இத்தகைய எழுச்சிப் போக்கு வேரூன்றியது. இந்த எழுச்சியின் பிரதிநிதியாக திரு அஸ்ரப் அவர்கள் முன்னிலைப்பட்டார். 80பதுகளில் அம்பாறை மாவட்டத்தில் மேம்பட்ட முஸ்லீம் கலை இலக்கியகாரர்களதும் இளம் கல்விமான்களதும் அசல்பிரதிநிதி அவரே.

**வ.ஐ.ச.ஜெயபாலன்**

அவருடைய சமூக அக்கறை இயல்பானதாகவும் உண்மையானதாகவும் இருந்தது. எனினும் அவரிடம் முஸ்லீம் மக்களது சமூக பொருளாதார அரசியல் இருப்பு, மற்றும் வரலாற்று அனுபவங்களை அடியொற்றி வளர்த்தெடுத்த மூல உபாயம் இருக்கவில்லை.

ஆரம்பகாலத்தில் அவர் முஸ்லீம் தலைமைகளின் சரணாகதி போக்கை நிராகரித்து வடகிழக்கு முஸ்லீம் மக்களது தலைமைத்துவத்தை கட்டி எழுப்புவது என்ற சரியான ஒரு அணுகுமுறையை கொண்டிருந்தார். எனினும் பரந்துபட்ட மக்களை அணிதிரட்டுகிறதற்கு அவர் முன்வரவில்லை. அடிமட்ட தொண்டர்கள், முழுநேர ஊழியர்களை அடிப்படையாக கொண்டதும் கீழிருந்து மேல் நோக்கி தீர்மானங்களை கொண்டு செல்கிறதும், வெளி பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு தயாரானதுமான ஒரு கட்சியாக முஸ்லீம் காங்கிரசை கட்டி எழுப்புகின்ற முனைப்பும் உழைப்பும் அவரிடம் இருக்கவில்லை.

திரு அஸ்ரப் அவர்கள் முஸ்லீம் காங்கிரசுக்குள் சம பங்காளிகளாக வடகிழக்கு முஸ்லீம் மக்களை அமைப்புரீதியாக கொண்டு வருவதற்குப் பதிலாக முஸ்லீம் காங்கிரஸ் தலைமையை முஸ்லீம் மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று அங்கீகாரம் பெறுவதையே தனது கட்சியை கட்டி எழுப்பும் மூல உபாயமாக கொண்டிருந்தார். இத்தகைய ஒரு அணுகுமுறை, மூல உபாய தந்திரோபாய சிந்தாந்த விவாதங்களில் கடிவாளம் இடப்படாததும், அமைப்புரீதியாக பலப்பட்ட கட்சியினால் செலுத்தப்படாததுமான நிலையில் போர்க்களத்துள் நுளைக்க ஒரு அரசியல் தேரைப் போல முஸ்லீம் காங்கிரஸை ஆரம்பித்ததில் போய் முடிவுற்றது.

ஒருபுறம் தென்னிலங்கை முஸ்லீம் மக்களை மீளாத சராணாகதிக்குள்ளாக்கியும், வடகிழக்கு இலங்கை முஸ்லீம் தலைவர்களை அரசியல் சூதாடிகளாக்கி அவர்களது நிலநீர் இயற்கை வளங்களை கபளீகாரம் செய்ததுமான சிங்கள பௌத்த பேரினவாத அரசும்

மறுபுறம் இந்த அளவுக்காவது முஸ்லீம்களுக்கும் சேர்த்து வடகிழக்கு மாகாணத்தை பாதுகாத்திருக்கிற ஆனால் முஸ்லீம் மக்களை கிள்ளுக்கீரைகளாக பார்க்கிற குறுந்தேசியவாத நோய்ப்பட்ட தமிழர்கள் தலைமையும் மோதுகிற போர்க்களமான வடகிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் காங்கிரஸ் என்கிற தோர் அடிக்கடி திசைகளை மாற்றி சீரழிந்த வரலாற்றின் பின்னணி இதுதான். தமிழர்கள் தவறுகளுக்கு எதிராக போராடுவது ஒன்று. தமிழர்களை முஸ்லீம் மக்களை ஏன் முழு வடகிழக்கு மாகாணத்து நில நீர் இயற்கை வளங்களை ஆக்கிரமிக்கிற பேரின வாதத்துடன் சமரசம் செய்கிறது மற்றொன்று. இது நீண்டகால அடிப்படையில் வடகிழக்கு முஸ்லீம் மக்களுக்கும் எதிரான ஒரு செயலாகும். ஜனாப் எம்.எஸ்.காரியப்பர் அவர்களது காலத்திலிருந்து இத்தகைய போக்குக்ள் கிழக்கு மாகாணத்து முஸ்லிம் மக்களை கடலுக்குள் தள்ளிவிடுகிற செயலாகவே அமைந்தது.

வடகிழக்கு மாகாணத்து முஸ்லீம்களது அமைப்புரீதியான தலைமையாக முஸ்லீம் காங்கிரசை கட்டி எழுப்பி, தென் இலங்கையின் முஸ்லீம் அரசியலில் சபலப்படாமல் தம்முள் முரண்படுகிற தென்னிலங்கை முஸ்லீம் தலைமைகளை முஸ்லீம் மக்களது பொதுப்பிரச்சினைகளில் ஒருங்கிணைக்க கூடிய வல்லமையுள்ள ஒரு சக்தியாக அதை வளர்ந்திருக்கக் கூடிய ஒரு வாய்ப்பு 1980பதுகளில் திரு அஸ்ரப் அவர்களுக்கு இருந்தது. இயல்பாகவே முஸ்லீம் மக்களது நலன்களையும் உள்ளடக்கிய வடகிழக்கு மாகாணத்தின் ஆட்சி அதிகாரத்துக்காக போராடும் தமிழர் தலைமைகளை பலகீனப்படுத்தாமலும் அதே சமயம் தமிழர் தலைமையின் முஸ்லீம் ளக்களை கிள்ளுக்கீரைகளாக பார்க்கிய மேலினவாதப் போக்குகளுக்கு பணிந்து போகாமலும் பேரினவாத ஆக்கிரமிப்பு அரசுகளிடம் சரணாகதியடையாமலும் பாராளுமன்றத்தின் உள்ளும் வெளியும் பலமாக உயிர்த்திருக்கிற ஒரு முஸ்லீம் கட்சியை கட்டி எழுப்பக்கூடிய ஒரு வாய்ப்பு 1980களில் திரு அஸ்ரப் அவர்களுக்கு கிட்டியிருந்தது.

கடந்த காலங்களில் வடகிழக்கு மாகாணத்தில் பெருமளவில் இடம்பெற்ற தமிழர்களது தலைமைகளின் முஸ்லீம விரோத நடவடிக்கைகளும் சிறு அளவிலேனும் இடம் பெற்ற முஸ்லீம் அமைப்புகளின் தமிழர் விரோத நடவடிக்கைகளும் இனம் காணப்பட்டு விமர்சனங்களுக்குள்ளாக்கப்பட வேண்டும். இது தமிழர் முஸ்லீம் கலைஞர்களதும் புத்திஜீவிகளதும் அரசியல் அமைப்புகளதும் உடனடிக் கடமையாகும். இவ்விடயம் தொடர்பாக தமிழர் மத்தியில் ஓரளவு விமர்சனங்கள் வளர்ச்சியடைந்து வருவது ஆரோக்கியமானதாகும்.

விமர்சனம் சுயவிமர்சனம் அடிப்படையில் தவறுகள் திருத்தப்பட்டு அத்தகைய தவறுகள் இனிமேலும் ஏற்பட இயலாத வகையில் அமைப்பு ரீதியான அபிவிருத்திகளை இருதரப்பு தலைமைகளும் ஏற்படுத்த வேண்டும்.

தமிழர் தலைமை தவறுகளை ஒத்துக் கொள்வதுடன் திருத்துவதில் ஆர்வம் இருப்பதாகவும் கூறியுள்ள போதும் வருந்ததக்க விதத்தில் வருடக்கணக்காக செயலளவில் முன்னேற்றம் எதுவும் காணப்படாதது விரக்தி தருகிறது. கிழக்கு மாகாணத்தில் இன அமைதி நிலவுகிற போதும், தனி இனத்தவரான முஸ்லீம் மக்களுடானான பிரச்சினைகளை அவர்களது அரசியல் கலாசார தலைமை அமைப்புகளூடாகவும் பள்ளிவாசல்கள் ஊடாகவும் அணுகித் தீர்ப்பதற்கு பதிலாக போராளிகள் தமிழர்களை அணுகும் பாணியில் தனிமனித அடிப்படையில் அணுகுவதாக கிடைக்கிற சேதிகள் கவலைதருகிறது. இது உடனடியாக திருத்தப்பட வேண்டும்.

முஸ்லீம் காங்கிரஸ் தலைமையும வடமாகாண முஸ்லீம்களின் உரிமைக்கான அமைப்பின் தலைமையும் இணைந்து அரசுடனும் தமிழ் போராளிகள் தலைமையுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஒரு கூட்டு செயற்குழுவை அமைத்திடல் வேண்டும் என்றும் இச்செயல் குழுவை முஸ்லீம் மக்களது தலைமையாக தமிழ்த் தலைமை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். இக்குழு முஸ்லீம் மக்களது பாதுகாப்பு மீள்குடியேற்றம் புனர்வாழ்வு, அரசியல் பிரதேச அலகுகளும் உரிமைகள் என்பவற்றோடு யுத்த நிறுத்தம், சமாதான பேச்சுவார்த்தைகளின் மீழாரம்பம் என்பவற்றுக்காகவும் போராட வேண்டும். இத்தகைய போராட்டங்கள் முஸ்லீம் மக்களது பங்குபற்றலை பேச்சுவார்த்தைகளில் உறுதிப்படுத்தவும் உதவும்.

முஸ்லீம் காங்கிரஸ் தமிழ் போராளிகள் தலைமையில் அச்சுறுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இது வதந்தி என்றே கருத விரும்புகிறேன். இது உண்மையானால் மிகவும் பாரதூரமான ஒரு வரலாற்று தவறாகும். இன்று முஸ்லீம் காங்கிரஸினை அச்சுறுத்துகிற தமிழர் தலைமைகள் ஒரு விடயத்தை ஞாபகப்படுத்தி பார்க்க வேண்டும். தமிழர் தலைமை, முஸ்லீம் மக்கள் தொடர்பான சரியான ஒரு நிலைப்பாட்டை எடுத்திருப்பின் இன்று தமிழர்களது ஒரு பலமான தோழமை அமைப்பாக முஸ்லீம் காங்கிரஸ் வளர்ச்சி பெற்றிருக்கும். வடகிழக்கு மாகாணங்களின் ஒருங்கிணைந்த நலன்களுக்கான ஒரு பலமான குரலாக திரு அஸ்ரப் அவர்களது குரல் ஓங்கி ஒலித்திருக்கும்.

வடகிழக்கு மாகாணத்தில் 1980பதுகளில் நிலவிய சூழலை மீழமைக்கிற பணி தமிழர் முஸ்லீம்கள் தலைமைகளுக்குண்டு. இணைந்த வடகிழக்கு மாகாணத்தினுள்ளோ வெளியிலோ முஸ்லீம் மக்கள் தங்களது

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**உணர்வு அலைகள் நம்மை மூழ்கடிக்கும் சிறப்பான நாவல்**

தேவகாந்தனின் ''விதி''
வெளியீடு: வேர்கள் இலக்கிய இயக்கத்துக்காக
தேவிபிரசுராயம் 2,
நேண்மா
சென்னை 94




விதி நாவல் படித்து முடித்தேன். அதாவது சாந்தாராம் படிக்க, கேட்டேன். சிலசமயம் கண்ணீர்விட்டேன். நாவலில் சிறுபுயல்போல சோகம் குடிகொண்டிருக்கிறது. தமிழ் வாசகர்கள் மத்தியில் இந்த நாவல் பெரும் வரவேற்பைப்பெறும் என்பதில் ஐயமில்லை. இப்படிச் சொல்வதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, இலங்கைத் தமிழர் அவர்களின் வரலாறு, வாழ்க்கைத் தொல்லைகள், விடுதலை ஆர்வம் ஆகியவற்றைக் கொண்டதாக இந்த நாவல இருக்கின்றது. இரண்டாவது, நாவலின் மையமாக இருக்கும் அச்சின் இரு முனையில் கதிர்வேலும் தெய்வியும் சுழல்கிறார்கள். இவர்களின் காதல், குடும்பவாழ்க்கை, வாழ்வின் ஆதாரம் தேடி கதிர்வேல் படும் தொல்லைகள், தெய்வி என்ற மையத்தில் கதிர்வேலுவின் சுழற்சி, கடைசியாக தெய்வியின் சாவு.

இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்க்கைபற்றியும் போராட்டம் பற்றியும் இந்த நாவலில் அங்கங்கே காணப்படும் விவரங்கள் இலங்கைத் தமிழர்பற்றி மேலும் அறிந்துகொள்வதற்கான ஆவலை வாசகர்களிடத்தில் தூண்டும். மலைப்பிரதேசத்தில் வாழ்ந்த கதிர்வேலு தன் மனைவியோடு கிளிநொச்சிக்கு வருகிறான். பிறகு காந்திகுடியேற்றம். அப்புறம் மன்னார் பயணம். இந்த ஊர்களின் வழியே தெய்வி/கதிர்வேலின் காதலும் திருமணமும் வாழ்க்கையும் பெரிதும் சொல்லப்படுகின்றன. மனைவியைப் பிரிந்து தமிழகத்தில் வருமானத்திற்காக கதிர்வேலு அலைகிறான். இவனது உள்ளத்தில் ஆழப்பதிந்திருக்கிறது நேர்மை/நீதி என்னும் வேர். இந்த வேரைப் பிடுங்கி எறிய இவனால் இயலவில்லை. இதன் காரணமாகவே இவனது துயரங்கள். நீதி உணர்வைக் கைவிடாததன் காரணமாக கதிர்வேலு அனுபவிக்கும் துயரங்கள் இந்த நாவலில் மிகச்சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. நீதி உணர்வை மையப்படுத்திய இத்தகைய ஒரு மனிதன் பற்றிய சிததிரிப்பு அநேகமாக தமிழ் நாவலில் அரிது என்றே சொல்ல முடியும். அகிலனும் நா.பா.வும் இத்தகைய மனிதர்பற்றி ரொமாண்டிக்தனமாக நிறைய சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த நாவல் நீதியிலிருந்து பிறழாமல் நிறைய துன்பத்திற்குள்ளாகும் இந்த மனிதனை யதார்த்தபூர்வமாகச் சித்திரிக்கப்பகிறது. நீதியிலிருந்து வழுவுகிற ஒவ்வொரு முறையும் இவன் சோகத்தில் ஆழ்கிறான். இந்தச் சோகம் இவனை இறுதியில் செயலற்றவனாக்கி விடுகிறது. இனிமேல் இவன் சாமியராகிவிடுவானோ என்று வாசகன் கவலைப்படுமளவுக்கு இவன் சோகத்தில் ஆழ்கிறான். பெரிய ஒரு நீர்த்தேகத்தில் விழுந்த ஒருவன் தொடர்ந்து ஆழத்தில் மூச்சுத் திணற அமிழ்வது போன்ற நெஞ்சக் கனதி வாசகனுக்குள் ஏற்படுகிறது. இது பொல்லாத சோகம் தான்.

தெய்வி என்ற அந்தப் பெண்பிறவிக்காக இந்த நாவல் என்றும் எனக்குள் தங்கியிருக்கும். தெய்வி அபூர்வப் பிறவி. தான் வாழ்ந்த மண்ணைவிட்டு ஒருவரால் பிரிய முடியாது என்பது உண்மைதான். தேசத்தைவிட்டுப் பிரிந்து வாழ்கிற உண்மையும் கொடியது தான். இறந்த குழந்தை கனவுகளில் தன் தாயைச்சுற்றிச் சுற்றி வருகிறான். அவன் இன்றும் இங்கேயேதான் இருக்கிறான். ஆகவே இந்த மண்ணைவிட்டு தன்னால் செல்ல முடியவில்லை. இப்படி அந்தத் தாய் உணர்கிறாள். கணவனைக் காட்டிலும் ஒரு தாயை ஆள்வது அவளது குழந்தைகள்தான். இவள் உணர்வை கற்பனையென்று வாசகனால் ஒதுக்க முடியாது. இப்படி ஒவ்வொன்றாக ஒதுக்கினால் மனித வாழ்க்கை வறண்டதசை வாழ்க்கையாகிவிடும் தமிழ் நாவலில் இந்தச் சித்திரிப்பு ஒரு அற்புதம்.
தெய்வியை திருச்சிக்கு இழுத்துவர கதில்வேலு கடிதம் எழுதுகிறான். ஆணுக்குள் வழக்கமாகத் திமிர்கிற உணர்வுதான் இது. எந்த இடத்தில் ஓங்கி அடித்தால் அடிபட்டவர் தன் ஆளுமை சிதைந்து அடித்தவரின் காலடியில் விழுந்து கதறுவாளோ அத்தகைய அடியை தெய்விக்கு தருகிறான் கதிர்வேலு. கதிர்வேலு கொடுமைக்காரனா? இல்லை. அவன் மீது தொடர்ந்து விழுந்த அடிகள் அவனை இப்படி ஒரு சிறு புள்ளியில் குவிந்த மனிதனாக்கி விடுகிறது. தெய்வி ஓடி வருகிறாள். இன்னொரு இரவில் இதேபோல் இன்னொரு மரண அடி. மருத்துவமனையில் நிகழ்வது அவளுக்கு இரண்டாவது சாவு. முதற்சாவின் விளைவு. இலங்கைச் சூழலில் தமிழ்ப் பெண்ணின் அவலத்தை முழு அளவில் இந்த நாவல் சித்திரிக்கிறது. எல்லாவற்றையும் மறைத்து தன் காதலையே முன்னிலைப்படுத்தி வாழத்தான் விரும்புகிறான் கதிர்வேலு. வாழ்க்கைச் சூழல் அவனைக் கொடுமைக்குள்ளாக்குகிறபோது அவன் தனக்குள் சிறுத்துப்போய் தன் அன்புக்குரிய காதலியையே அடித்துக் கொல்கிறான். மருத்துவ மனையில் இருந்து தன்னைவிட்டே ஓடுகிறமாதிரி ஓடுகிறான். கதிர்வேலு வேறு என்ன செய்வான்? சிறுகுழந்தை என்றால் ஒரு துணியில் சுற்றி சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்று முடிந்தால் தானேகூட ஒரு குழி வெட்டிப்புதைத்து வர முடியும். தெய்வியை அவன் என்ன செய்ய முடியும்? இம்மாதிரி ஒரு சோகம் தமிழ் நாவலில் முன்பு சொல்லப்படவில்லை.

நாவலில் வரும் பல மனிதர்கள், அன்னம், மாணிக்கம், சாமிநாதன் இவர்கள் எல்லோரும் நல்லவர்கள். வில்லன்கள் போன்று தோன்றும் சிலரும் மையத்தில் இல்லை. விலகிப் போய்விடுகிறார்கள்.


சூழல்தான் இங்கு வில்லன் ஆகிறது. அதாவது இறுதியில் சொல்லப்படும் விதி இங்கு வில்லன் ஆகிறது. பொருளியல் சூழலின் விதி இது. இப்படி விதிக்கும் பொருள் சொல்லப்படுகிறது. நாவலில் பொருளியல் சூழல் பற்றிய சித்திரிப்புக்களைக் காட்டியலும் மனித அவலம் அதிக அளவில் சொல்லப்படுகிறது. நாவல் மனிதனைப் பற்றியது தான். இலங்கையில் இனக் கலவரச் சூழலைச் சித்திரிக்கும் நோக்கில் சிலர் நாவல் எழுதுகிறார்கள். கலவரச் சூழலைப்பற்றிய சித்திரிப்பே முதன்மை நோக்கமாக மற்றவர் கொள்வது போல தேவகாந்தன் கொள்ளவில்லை. மனிதர்களுக்கு முதன்மையும் மனிதர் வாழ்வுக்கான களம் என்ற முறையில் சூழலையும் அவர் சித்திரிக்கிறார். படைப்பாளியின் நோக்கத்திற்கு ஒத்த முறையில் முதன்மைகள் வேறுபடுகின்றன. ஆனால் மனிதர்களுக்கு முதன்மை தருவதுதான் நாவல். அனதை தேவகாந்தன் சரியாகவே செய்திருக்கிறார்.

இதுவரை எழுதியதிலிருந்து சற்று வேறுபட்ட முறையில் ஓடுகின்ற என் சிந்தனையை இப்பொழுது சொல்லுகிறேன். நாவலில் கதிர் வேலுதான் மையம். இதற்கு அடுத்தபடி தெய்வி. கதிர்வேலுவைக் காட்டிலும் தெய்வி பற்றிய சித்திரிப்பு கொஞ்சம் குறைவு தான். மற்ற மனிதர்கள் பெரும்பாலும் நாவலின் மையத்தில் இல்லை. பெரும்பாலான அத்தியாயங்களில் கதிர்வேலு தான் நடமாடுகிறான். கதிர்வேலுவுடன் நாவலுக்குள் ஓயாமல் பயணம் செய்வது வாசகனுக்கு அலுப்பு தரும். சட்டென கதிர்வேலுவைவிட்டு தெய்வியோடு நாம் இருக்கிறமாதிரி இரண்டு அத்தியாயங்கள் மட்டும் வருகின்றன. இது போதாது இது மட்டுமல்ல. நாவலில் இந்த இரண்டு மனிதர்களுக்கு மட்டும்தான் உயிரியக்கம் தரப்படுகிறது. இவர்களை விட்டு கொஞ்சம் தொலைவில்தான் மாணிக்கம், சந்தனம், சாமிநாதன் தெரிகிறார்கள். இவர்களை முதன்மைப்படுத்தி அங்கங்கே சில அத்தியாயங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும். தி. ஜான கிராமனை இங்கு நின்னத்துக் கொள்கிறேன். தி. ஜானகிராமன் நாவலில் இடம் பெறும் ஒவ்வொரு பாத்திரத்திற்கும் அதற்கான வாழ்க்கை தரப்பட்டிருக்கும் ஒவ்வொரு மனிதர்க்கும் வாழ்வுரிமையை தி.ஜா. அங்கீகரித்து எழுதுவதாகத் தெரிகிறது. துணைப்பாத்திரங்களென யாரையும் ஓரத்திற்கு ஒதுக்க வேண்டியதில்லை. நாவலில் ஒரு மையம் போதாது. மையம் சிதறி பல மையங்கள் உருவாக வேண்டும். எல் லோரையுமே சூழல் என்ற விதிதான் ஆக்குகிறது அழிக்கிறது. இப்படி பலரை முதன்மைப்படுத்தி நாவல் எழுதினால் நாவலின் ஆளுமை சிறக்கும். சரியாகச் சொன்னால் இப்படி எழுதினால்தான் அது நாவல்.

தேவகாந்தனின் நாவலில் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கள் சோகங்கள் மிக அதிகம் இலங்கைத் தமிழரின் சோகம் சொல்ல இப்படித்தான் எழுதவேண்டும். இப்படி நான் கருதுகிறபோதே இது கூடாது என்ற எண்ணமும் எனக்குள் எழுகிறது. நாவலின் உணர்ச்சித் தனத்தைக் காட்டிலும் அறிவுத்தளம் ஆழ்ந்ததாக இருக்கவேண்டும். டால்ஸ்டாயைப் படிக்கிறபோது உணர்வு அலைகளில் நாம் தடுமாறுவோம். அதைக் காட்டிலும் அதிகம் அவரது அறிவாண்மை. உணர்வு அலைகளில் டால்ஸ்பிய் நம்மை மூழ்கடிப்பதில்லை. தேவகாந்தன் மூழ்கடிக்கிறார். இலங்கைத் தமிழரின் சோகம் கற்க இம்மாதிரி நாவல் தேவைதான். ஏற்கிறேன், ஆனால் இது போதாது. இன்னும் விரிந்த தளங்களில்/களங்களில் மனிதர்களை வைத்துச் சொல்லவேண்டும். இந்த நாவலை மிகச் சிறப்பாகவே செய்திருக்கிறார் தேவகாந்தன். அங்கங்கே ஆற்றலைப் பெரிதும் இரசிக்கிறேன்.

**கோவை ஞானி**

# வரவு.... வரவு.... வரவு.....




### மோகவாசல்

- ரஞ்ச குமார்

ஏற்கனவே வெளியான சிறுகதைத் தொகுதி மீண்டும் பேரா.கா. சிவத்தம்பியின் பின்னுரையுடன் இவ்வமையத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. ரஞ்சகுமாரின் சிறப்புச் சிறுகதைகளான கோசலை கோளாறு பதிகம் ஆகியன இத்தொப்பில் அடங்கும். இலங்கையின் சிறந்த சிறுகதை ஆசிரியராக ரஞ்சகுமாரை நிரூபித்த தொகுதி இது.




### பாம்பு நரம்பு மனிதன்

- சோலைக்கிளி

இன்றைய தலைமுறையில் சிறப்பிடம் பெற்ற கவிஞரான சோலைக்கிளியின் கவிதைத் தொகுப்பு இது. சோலைக்கிளியின் கவிதைகள் தமிழ்க் கவிதையுலகிற்கு புதிய பரிமாணத்தை ஏற்படுத்துவன. சேரன். ஜெயபாலன், சிவசேகரம். இ. விஜயேந்திரன் சு.விஸ்வரத்தினம் போன் ஜோர் கவிதையில் வேறுவடிவங்களைக் காட்டுவார்கள். எனினும் சோலைக்கிளி காட்டும் வடிவம் மிக வேறுபட்டது. இத்தொகுப்பும் அதனை நிரூபிக்கிறது.




### ஏகலைவ பூமி

- சி. சிவ சேகரம்


சிவசேகரத்தின் ஐந்தாவது கவிதைத் தொகுதி இது தனக்கென ஒரு சிறப்பான வடிவத்தைக்கையாண்டு கவிதை படைப்பதில் வல்லவர் சிவசேகரம். இத்தொகுப்பும் ஏமாற்ற மளிக்காத கவிதைகளைக் கொண்டன. இத்தொகுப்புக்குச் சிறப்புச் சேர்ப்பதற்காக கவிதை பற்றியும் கவிதைகள் பற்றியும் எனும் ஒரு கட்டுரையையும் சிவசேகரம் எழுதி உள்ளார்



### ஒளி பரவுகிறது

- திக்குவல்லைக் கமால்

புதிய அனுபவம தரும் நாவல் என்கின்றார் பேரா. நந்தி அவர்கள். தென்னிலங்கை முஸ்லீம் மக்களின் பண்பாடு இந்நாவலில் விரவிக் காணப்படுகின்றது. தொலைக்காட்சியில் தொடர் நாடகமாக இதனைப் பயன்படுத்தலாம் எனவும் நந்தி குறிப்பிடுகின்றார் அட்டையை இன்னும் சிறப்பாக அமைத்திருக்கலாம்.



### சின்னச் சின்னக் கதைகள்

- கதை சொல்பவர் மாவை நித்தியானந்தன்
- ஓவியர் மருது

காலம் காலமாக உலகெங்கும் சொல்லப்பட்டு வரும் இக்கதைகள் தமிழ்ப் பிள்ளைகளுக்காக இலகு தமிழில் மீண்டும் சொல்லப்படுகின்றது எனக்குறிப்பிட்டுள்ளனர் மிகச் சிறப்பான முயற்சியாக இந்நூல் அமைகின்றது. கதை சொல்வதில் எளிமையும் இனிமையும் காணப்படுகின்றது. மொழி நடையும் ஓரளவுக்குப் பேச்சு நடையில் அமைந்துள்ளது. அதுவும் சிறப்பானது. மிகச்சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தது மருதுவின் அற்புதமான ஓவியங்களே. பயன்மிக்க நூல் இது. அவுஸ்திரேலியாவில் உள்ள பாரதி பள்ளியும் சேர்ந்து இந் நூலை வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எம்முடைய தாயகமும் வடக்கே - 2

எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ்

வடக்கில் மாகாண மட்டத்தில் மொத்த சனத்தொகையில் 5% மாகக் காணப்படும் முஸ்லீம் (அட்டவணை2) சிறுபான்மையினரின் விகிதாசார முக்கியத்துவம் மாகாணத்திற்குள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டுக் காணப் படுகின்றது. வடமாகாணத்திற்குள் மாவட்ட மட்டத்தில் முஸ்லீம்களின் விகிதாசார வேறுபாட்டை நோக்கின் அது மொத்த மாவட்ட சனத்தொகைகளில் 2%தில் இருந்து 28% வரை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. (அட்டவணை 3, படம் 2)

வடக்கில் பிரதேச மட்டத்தில் விகிதாசார ரீதியாக வேறுபாடுகள் காணப்படுவதனால் இச் சிறுபான்மையினரின் விகிதாசார வேறுபாட்டையும் அதனுடன் தொடர்பான புவி யியல், பொருளாதார, அரசியல் முக்கியத்துவத்தையும் ஆழமாக ஆராய்வது இச்சிறுபான்மையினரின் அரசியல் அபிலாசைகளை சரியாக அடையாளம் கண்டு கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

முஸ்லீம் சிறுபான்மையினரின் மாவட்ட மட்டத்திலான விகிதாசாரம் வேறுபட்டுக் காணப் படுகின்றது. (அட்ட வணை 3) மன்னார் மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 1/3 பகுதியினராகவும், வடமாகாணத்தைச் சேர்ந்த மற்ற எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட மொத்த சனத்தொகையில் 7%க்குச் சற்றுக் குறைவானவர்களாகவும் காணப்படுகின்றார்கள். மன்னார் மாவட்டத்தில் எண்ணிக்கை அடிப்படையில் ஒரு பலமான சிறுபான்மையினராக முஸ்லீம்கள் காணப் படுகின்ற அதே நேரத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் எண்ணிக்கை ரீதியில் மிகப் பலவீனமான சிறுபான்மையினராக முஸ்லீம்கள் காணப்படுகின்றார்கள். அவ்வாறாயின் இச்சிறுபான்மையினரின் அரசியல் அபிலாசைகளை அடையாளப்படுத்த இம்மக்களின் எண்ணிக்கை ரீதியான பலமும், பலவீனமும் கருத்திலெடுக்கப்பட வேண்டும்.

இனப்பரம்பல் வேறுபாடுகள் மாவட்ட மட்டத்திற்குள்ளும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது (அட்டவணை 3). இந்த அடிப்படையில் முஸ்லீம் சிறுபான்மையின்ரின் மாவட்ட மட்டத்திலான பரம்பல் பின்வருமாறு வேறுபட்டுக் காணப் படுகின்றது.

மன்னார் மாவட்டம்

வடக்கில் விகிதாசார ரீதியாக முஸ்லீம் சிறுபான்மையினர் செறிந்து வாழும் (27%) மாவட்டமாக இது காணப்படுகின்றது. இம்மாவட்டத்தில் சிறிதும் பெரிதுமாக 50 முஸ்லீம் குடியிருப்புகள் காணப்படுகின்றன. இக்குடியிருப்புக்கள், மாவட்டம் முழுவதும் பரவலாகவும், சில பிரதேசங்களில் செறிவாகவும் காணப்படுகின்றது. (படம் 3) மன்னார் மாவட்டத்தின் முசலி உதவி அரசாங்க பிரிவின் மொத்த சனத் தொகையில் 62% மானவர்கள் முஸ்லீம்களாவார்கள். இப்பிரதேசம் 380 சதுர மைல்களை உள்ளடக்கியதாகும். முஸ்லீம் கிராமங்கள் இப் பிரதேசத்தில் செறிவாகக் காணப்படுகின்றன. (படம்1, படம் 3 இவற்றினைக் காட்டுகின்றது).

விவசாயப் பொருளாதாரத்தைக் கொண்ட இப்பிரதேசம் பரப்பு ரீதியாக மன்னார் மாவட்டத்தில் ஏறக்குறைய 35%மான பிரதேசத்தை உள்ளடக்குகின்றது. வடமாகாணம் முழுவதிலும் இந்நிர்வாகப் பிரதேசத்தில் மட்டுமே முஸ்லீம்கள் பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர். இப்பிரதேசத்தில் முஸ்லீம்களின் செறிவு மிக நீண்ட காலமாகக் காணப்படுகின்றதென்பதை வரலாற்றுப் புள்ளி விபரங்கள் உறுதிப் படுத்துகின்றன.

மன்னார் மாவட்டத்தின் வேறு இரண்டு பிரதேசங்களில் முஸ்லீம்கள் செறிவாக வாழ்கின்றனர். (படம் 2) இதில் ஒன்று மன்னார்த்தீவின் எருக்கலம்பிட்டி, தாராபுரம், புதுக்குடியிருப்பு, கரிசல், கீரி ஆகிய முஸ்லீம் கிராமங்களை உள்ளடக்குகின்ற தொடர்ச்சியான ஒரு நிரப்பிரதேசமாகும். (படம் 1ம் படம் 3ம்)

இப்பிரதேசத்தின் மொத்தப் பரப்பு 50 சதுர மைல் ஆகவும், இங்கு வாழ்கின்ற மொத்தச் சனத்தொகையில் முஸ்லீம்களின் விகிதம் 90%ற்கு அதிகமாகவும் காணப்படுகின்றது. இப்பிரதேசம் தனிப்பட்ட நிர்வாகத்திற்குக் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்ற முஸ்லீம்களின் நீண்ட கால வேண்டுகோள் நிறைவேற்றப்பட வேண்டும். (படம் 4)

முஸ்லீம்களின் மற்றுமொரு செறிவு இம்மாவட்டத்தின் பிரதேசத்தில் காணப்படுகின்றது. (முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டது) விடத்தல் தீவுக் கிராமத்தை மையமாகக் கொண்டு பாலம்பிட்டி, பெரியமடு, விளாங்குளி ஆகிய முஸ்லீம் கிராமங்களுடன் இணைந்ததான பிரதேசத்தைக் குறிப்பிடலாம். இப்பிரதேசத்தின் மொத்தப்பரப்பு 70 சதுரமைல்களாகும். முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நிர்வாகப் பிரிவு இப்பிரதேசத்தில் உருவாக்கப்பட வேண்டும். (படம் 2, படம் 4).

மேற்குறித்த மூன்று முஸ்லீம் செறிவுகளிலும் மன்னார் மாவட்டத்தின் மொத்த முஸ்லீம் சனத்தொகையின் 75%தினர் உள்ளடக்கப்படுகின்றனர். எஞ்சிய முஸ்லீம்கள் இம்மாவட்டத்தில் பரவலாக ஏனைய பிரதேசங்களில் வாழ்கின்றார்கள்.


மேற்குறித்த பிரதேசங்களில் வாழும் முஸ்லீம்கள் தமது சுயநிர்ணயம், பாதுகாப்பு, கலை, கலாசாரத் தனித்துவத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் அதிகாரப்பரவலாக்கல் - அரசியல் சீர்திருத்தத்தில் இடம்பெற வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

மன்னார் மாவட்ட முஸ்லீம் சிறுபான்மையினரின் விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் போன்ற பொருளாதார நடவடிக்கைகள் தமது கிராமத்துச் சூழலில் அல்லாமல் தூரப் பிரதேசங்களிலும் காணப்படுகின்றன. மறுவார்த்தையில் கூறின் முஸ்லீம்களின் விவசாய நிலங்களில் குறிப்பிடத்தக்க பரப்பானது தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நிர்வாகப் பிரதேசங்களில் காணப்படுகின்றன. அதுபோலவே இப்பிரதேச முஸ்லீம்களின் சங்கு குளித்தல், அட்டை எடுத்தல் ஆகிய கடல்வளத் தொழில் முயற்சிகளும் காணப்படுகின்றன. மேலும் அம்மக்களின் வியாபாரக் கைத்தொழில் ஸ்தாபனங்களும் தமிழ் மக்கள், செறிவாகக் காணப்படும் நிர்வாக பிரதேசங்களில் அமைவுற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.




மேற்குறித்த விவரணத்திலிருந்து மன்னார் மாவட்ட முஸ்லீம் சிறுபான்மையினரின் அரசியல், பொருளாதார, இன தனித்துவ நலன்கள்:

1. அடையாளப்படுத்தப்பட்ட முஸ்லீம் பெரும்பான்மை நிர்வாகப் பிரதேசத்திற்கான அதிகாரப் பரவலாக்கல் முறை மூலமும்;
2. அதேநேரத்தில் சிறுபான்மையினருக்கான அரசியல், பொருளாதார, சமூக கலாசாரப் பாதுகாப்புக்களைப் பெறுவதன் மூலமாகவும்;
3. பெரும்பான்மை மக்களின் நல்லுறவின் அடிப்படையில் கட்டி எழுப்பப்படுகின்ற இன ஐக்கியத்திலும் பாதுகாக்கப்படக்கூடியது எனலாம்.




## வவுனியா மாவட்டம்

இம்மாவட்டம் பல்லினத்தன்மை கொண்டது. சிங்கள மக்கள் முதலாவது சிறுபான்மையினராகவும் (16.6%) முஸ்லீம்கள் இரண்டாவது சிறுபான்மையினராகவும் (7.1%) இம்மாவட்டத்தில் காணப்படுகின்றார்கள். (அட்டவணை 3, படம் 2) இம் மாவட்டத்தின் மொத்த சிங்கள சிறுபான்மையினரில் 70% மானவர்கள் வவுனியா தெற்கு சிங்கள நிர்வாகப் பிரிவுக்குள் வாழ்கின்றார்கள்.

முஸ்லீம்கள் சிங்கள மக்களின் பரம்பல் முறையில் இருந்து வேறுபட்டவர்களாகக் காணப் படுகின்றார்கள். உதாரணமாக முஸ்லீம் மக்களின் பரம்பல் வவுனியா மாநகரப் பிரதேசத்திலும் (7%) தமிழ் மக்கள் செறிவாக வாழுகின்ற வெண்கல செட்டிகுள நிர்வாகப் பிரதேசத்திலும் (17%), வவுனியா தமிழ் நிர்வாகப் பிரதேசத்திற்குள்ளும் பரவலாகக் காணப்படுகின்றது. (அட்டவணை 3, படம்2)

அதே நேரத்தில் முஸ்லீம் கிராமக் குடியிருப்புகள் புவியியல் ரீதியில் தொடர்ச்சியற்றவையாக இம்மாவட்டத்தில் காணப்படுகின்றன. (பார்க்க படம்1) விவசாயப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட இம்முஸ்லீம் குடியிருப்புக்கள் நீர்ப்பாசனத்திற்கு கிராம குளங்களில் வெகுவாகத் தங்கியிருக்கின்றன. அதே நேரத்தில் போக்குவரத்து, வர்த்தக நடவடிக்கைகளுக்கு முஸ்லீம்கள் தமிழ்ப் பிரதேசங்களில் தங்கியிருக்கின்றனர். பெரும்பான்மை மக்களில், முஸ்லீம் சிறுபான்மையினர் வெகுவாக வாழும் தன்மை இம்மாவட்டத்தில் காணப்படுகின்றது.

வரும்.

**வடக்கு - கிழக்கில் மாவட்ட ரீதியாக முஸ்லீம்களின் விகிதாசாரம்:**

| | மாவட்ட/மாகாண மொத்தத் தொகையில் முஸ்லீம்கள்% | வடகிழக்கு மொத்த முஸ்லீம்களில் மாவட்ட/மாகாண முஸ்லீம்கள் % |
|---|---|---|
| **வடமாகாணம்** | 5.0 | 14.0 |
| மன்னார் மாவட்டம் | 28.0 | 8.1 |
| யாழ்ப்பாண மாவட்டம் | 2.0 | 3.8 |
| வவுனியா | 7.0 | 1.8 |
| முல்லைத்தீவு | 5.0 | 1.0 |
| **கிழக்கு மாகாணம்** | 33.0 | 86.0 |
| அம்பாறை | 41.0 | 43.5 |
| மட்டக்களப்பு | 24.0 | 21.4 |
| திருகோணமலை | 29.0 | 20.3 |
| **வடக்கு -கிழக்கு மாகாணம் மொத்தம்** | 17.0 | 100.0 |

மூலம்: 1981ம் ஆண்டு குடிசனக் கணிப்பீட்டிருந்து கணிக்கப்பட்டது.

**அட்டவணை -3 வட - மாகாணத்தில் முஸ்லீம்கள் செறி[illegible] வாழும் நிர்வ. பிரிவுகள்:**

| மாவட்டம் | முஸ்லீம்களின் வீதம் |
|---|---|
| மன்னார் | |
| மாவட்ட மொத்தம் | 28 |
| முசலி உ.அ.அ.பிரிவு | 62 |
| மன்னார் உ.அ.அ.பிரிவு | 31 |
| மன்னார் நகர சபை | 22 |
| மாந்தை மேற்கு உ.அ.அ.பிரிவு | 21 |
| வுவுனியா | |
| மாவட்ட மொத்தம் | 07 |
| வெண்களச் செட்டிக்குள உ.அ.அ.பிரிவு | 17 |
| வவுனியா நகர சபை | 08 |
| முல்லைத்தீவு | |
| மாவட்ட மொத்தம் | 05 |
| முல்லைத்தீவு நகர சபை | 10 |
| கரையோரப்பற்று உ.அ.அ.பிரிவு | 10 |
| யாழ்ப்பாணம் | |
| மாவட்ட மொத்தம் | 02 |
| யாழ்ப்பாண மாநகர சபை | 10 |

மூலம்:குடிசன மதிப்பீடு (1981) இருந்து கணிக்கப்பட்டது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி...

# யுத்தத்தின் இன்னொரு முகம்

தயா சோமசுந்தரம்

### குடும்பம்

எங்கள் பண்பாட்டைப் பொறுத்தளவில் குடும்பம் ஒரு பலவிதமான நிறுவனமாக செயற்பட்டு வந்தது. பாதிக்கப்பட்ட அங்கத்தவர்களை தாமாகவே அரவணைத்து பராமரித்து ஆற்றுப்படுத்தினர். நெருக்கீடு சந்தர்ப்பங்களில் குடும்பங்கள் ஒன்றிணைந்து பிரச்சினையை எதிர்கொண்டன. ஆயினும் திருமணத் தகராறு, மதுபாவனை, மனநோய் போன்றவற்றால் குடும்ப இயக்கப்பாடு சீர்குலைகின்றது. துரதிர்ஷ்டவசமாக முன்குறிப்பிட்டது போல போரின் விளைவாக குடும்ப கட்டுக்கோப்பு சிதைந்து போயுள்ளது. பெற்றோரின் மரணம், காணாமல் போதல், பிரிவுகள், ஒரு அங்கத்தவரில் மனப்பாதிப்பு போன்றவற்றால் குடும்ப இயக்கப்பாடு அசாதாரண வழிகளில் காரியப்பட்டு மற்றவர்களையும், முக்கியமாகப் பிள்ளைகளைப் பாதிக்கின்றது. உதாரணமாக தகப்பன் இல்லாத குடும்பத்தில், விதவை மனைவியிலும், அவர் பிள்ளைகளுடன் பழகும் விதத்தினூடாக அவர்களிலும் அவ்விழப்பு பிரதிபலிக்கும். எங்களிடம் சிகிச்சைக்கு வருபவர்களில் காணப்படும் ஒரு பொதுக்காரணி குடும்பத்தில் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டோ, இறந்தோ உள்ளார் என்பதாகும். ஆயினும் மிஞ்சிய குடும்பத்தவருக்கு அவரைப்பற்றிய உறுதியான தகவலில்லாத நிலையில், அவர் உயிருடன் இருக்கிறாரா அல்லது மரணமாகிவிட்டாரா என்று நிச்சயமற்ற மன அங்கலாய்ப்பு காணப்படுகின்றது.



குடும்ப ஒற்றுமையைப் பேணி, அதன் செயல்பாட்டை பலப்படுத்த, திருமண, குடும்ப சிகிச்சை யாழ்.போதனா வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமையிலும், சாந்தியத்திலும் அகவொளி என்ற குடும்ப நிலையத்திலும் வழங்கப்படுகின்றது. அதைவிட காணாமல் போனோரைப் பற்றிய தகவல்களும் அவர்கள் உயிருடன் இருந்தால் அவர்களை சந்திக்க வாய்ப்பும் கொடுக்கப்பட்டால் இவ்வாறான பல குடும்ப துன்ப அங்கலாய்ப்புகளையும் இன்னல்களையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

### பொதுமக்கள்

பொதுமக்கள் மத்தியிலும், வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பகுதிக்கு சாதாரண மருந்து சிகிச்சைக்கு வருபவர்களிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் போரின் நெருக்கீடுகளும் விளைவுகளும் பரவலாக இருப்பதனை நிரூபித்துள்ளன. வெளிநோயாளர் பகுதிக்கு வருபவர்களில் சராசரி போர் நெருக்கீடுகளும் விளைவுகளும் கூடுதலாகக் காணப்படுகின்றன. ஆகவே, உள சமூகப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டோர் தெரியாமல் வெளிநோயாளர் பகுதிக்கு உதவி தேடி வருகின்றனர் என்பது புலனாகின்றது. பெரும்பாலும் இவர்களின் உடலியல் முறையீடுகள் தகுந்த உடலியல் நோயோ, காரணமோ இன்றித் தோன்றுகின்றன. மருத்துவ ஆய்வு கூட பரிசோதனையிலும் அசாதாரண நோயியல் காரணங்கள் காணப்படமாட்டாது. இவ்வாறாக உள சமூக பிரச்சினைகளை உடல்ரீதியாக வெளிவருவதை மெய்ப்பாடு நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் இவ்வாறு மருத்துவ உதவி தேடி வைத்தியசாலைகளின் வெளி, உள்நோயாளர் பகுதிகள், மற்றும் தனியார், ஆயுள்வேத, சித்த, நாட்டு மருத்துவர்களை நாடிப்போவதால் ஏற்படும் வீண் நேர, பண விரயமும், மருத்துவரின் சிரமமும், நோயாளர் குணமடையாமல் துயருறுவதும் கவனத்தில் எடுத்து அவர்களுக்கு பொருத்தமான பரிகாரம்; அதாவது உளவளத்துணை, சாந்த வழிமுறை பயிற்சி, குடும்ப சிகிச்சை, சமூக பொருளாதார புனர்வாழ்வு போன்றவை தேவைப்படுகின்றன.

### இடப்பெயர்வு

தற்போதைய நெருக்கீடுகளில் இடப்பெயர்வும் அகதி வாழ்க்கையும் பலதரப்பட்ட உள சமூக விளைவுகளை உருவாக்குகின்றன. யாழ்ப்பாணத்தில் தற்பொழுதுள்ள 600,000 ஜனத்தொகையில் 264,335 இடம்பெயர்ந்த மக்கள் இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. (1994ம் ஆண்டு). அதில் 19,002 பிள்ளைகள் உட்பட 47,384பேர் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். (1993ம் ஆண்டு) எங்களிடம் சிகிச்சைக்கு வருபவர்களில் கூடுதலானோர் இடம்பெயர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். தற்கொலை முயற்சிகளில் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை கணிசமாக இருக்கின்றது. ஒருவர் தனது சொந்த வீட்டையும், ஊரையும் மண்ணையும் விட்டு அகதியாக . வெளியேறுவதானால் அதற்கு வலுவான காரணங்கள் இருக்க வேண்டும். ஏனெனில் ஒருவரின் பழகிய இல்லம், கோவில், சூழல், ஊர் ஒருவருக்கு காலதேச வர்த்தமானத்தை கொடுத்து வாழ்க்கையின் நெருங்கிய தொடர்புகள், உறவுகள், அன்றாட பழக்க வழக்கங்கள் போன்றவற்றுடன் பின்னிப்பிணைந்த அத்திவார அம்சங்களாகும். இவற்றைவிட்டுப் பிரிவதால் அப்பாதுகாப்பான போர்வையை இழந்து வேரறுக்கப்பட்ட கையறு நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். உயிர் ஆபத்து, பீதி, பேரழிவுகள், குடும்பத்தினரின் பாதுகாப்பிற்காக அச்சம் முதலியன ஒருவரை அல்லது குடும்பத்தை அல்லது ஊரையே விட்டு தப்பியோடி அந்நிய இடத்தில் வசதியற்ற வாழ்க்கையைத் தொடர நிர்ப்பந்திக்கின்றது.

இடம்பெயர்வுக்கு ஏதுவான குழப்ப சூழலின் உளத்தாக்கத்தோடு நடைபெறும் மரணங்கள், காயங்கள், வீடு சொத்து உட்பட பேரழிகள், இழப்புகள், பிரிவுகள், முதலியனவற்றுடன் அகதிகளின் உள பாதிப்புக்கள் தொடங்குகின்றன. பாதுகாப்பும் தங்கும் இடமும் இடம்பெயர்ந்தோரின் உடன் தேவைகளாகின்றன. அவற்றுக்காக உறவினர் வீட்டில் அல்லது அகதி முகாம்களில் தஞ்சம் புகுகின்றனர். ஆயினும் இத் தற்காலிக ஒழுங்குகள் கூட, முக்கியமாக அவை நீடித்தால், பல மனச் சஞ்சலங்களைத் தோற்றுவிக்கின்றன. உதாரணமாக ஜன நெருக்கம், குறைந்த வசதிகளைப் பகிர வேண்டிய நிர்ப்பந்தம், சுற்றாடல் துப்பரவின்மை, மற்றவர்களின் தொல்லையும் அந்தரங்கமாக குடும்ப வாழ்க்கை நடாத்த முடியாமை, சந்தேகங்கள், தொற்றுநோய்கள் பரவுதல், நிவாரண உதவிகள் போதியளவிலும் நேரத்துக்குக் கிடைக்காமை, தரம் குறைந்ததாக இருத்தல், மழையால் வெள்ளப்பெருக்கு, வெயிலால் வெப்பம், நீர் பற்றாக்குறை போன்ற சூழல் மாற்றங்கள், தொடரும் யுத்தமும் பாதுகாப்பு அற்றதும், நிச்சயமற்ற பதற்றநிலை போன்ற பலதரப்பட்ட அழுத்தங்கள் அகதி வாழ்க்கையில் சர்வ சாதாரணமாகி விடுகின்றன. இதனால் மற்றவர்களில் தங்கும் நிலையுடைய மனப்பாங்கு, வெளியாள் ஆலோசனை உதவிகள் முதலியவற்றை எதிர்த்தல், ஒரு மரத்துப்போன விரக்தி மனநிலை; தங்களுக்குள் சச்சரவுகளையும் முரண்பாடுகளையும் தோற்றுவது கண்கூடு.



உறவினர் அல்லது நண்பர்களுடன் தங்கும்பொழுது காலப்போக்கில் அவர்களின் உறவுகளில் உட்பூசல்கள் ஏற்படுவது இயற்கை. ஜனநெருக்கம், உருப்படியான வேலை அல்லது பயனுள்ள செயற்பாடுகள் அற்று சும்மா அங்கலாய்த்தல், மற்றும் உறவுகளில் சிறு சிறு பிணக்குகள் சிக்கல்கள் போன்றவை தொடங்குவதால் தீர்க்கப்படாமல் பிரச்சினைகள் உருவாகின்றன. இதைவிட வெளிநாடுகளுக்கு புகலிடம் தேடிச் செல்பவர்கள் எதிர்கொள்ள வேண்டிய சவால்களில் அந்நிய கலாசாரத்துக்கு இயைபாகுதல் மிகக் கடினமானதாகும்.

கைதடி அகதிமுகாமில் நாம் மேற்கொண்ட ஆய்வில் போரின் நேரடித் தாக்கங்களை மறைமுகமான நெருக்கீடுகள்: உதாரணமாக பொருளாதார கஷ்டங்கள் (89%) உணவுப்பற்றாக்குறை (80%) வேலையின்மை (85%) போன்றவை தொடரும் பிரச்சினைகளாகக் காணப்பட்டன. மெய்ப்பாடு மற்றும் உள சமூகப் பாதிப்புக்களின் குணங்குறிகள் அவர்களில் பரவலாகக் காணப்பட்டன.

இதேபோல் நோர்வே நாட்டைச் சேர்ந்த உள மருத்துவர் இங்குள்ள அகதிமுகாம்களிலும் பாதிக்கப்பட்ட கிராமங்களிலும் போரூட் (forut) நிறுவனத்துக்காக நடத்திய ஆய்வில் சகலரும் பலதரப்பட்ட நீண்டகால உளத் தாக்கங்களுக்கு ஆளாகியிருப்பதைக் கண்டறிந்தனர், மெய்ப்பாடு, மனவடு, மனச்சோர்வு போன்ற நோய்கள் கணிசமான தொகையினரில் இனங்காணப்பட்டன. இந்தக் கண்டுபிடிப்பின் அடிப்படையில், அடித்தளத்தில் கடமையாற்றும் தொண்டருக்கு உளவளத்துணை, உளவியல் உதவி போன்றவற்றில் பயிற்சி அளிப்பதால் இந்தப் பிரச்சினையைச் சமாளிக்கலாம் என்று சிபார்சு செய்தார்.

இன்னொரு ஆய்வு அகதிக் குடும்பங்களில் பல உளப்பிரச்சினைகள், குடும்பத் தகராறு மற்றும் பிள்ளைகளில் பிரிவுத்துன்பம், அறிவாற்றல் குறைபாடுகள், நடத்தைக் கோளாறுகள், நித்திரைக் குழப்பங்கள் போன்றவை இருப்பதை நிரூபித்துள்ளன. அகதிகள் தமது கனவுகளில் தங்கள் சொந்த வீடுகளுக்கு திரும்பி, முந்திய வாழ்க்கையில் ஈடுபடும் காட்சியை அடிக்கடி காணுவதாக புகார் செய்தனர். இக் கனாக்கள் இவர்களின் மனதில் நிலவும் பேரவாவைப் பிரதிபலிக்கின்றன. மற்ற இடங்களைவிட அகதிகள் இங்கே நன்றாகக் கவனிக்கப்படுகின்றனர் என்று வெளி அவதானிகளால் கூறப்பட்டாலும் பெரும்பாலும் அகதிகள் சமூகத்தால் ஒரு வேண்டத்தகாத சாதியாக ஒடுக்கப்படுகின்றனர். இவ்வாறான அகதிகளைப் பற்றிய மனப்பான்மையை பாடசாலைகளிலும், வேலைத்தலங்களிலும், பேரூந்துகளிலும் காட்டப்படும் புறக்கணிப்பு, பாரபட்சம், இழிவாக நடத்தப்படல் போன்றவற்றில் காண்கின்றோம்.

அகதிகளின் பிரச்சினை, தொடரும் போரின் மத்தியிலும் சரி, சமாதானம் வந்து அவர்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகளிலும் சரி உள சமூக பராமரிப்புக்கும், புனர் வாழ்வுக்கும் பெரும் சவாலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

### தற்கொலை

எம்மக்களில் காணப்படும் ஒரு கவலைக்குரிய உள சமூகப்பிரச்சினை தற்கொலை நாட்டமாகும். பேராசிரியர் கணேஸ்வரனால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்படி 1983ம் ஆண்டு உலக மட்டத்தில் யாழ் நகரம் தற்கொலை விகிதாசாரத்தில் முன்னணியில் திகழ்ந்தது. அதுவும் இளம் வயதினரில் இக்குணம் கூடுதலாக காணப்பட்டதை சுட்டிக்காட்டினார். போரால் ஏற்பட்ட ஓரிரு விளைவுகளில் தற்கொலை எண்ணிக்கையின் வீழ்ச்சி ஒன்றாகும். இவ்வாறான வீழ்ச்சி மற்ற நாடுகளிலும் யுத்த காலங்களில் காணப்பட்டுள்ளது. இதற்கு போரில் ஈடுபடுவது தற்கொலைக்கு மாற்று வழியாக அமைவது ஒரு காரணமாகலாம். போரின்போது போர்க்கால நெருக்கடி முன்னணியில் நிற்பதால் ஏனைய தனிமனித, குடும்ப பிணக்குகள், தகராறுகள் தற்காலிகமாக மறைக்கப்படுகின்றன.

எது எவ்வாறாயினும், தற்கொலை முயற்சிகளுக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றவரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. சாதாரண காலங்களில் ஏற்படுகின்ற காதல் தோல்வி, எதிர்பார்த்தளவில் சோதனையில் சித்தியடையாமை, உறவுகளில் சிக்கல், ஏஜென்சிகளால் ஏமாற்றப்படுவது, மது பாவனையுடன் தற்காலத்தில் போரின் மறைமுகமான தாக்கங்களாகிய இடம்பெயர்வு, வேலையின்மை, வறுமை, பட்டினி போன்றவற்றால் வாழ்க்கையில் விரக்தி, கசப்புணர்வு, அவநம்பிக்கை போன்ற உணர்ச்சிகள் மக்களை தற்கொலைக்குத் தள்ளுகின்றது.

இத்தற்கொலை முயற்சி நிலைக்கு எங்களால் அளிக்கப்படும் முக்கிய பராமரிப்பு உளவ

→15

www.tamilarangam.net



பீஜிங் நகரில் தற்போது நடைபெற்றுகொண்டிருக்கும் பெண்கள் மாநாட்டுக்கான ஏற்பாடுகளை இலங்கையில் ‘‘பெய்ஜிங்குக்கான இலங்கைப் பெண்களின் அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டு'' செய்திருந்தது. உலகெங்கிலுமிருந்து 36000 பெண்கள் கலந்துகொள்ளும் இந்த சர்வதேச பெண்களின் நான்காவது மாநாட்டுக்கு இலங்கையிலிருந்து மொத்தம் 63 பேர் கலந்து கொள்கின்றனர். இவ்வமைப்பின் ஏற்பாட்டில் மொத்தம் 47 பெண்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். இவ்வமைப்பின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான குமுதினி சாமுவேல் உடன் சரிநிகர் நடத்திய செவ்வி இங்கு தரப்பிடுகிறது. குமுதினி சாமுவேல் MIRJE, SOORIYA, INFORM ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்களின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராவார். பெண்நிலைவாதியும், பெண்கள் உரிமைகளுக்காக தீவிரமாக இயங்கி வருப வருமான குமுதினி சாமுவேல் அவர்கள் இவை தவிர, பல்வேறு பெண்கள் அமைப்புகளின் தீவிர உறுப்பினருமாவர்.



# பெண்கள் பிரச்சினையும் மனித உரிமைப்பிரச்சினையே!

**- குமுதினி சாமுவேல்**

**✱பீஜிங் மாநாடு தொடர்பான இலங்கை ஏற்பாடுகள் பற்றி....**

‘‘உலகெங்கினும் இருக்கின்ற பெண்கள் தாங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்காகவும் அவற்றிற்கான தீர்வுகளை காண்பது தொடர்பாக ஆலோசிப்பதற்கும், செயற்படுத்துவதற்குமாகவே உலகப் பெண்கள் மாநாடு நடத்தப்படுகிறது.

இதுவரை 1975, 1980, 1985ஆம் ஆண்டுகளில் மூன்று மாநாடுகள் நடந்து முடிந்துவிட்டன. பீஜிங்கில் நடத்தப்படப் போவது நான்காவது மாநாடு. இலங்கைப் பெண்களின் பிரதிநிதித்துவத்திற்திற்காக ‘பீஜிங்குக்கான இலங்கைப் பெண்களின் அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டு SLWNGOF எனும் எங்கள் அமைப்பு ஏற்பாடு செய்திருக்கிறது.

1993 நடந்த ஆசிய பசிபிக் பெண்கள் மாநாட்டின் போது நான்காவது பெண்கள் மாநாட்டிற்கான ஏற்பாடுகளை செய்வதற்கான இலங்கை பெண்கள் அமைப்புகளின் கூட்டு ஒன்றை உருவாக்க வேண்டும் என திட்டமிட்டோம். இலங்கையில் அதற்கான ஏற்பாடுகளை பெண்கள் தொடர்பூடகங்களுக்கான கூட்டமைப்பு(Women and Media Collevtive)செய்தது. அதன் பயனாகவே 12 அமைப்புகளை இணைத்து SLWNGOF தோற்றம் பெற்றது.

இவ்வமைப்பின் சார்பில் பீஜிங் மாநாட்டுக்கு 41 பெண்கள் அமைப்புகளைச் சேர்ந்த 47 பெண்கள் கலந்து கொள்கின்றனர். இவர்கள் வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த, வெவ்வேறு இன, மத குழுமியங்களைச் சேர்ந்த, வெவ்வேறு துறையினரைச் சேர்ந்தவர்கள் என்பது முக்கிய விடயம். இந்த மாநாட்டுக்காக மிகுந்த சிரமங்களின் மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து நான்குபேர் கலந்து கொள்கின்றனர். பீஜிங் மாநாட்டில் மாத்திரம் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முப்பத்தாறாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொள்கின்றனர். எங்கள் அமைப்பின் சார்பில் கலந்து கொண்பவர்களைத் தவிர அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக 15 பெண்கள் மகளிர் விவகார அமைச்சர் ஸ்ரீமணி அத்துலத் முதலி தலைமையில் கலந்து கொள்கின்றனர்.

இவ்வகையான சர்வதேச மாநாடுகளுக்கு கொழும்பு 7இல் வசிக்கின்ற ஆங்கிலம் படித்த உயர் வகுப்பினர் மாத்திரமே கலந்து கொள்வது வழக்கம். நாங்கள் இயலுமானவரை பெண்கள் மத்தியில் செயற்படுகின்ற சாதாரண மகளிரையும் இதில் கலந்து கொள்ளச் செய்திருக்கிறோம்.

**✱பீஜிங் மாநாட்டின் குறிக்கோள்கள், சிறம்பம்சங்கள் குறித்து......**

இந்த மாநாடு ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாட்டுடன் நடக்கும் மாநாடு. பெண்கள் பெண்களாக இருப்பதனால் சமூகத்தில் எதிர்நோக்கும் விசேடமான பிரச்சினைகள் அதிகளவு உள்ளன. இவற்றை அடையாளம் காணாமல் கூட இன்று பலர் உள்ளனர். பீஜிங் மாநாட்டில் பெண்களது உரிமைக்காக போராடும் ஆயிரக்கணக்கான பெண்கள் அமைப்புகளைச் சேர்ந்த பல பெண்கள் கலந்து கொண்டு தங்களது பிரச்சினைகளை ஆராயப் போகிறார்கள். இந்த மாநாட்டில் இலங்கைப் பெண்களின் சார்பில் நாங்கள் பல கோரிக்கைகள் அடங்கிய பிரகடமொன்றையும் சமர்ப்பிக்கவுள்ளோம். இந்த பிரகடனத்தை நாங்கள் இலங்கையில் தொடர்ச்சியாக நடத்தியிருந்த கலந்துரையால்கள் கருத்தரங்குகள் என்பவற்றின் போது அதில் கலந்துகொண்ட பெண்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் சாராம்சத்தைக் கொண்டே தயாரித்திருக்கிறோம் அதில் குறிப்பாக இலங்கைப் பெண்கள் எதிர்நோக்கும் விசேடமான பிரச்சினைகளை சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மனித உரிமைப்பிரச்சினைகளே. ஆனால் இன்னும் அந்த பிரச்சினைகள் மனித உரிமைப் பிரச்சினை அந்தஸ்தைப் பெறவில்லை. இதுபற்றியும் பெண்கள் தங்களது அக, புற பரிபாலனம் தொடர்பான முடிவுகளை எடுக்கும் சுயநிர்ணய உரிமை அவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்; ஆட்சி அதிகார மட்டத்திலான பொருளாதார, அர

→15

எல்லாவிதமான புரட்சிகளின் போதும் எழுகின்ற பிரதான கேள்வி அரசின் அதிகாரம் என்ன என்பதுதான் - வி. இ. லெனின்.

ஜப்பானிய ஹிரோசிமா நகரத்தின் மீது நடாத்தப்பட்ட அணுக்குண்டு வீச்சின் ஐம்பதாண்டு நிறைவையொட்டி இலங்கை மன்றக் கல்லூரியில் நிகழ்ச்சி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சி நடைபெற்று ஒருநாள் கூட ஆகவில்லை, இலங்கை மன்றக் கல்லூரிக்கு மிக அண்மித்ததாக இருந்த மேல் மாகாண சபை முதலமைச்சர் அலுவலகத்திலே பாரிய குண்டு ஒன்று வெடித்தது.

காலை 10.45 இருக்கும். குண்டு வெடிப்பு நிகழ்ந்த அந்த நேரத்தில் நான் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன வளவினுள் நின்று கொண்டிருந்தேன் . குண்டு ஒன்று வெடித்துச் சிதறிவிட்டதாகத்தான் உடனடி யாக அங்கிருந்த எல்லோரும் பேசிக் கொண்டார்கள். சிறிது நேரத்தில் ரொறிங்டனிலுள்ள இலங்கை பொது நிர்வாக அமைச்சின் கட்டிடத்தில் ஒரு குண்டு வெடித்ததாக தகவல் வந்தது. நான் அந்த இடத்தை நோக்கி ஓடினேன். இலங்கை பொது நிர்வாக அமைச்சின் கட்டிடத்திலிருந்து 50-60 யார் தூரத்திற்கு அப்பால் தான் இருக்கிறது முதலமைச்சர் அலுவலகம். இந்த நிகழ்ச்சியை பார்த்த போது என்னுள் கிளர்ந்த உணர்வலைகளை எழுத்தில் வெளிப்படுத்துவது கடினம். அது மிகவும் பதற்றமானதாகவும், உணர்ச்சிமயமானதாகவும் இருந்தது.

இலங்கை தான் பெற்ற சுதந்திரத்தை பெருமையுடன் நினைவு கூர்வதற்காக கட்டப்பட்ட ரொறிங்டன் சுதந்திர சதுக்கத்தில் உடல்கள் சிதறுண்டு ரொறிங்டன் சதுக்கத்தில் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்! அவர்களது உடல்கள் சிதறுண்டு ரொறிங்டன் சதுக்கம் எங்கும் பரவிக்கிடந்தன.

இதுவல்ல எமது சுதந்திரம்!..... பாதுகாப்பு படையினரும், செய்தித்துறையினரும் இடத்தைச் சூழ்ந்து கொண்டனர். அவர்களது அபிப்பிராயங்கள், இது ஒரு தற்கொலைப் பிரிவினரது வேலைதான்...... பாதுகாப்புப் போதாத இடம் இது..... செய்தவன் நிச்சயம் ஒரு புலியாகத்தான் இருக்கும்..... என்று வெளிப்பட்டுக் கொண்டிருந்தன..... அந்த இடத்தை விட்டு மெல்ல நகர்ந்துகொண்டிருக்கையில் எனக்கு இவ்வாறு தோன்றிற்று. இறந்துபோனவர்களில் பெரும்பாலானோர் பொதுமக்கள்...... அவர்கள் தமது சொந்தத் தேவைக்காக முதலமைச்சரது அலுவலகத்துக்கு வந்திருக்கக்கூடும். வந்த இடத்தில் இப்படி அநியாயமாக கொல்லப்பட்டுவிட்ட இவர்களது குடும்பத்தவர்களின் எதிர்காலம் என்ன? காயப்பட்டவர்களுக்கு என்ன நடக்கப்போகிறது.......

அரசாங்கத்தின் ஒளிபரப்பில் வெலிஓயாவில் கொல்லப்பட்ட புலிச் சிறுவர்களது உடல்கள் காட்டப்பட்டன. அவர்கள் எல்லோரும் இளம் பெண்களும் சின்னப் பையன்களும் தான். அந்த காட்சித்துண்டுகளை பார்த்தபோதும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவர்கள் எல்லோருக்கும் பெற்றோர்கள் இருக்கமாட்டார்களா?



நிஷாந்த.

நாம் வெலிஓயாவிலும், இந்த ரொரிங்டன் குண்டு வெடிப்பிலும் காண்பதெல்லாம் அரசாங்கம் கூறுகின்ற சமாதான யுத்தத்தின் சாதனைகளைத் தான். புலிகள் அவற்றை தமிழீழ அரசுக்கான சாதனைகளாகக் கொள்ளலாம். இவையெல்லாம், சமாதான யுத்தத்தினதோ அல்லது தமிழீழ அரசினதோ சாதனைகளாக இருக்கலாம். எனது அக்கறையெல்லாம் இவற்றில் கொல்லப்படும் மக்களைப்பற்றியதே. ஒருவேளை புத்திஜீவிகளைப்போல விடயங்களைப் பார்க்கவோ ஒவ்வொன்றையும் ஆழமாக ஆராயவோ நான் இன்னமும் கற்றுக்கொள்ளாமல் இருக்கிறேனோ என்னவோ.

சுயநலமிக்க சிந்தனையின் மீது எழுகின்ற உணர்வுகள் நல்லவையாக மாறுகின்றன. சுயநலமான உணர்வுகள் எழும்போது சிந்தனைகள் கெட்டவையாக மாறுகின்றன. நாம் இப்போது காண்பது உணர்வுகள் கெட்டுப் போய்விட்ட ஒரு சிதிலமடைந்த நிலைமையே.

இலங்கையிலிருந்து நாடுகடத்தப்பட்ட அமெரிக்கரான கென்னத் முல்லர் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட முன் யுக்திய பத்திரிகைக்கு ஒரு கட்டுரை அனுப்பியிருந்தார். தனது புலி சார்பு அல்லது எதிர்ப்பு நிலைக்கு அப்பால் நின்று வடக்கிலுள்ள தமிழ் மக்களது இன்றைய நிலையின் தொடர்ச்சியை ப்பற்றிய உண்மைகளை எழுதியிருந்தார். தெற்கிலுள்ள கிறுக்குப் பிடித்த சமாதானத்துக்காக இயங்குபவர்களும், சமாதானத் தத்துவார்த்திகளும் புலிகளில் தங்கியுள்ள வடக்கு மக்களின் நிலைமையை விளங்கிக் கொள்ள இக் கட்டுரையைப் படிப்பது நல்லது. அவர் சொன்னார்:

‘‘அரசியல் தீர்வுகள் இருக்கலாம். ஆனால் சமாதானம் பின்தள்ளப்படுகின்ற போதெல்லாம் பொது மக்களே மேலும் மேலும் துன்பங்களுக்குள்ளாகின்றனர்''.

துரதிஷ்டியான அவரது இந்த வாசகம், வெலிஓயா தாக்குதல், தென்மாகாணசபை முதலமைச்சர் காரியாலய குண்டு வெடிப்பு என்பன மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதுவரையில் நாம் இன்னும் பலவற்றைப் புரிந்து கொண்டிருக்கவேண்டும். அவர் தனது கட்டுரையில் மேலும் சொன்னார்.

‘‘புலிகள் தமிழ் மக்கள் மீது எண்ணெயை ஊற்றியது உண்மைதான். ஆனால் அரசாங்கம் இப்போது அதற்கு தீவைத்துக் கொண்டிருக்கிறது.

நான் இந்த வாய் மொழி வாக்கியத்தை திருத்தி ஒரு சிங்கள வாய்மொழி வாக்கியத்தைக் கூறவிரும்புகிறேன்.

‘‘தேசத்தின் மீது நெருப்புவைக்கப்பட்டிருக்கிறது. இலங்கை அரசாங்கங்கள் இந்த நெருப்பை வைத்தன. புலிகள் இப்போது அதன்மீது வைக்கோலைத் தூவிக் கொண்டிருக்கின்றனர்.''

இப்போது நடந்து கொண்டிருக்கும் அரசாங்கம் நெருப்பு வைத்ததும் சரி, புலிகள் வைக்கோலைத் தூவிக்கொண்டிருப்பதும் சரி, ஒரு நெகிழ்ச்சியற்ற தத்துவார்த்த அடிப்படையில் சமூக உருவாக்கத்தை செய்ய முயல்வதே என்பதை விளங்கிக் கொள்வது சமாதானத்துக்கு தேவையான முதற்படியாகும். இது ஒரு கடுமையான பணிதான். ஆனால் இது ஒரு சமுதாயப்பணியும் கூட. நாளைய சமுதாயத்துக்காக இன்றைய சமுதாயம் ஆற்றவேண்டிய பணி இது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அரசியல் யாப்பு சீர்திருத்தங்களும் மலையக மக்களும் — II

### 1978 அரசியல் யாப்பு சர்வாதிகாரத்தை ஏற்படுத்தியது!

பீ.ஏ.காதர்

### 1989 பொதுத் தேர்தல்

1978 அரசியல் யாப்பு இலங்கையில் அரசியலமைப்பு சர்வாதிகாரத்தை (Constitutional Dictatorship) உருவாக்கியது. பாராளுமன்றில் 4/5 பெரும்பான்மையோடு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை இந்நாட்டின் ஜனநாயக மரபுகள், விழுமியங்கள் அனைத்தையும் உதாசீனம் செய்தது. இதன் எதிர்விளைவாக சகல பிரதான சமூகங்கள் மத்தியிலும் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் இளைஞர் அமைப்புகள் உருவாயின.

வடக்கு மக்கள் மீது யுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டது. மலையக தமிழர் மீது இனப்படுகொலை கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்தியா தலையிட்டது. தெற்கே ஜே.வி.பி அரசு அதிகாரத்தை கைப்பற்றும் அளவுக்கு நெருக்கமாக வளர்ந்தது. இந்நிலையில் இனியும் பொதுத் தேர்தலை நடத்தாமல் விடுவது இயலாது என்ற நிர்ப்பந்தத்தால் இத்தேர்தல் நடாத்தப்பட்டது.

இத்தேர்தலில் மலையகத்தில் போட்டியிட்ட அனைத்து தமிழ் வேட்பாளர்களும் தோல்வியுற்றனர். கண்டி, பதுளை, நுவரெலியா மாவட்டங்களில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்களும் தமிழ்.கட்சிகளும் மொத்தம் 75,843 வாக்குகளைப் பெற்றும் கூட ஒருவர் கூட பாராளுமன்றத்திற்கு தெரிவாகவில்லை. மத்திய கொழும்பில் போட்டியிட்ட இ.தொ.கா.பொதுச் செயலாளர் எம். எஸ்.செல்லசாமி மாத்திரமே வெற்றி பெற்றார்.

### 1994 பொதுத் தேர்தல்

இத்தேர்தலில் 1947ம் ஆண்டு தேர்தலின் பின்னர் கூடுதலான மலையக பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்கு தெரிவாகினர். மொத்தம் 6 பேர் தெரிவாகினர். இருவர் தேசிய பட்டியல் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். எனினும் மலையக மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கும் சூழலில் 7% சனத் தொகைப்படி 225 அங்கத்தவர் கொண்ட பாராளுமன்றில் மலையக மக்களுக்கு 16 ஆசனங்கள் கிடைத்திருக்க வேண்டும்.

இதுவரை ஆராய்ந்த பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பற்றிய விடயத்தில் பின்வரும் முடிவுகளுக்கு நாம் வரலாம்.

1.மலையக மக்களின் சனத்தொகைக் கேற்ப போதிய பாராளுமன்ற பிரதிநிதித்துவம் எக்காலத்திலும் வழங்கப்படவில்லை.

2.ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்திற்கு ஆதரவாக நடந்து கொள்ளும்வரை -அவர்களது தயவில் வாக்குரிமையை பயன்படுத்தும்''சலுகை'' மாத்திரமே மலையக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அது இன்னும் ஒரு உரிமையாக ஆகவில்லை. பிரஜாவுரிமை சான்றிதழுக்கு பதிலாக ''சத்தியக் கடதாசி'' ஒன்றை சமர்ப்பித்து வாக்காளர் இடாப்பில் பெயரை பதிந்து கொள்ளும் வாய்ப்பை ஐ.தே.கட்சி அரசு இரு வருட காலத்திற்கு மாத்திரமே வழங்கியது. இது ஒரு தற்காலிக ஏற்பாடு. தொடர்ச்சியாக மலையக மக்கள் ஐ.தே.கட்சிக்கு ஆதரவளித்து வந்ததால் அச்சலுகை பறிக்கப்படவில்லை. ஆனால் புதிய அரசாங்கம் நினைத்தால் அதைப் பறிக்க முடியும். ஜனாதிபதியாக டி.பி.விஜயதுங்க இருந்த போது தொண்டமானுடன் முரண்பட்ட வேளை தேர்தலில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை காட்ட வேண்டும் என்பதை நடைமுறைப் படுத்த முயற்சித்தது நினைவிருக்கலாம். அது மலையக மக்களின் வாக்குப்பலத்தை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாகும். தொண்டமான் தொடர்ந்தும் ஐ.தே.கவை ஆதரிப்பது என தீர்மானித்ததால் அம்முயற்சி கைவிடப்பட்டது.

இவ்வாறு வாக்குரிமைக்கு கூட அரசாங்கத்தின் தயவை எதிர்பார்த்து நிற்கும் சமூகமாக மலையக மக்கள் திகழுகின்றனர்.

3.பாராளுமன்றில் மலையக பிரதிநிதிகள் எத்தனை பேர் இருந்தாலும் மலையக மக்களைப் பாதிக்கும் சட்டங்களை பாராளுமன்றம் நிறைவேற்றுவதை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

எனவே:

கனடாவில் பரீட்சிக்கப்பட்ட ''இரட்டைப் பெரும்பான்மை முறை'' போன்ற ஏதோ ஒரு விசேட ஏற்பாடு தேவை.

-வரும்-

**நுவரெலியா தேர்தல் மாவட்டம் -1989**
**தமிழ் கட்சிகள்/ வேட்பாளர் பெற்ற வாக்குகள்**

| | | | |
|---|---|---|---|
| முத்து சிவலிங்கம் | இ.தொ.கா | யானை | 23,882 |
| வேலு அண்ணாமலை | இ.தொ.கா | யானை | 22,795 |
| | ஐ.ம.வி.மு. | நங்கூரம் | 10,509 |
| பெரியசாமி பெருமாள் | ஐ.சோ.மு. | | 2,581 |
| பழனியாண்டி சுப்பிரமணியம் | து.சோ.மு. | | 1,868 |
| வெங்கடசாமி பிரபாகரன் | ஐ.சோ.மு. | | 1,784 |
| பெரியசாமி சிவசாமி | ஸ்ரீ.ல.சு.க. | | 1,259 |
| | | | 64,679 |

* ஒருவருக்கு 3 தெரிவு வாக்குகள் என்ற நிலை இருந்ததனால் ஒவ்வொரு கட்சியிலும் ஒரு தமிழ் வேட்பாளர் பெற்ற கூடிய வாக்கை அடிப்படையாகக் கொள்ளலாம்.

** ஐ.ம.வி.மு.போட்டியிட்ட தமிழ் கட்சி என்பதால் அதன் மொத்த வாக்கை அடிப்படையாகக் கொள்ள முடியும். பி.சந்திரசேகரன் தலைமையில் இங்கு ஐ.ம.வி.மு.போட்டியிட்டது.

இதன்படி பெறப்பட்ட தமிழ் வாக்குகள் =38231

**பதுளைத் தேர்தல் மாவட்டம் 1989**
போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்
வீரன் சென்னன் (இ.தொ.கா) யானை 1,468

**கண்டி தேர்தல் மாவட்டம்**
போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்
சின்னச்சாமி ராஜு (இ.தொ.கா) யானை 21,144

**மத்திய கொழும்பு தேர்தல் மாவட்டம் 1989**

| | | | |
|---|---|---|---|
| அதுலத் முதலி லலித் | ஐ.தே.க | 235,447 | தெ.வாக்கு |
| புளத் சிங்கள சிரிசேன குரே | ஐ.தே.க | 92,263 | தெ.வாக்குகள் |
| ஸ்டான்லி திலகரட்ன | சு.க. | 83,636 | தெ.வாக்குகள் |
| தினேஷ் சந்திரா ரூபசிங்க குணவர்தன | ம.ஐ.மு | 70,161 | '' |
| ஆராச்சிகே ஜினதாச நியத்தபால | சு.க. | 67,801 | '' |
| சி.வி.குணரத்ண | சு.க. | 60,603 | '' |
| சுமித்ரா ஆராச்சிகே பொன் பந்துள சந்திரசிறி குணவர்தன | ம.ஐ.மு | 50,861 | '' |
| டிக்சன் ஜே.பெரேரா | சு.க. | 50, 735 | '' |
| காமினிகுலவன்ச லொக்குகே | ஐ.தே.க | 48,790 | '' |
| மொகமட் ஹனீபா மொகமட் | ஐ.தே.க. | 47,451 | '' |
| டிரோன் பெர்னாண்டோ | ஐ.தே.க | 44,718 | '' |
| பிரேமரட்ண குணசேகர | ஐ.தே.க | 44,558 | '' |
| மத்யூ வின்சவ்ட் பெரேரா | ஐ.தே.க. | 42,776 | '' |
| வீரசிங்க மல்லிமாராச்சி | ஐ.தே.க | 41,508 | '' |
| கீதாஞ்சன ரூபசிங்க குணவர்தன | சு.க. | 38,815 | '' |
| கிங்ஸ்லி திஸ்ஸ விக்ரமரட்ண | சு.க. | 38,815 | '' |
| நிலந்தி ;மால் சிறிபால டி சில்வா | சு.க. | 38,647 | '' |
| சுனேத்ரா ரணசிங் | ஐ.தே.க. | 37,165 | '' |
| முத்து சங்கரலிங்கள் செல்லசாமி | ஐ.தே.க. | 36,480 | '' |
| தீப்தி டி மெல் | சு.க. | 33,325 | '' |

## வெண்தாமரைக் குளத்துக் கவிதை

இப்ப உடம்பு முழுவதிலும்
மூளை இருப்பதான ஒரே ''பீலிங்''

ஒரு நாளல்ல என்றதான வாதம் பொய்த்து
குனிந்த குனியில். ஒரே மூச்சில்.
பட்டகையோடு எழுதியே தீர்த்துவிடுகிற
''மூட்''

நேற்றில் இருந்து ஒரு கவிதையாகிலும்
பூரணமாகவேனும் முடிகிறபாடில்லை.

எப்படித்தான் போக்கி விடுவேனோ
என்னுடனான கொஞ்ச நாட்களையும்.

யாருமற்ற பாழ்கிணற்றினுள்
மீதமான நாட்களையும் தொலைத்துவிட்டு
அதற்குள் வந்து விடுகிறானோ தெரியாது
சனியன்
யாராவது ''உலூாம்'' களையும் கூட்டிக்கொண்டு

என்னை விடவுமே சரியான விருப்பம்
கவிதையென்றால்.
சிலவேளை.
காலும் ஓடாது. கையும் ஓடாது. பசியே வராது
அவனுக்கு.

எப்போதும்.
தான் எழுதவிருக்கும் கவிதைகள் பற்றியும்.
தனக்கு கிடைக்கவிருக்கும் பட்டங்கள் பற்றியும்.
மேடையில் போர்த்தப்படவிருக்கும்
பொன்னாடைக் கம்பளங்கள் பற்றியும்தான்
அதிகம் பேசிக் கொள்வான்
வந்தால்.

முன்பெல்லாம் போல.
வாங்கிய தயிர் ''டின்னை''
பாழ்வீட்டு மூலைக்குள் போட்டுவிட்டு
புறாக்கள் துரத்தப் போனது பற்றியோ.
நாவ மரங்களுக்குக் கீழ்
அத்திப்பழம் பொறுக்கியது பற்றியோ.
அல்லது. சந்திரிகா. பிரபாகரன் என்கிற
தனி நபர்கள் பற்றியோ -
கதைப்பதுமில்லை.
அவசியமுமில்லை.

வாழ்வில் தொடர்ச்சியாக நிகழும்
மாமியாவின் நெருக்குதல்களாலும்.
பிறக்கவிருக்கும் மனைவியின் குழந்தைக்கான
''ஸ்ரீலக்'' வாங்குதல் பற்றிய செலவீனத்திலுமே
குழம்பிக் கிடக்கும் அவனுக்கும் ;

ஆத்தங்கரை ஓரங்களிலும்.
வெண்தாமரைக் குளங்களிலும்.
''ரொய்லட்''. ''பாத்றூாம்களிலும''
கவிதை இயல்பாகவே வருவதாக
பேசப்படுகிறது.


எம்.ஐ.எம்.ஜாபிர்
27.07.1995



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பெண், குடும்பம், குழந்தைகள்: பிரச்சினைகள் குறித்த சில அவதானங்கள்

ஔவை

'' நான் ஆறுவயசுவரை பால் குடிச்சனான். நான் என்ரை அம்மாட்டை மட்டுமல்ல ஆச்சியிட்டையும் குடிச்சனான். இப்ப நீங்கள் எவ்வளவு காலம் பிள்ளைகளுக்கு பால் குடுக்கிறீங்கள்? இதுதான் பிரச்சினை. இதாலை தான் எங்கடை சமுதாயம் நலிவான சமுதாயமாக மாறுகிறது.'' இது வேறு யாருமல்ல. மேல்மாகாண கல்வித்திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். நல்லையா அவர்கள் 1995 யூன் மாதம் 26ம் திகதி நடைபெற்ற ஆசிரியர்கட்கான கருத்தரங்கொன்றிலே 'நவீன குடும்பம்' பற்றிப் பேசிய போது குறிப்பிட்ட கருத்துதான் இது. நாற்பதுக்கும் அதிகமான ஆசிரியர்கள் மத்தியில் பெண்கள் சம்பந்தமான கருத்துக்களை அவர் போகிற போக்கில் கூறிச் சென்ற விதத்தைக் கண்டு நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். பெண்கள் வீட்டில் இருக்க வேண்டும். வீடு சார்ந்த வேலைகளில் பங்களிப்பது தான் சிறந்தது என்பதெல்லாம் பொதுவாகக் கேட்டுப் புளித்துப் போனவை தான். ஆனால் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கூட இக் கருத்துக்களை ஆசிரியர்கள் மத்தியில் கூறியது தான் எனக்கு அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது. இந்தக் கருத்தரங்கு பற்றியும் கருத்தரங்கில் கூறப்பட்ட விடயங்கள் பற்றியும் ஆராய்வது எனது நோக்கல்ல. இவ்வாறான கருத்துணர்வுகளுக்கு காரணங்கள் என்ன? பெண்கள் பற்றிய கருத்துக்கள் ஏன் இவ்வாறு பேசப்படுகின்றன என்று யோசிக்கவும், அது பற்றி எழுத வேண்டுமென என்னைத் தூண்டிய சம்பவம் இது என்பதற்காகவே இதை இங்கு குறிப்பிடுகிறேன். எவ்வாறாயினும், வளரும் குழந்தைகட்கு கல்வியூட்டும் ஆசிரியர்களுக்கு கருத்தரங்கொன்றில் இவ்வாறான கருத்துக்கள் தான் போதிக்கப்படுகின்றன என்ற துர்ப்பாக்கியமான நிலை பற்றி என்னால் கவலைப்படாமல் இருக்க முடியவில்லை. காலத்தோடத்து இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே மாறிக் கொண்டிருக்கிறது. நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ எமது சூழலும் மாறுகின்றது. இந்த மாற்றங்களுக்கேற்ப யாவுமே தம்மை இசைவாக்கிக் கொள்கின்றன. மரம், செடி, கொடியிலிருந்து நுளம்பு கூட இதற்கு விதிவிலக்கல்ல. அப்படி இருக்கும் போது பெண்கள் எப்படி விதிவிலக்காக இருக்க முடியும்?

பெண்களைப் பொறுத்தவரையில் பல ஆண்டுகளாக வீடு, குடும்பம் சார்ந்த உழைப்பில் மட்டும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சமுதாய மாற்றங்களுடன் கால ஓட்டத்தில் அதற்கப்பாலும் பெண்ணின் உழைப்பு தேவைப்பட்டது. புராதன கம்யூனிச சமுதாயத்திலிருந்து நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு மாறிய போதும் சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. பெண்களது வாழ்க்கை முறையிலும் அது மாற்றங்களை ஏற்படுத்தியது.

பெண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபட்ட போதும் குடும்பம் சார்ந்த உழைப்பையும் அவளே செய்ய வேண்டிய நிலை இருந்தது. வேலைகள் சமனாக பங்கிடப்படாமல் இரட்டைச்சுமையுள் அவள் அழுந்தினாள். அவளது சமூக உற்பத்திக்கான உழைப்பு இரண்டாம் தரமானதாகவே கருதப்பட்டது. மீண்டும் குடும்பத்திற்கான அவளது உழைப்பே வலியுறுத்தப்பட்டது. விரும்பவும் பட்டது. இவ்விரட்டிப்பு வேலைப்பழுவிலிருந்து பெண் விடுபட முனையும் போது, அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் போது, குடும்பத்திற்கு வெளியே உலகைக்காண விழையும் போது, மீண்டும் மீண்டும் அடக்குமுறைக்குள் பெண்ணைத் தள்ளுவதற்கான எதிர்ப்புக் குரல்கள் உயர்வாக ஒலிப்பது இயல்பானதுதான். ஏனெனில் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள முடியாத வசதிகளை அனுபவிக்க விரும்பும் அனைவருமே பெண் விடுதலை பெறுவதை விரும்பமாட்டார்கள்.

பெரும்பாலான மக்கள் மத்தியில் பெண் வேலைக்குப் போவதால் தான் குடும்ப உறவு சீரலைகிறது. பிள்ளைகள் சீரழிந்து போகின்றனர். போதை வஸ்து பாவிக்கின்றனர். தீய பழக்க வழக்கங்களால் அழிந்து போகின்றனர். அவர்களுக்கு அன்பு கிடைப்பதில்லை. குடும்ப உறவு அழிகிறது. சமுதாயம் நலிந்து போகிறது போன்ற எல்லாப் பிரச்சினைகளுமே பெண்ணால் தான் உருவாகிறது என்ற கருத்துக்கள் பரவலாக மக்கள் மத்தியில் காணப்படுகிறது. பெரும்பாலான மக்கள் உண்மையைத் தரிசிக்க மறுக்கின்றனர். அவர்களது கூற்றுக்களில் உண்மை இல்லாமல் இல்லை. பிரச்சினைகள் எம் முன் உள்ளன. ஆனால் இவர்கள் பெண்கள் முன் வைக்கும் தீர்வுகள் தான் இன்றைய காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. பரீசீலிக்கப்பட வேண்டியவை.

பல ஆண்டுகளாக குடும்பம் சார்ந்த வேலைகளையே தனது கடமைகளாக செய்து வந்த பெண், சம அந்தஸ்துடன் குடும்பத்திற்கு அப்பால் உள்ள உலகத்திலுள்ளும் தனது பங்களிப்பை செய்ய விழையும் போது குடும்பம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கும். காலம் காலமாக பெண்களது கைகளில் இருந்த சமையலறை, குடும்பம் என்பன மற்றவர்களுக்கும் பங்கிடப்படும் போது அவ்வேலைகளில் குறைபாடும், நேர்த்தியின்மையும் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. அதுவே நிரந்தரமானதல்ல. அதற்கான தீர்வுகள் வைக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் போது பிரச்சினைகளும் மறைந்து போகும்.

இப்பிரச்சினை ஒரு சமுதாயப்பிரச்சினை தனிப்பட ஒவ்வொரு குடும்பத்தின் பிரச்சினையாக கருதமுடியாது. குடும்ப அமைப்பைப் பேணுவதற்கு பெண்களை மீண்டும் வீட்டில் மட்டும் உழைப்பை வழங்குவதற்காக, அதாவது தனது குடும்பத்தைக் காக்கும் பணி பெண்ணினது அதற்காக அவள் வீட்டுக்குள் போயிருந்து வேலையைக் கவனிப்பது தான் வழி என்ற கருத்தை ஒருபோதும் ஏற்க முடியாது.

உதாரணமாக தற்காலக் குழந்தைகள் பால் குடித்து வளர்வதில்லை. தாய்மார் வேலைக்கு போவதால் பால் கொடுப்பதில்லை. இதனால் பிள்ளைகள் நலிந்து போகின்றன. எனவே பெண்கள் வேலைக்குப் போகாமல் வீட்டில் இருந்து பிள்ளை வளர்க்க வேண்டும் என்று ''புத்திசீவி'' ஒருவர் பிரச்சினையையும் அதற்கான தீர்வையும் கூறியிருக்கிறார்.

இதில் கூறப்பட்ட பிரச்சினையை புரிந்து கொள்ள முடியும். ஆனால் அதற்கான அவர் கூறும் தீர்வை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. பிள்ளைக்கு ஒரு தாய் பால் கொடுக்க முடியவில்லையென்றால் அது ஒரு தனிப்பெண்ணின் பிரச்சினை அல்ல. சமுதாயத்தின் பிரச்சினை இதற்கான தீர்வை பரந்த மனதுடன் ஆராய்ந்து தீர்வு காணவேண்டும். பால் ஒரு பிள்ளைக்கு எவ்வளவு காலம் கொடுப்பது சிறந்தது என்பது அறியப்பட்டு அந்நாட்களை தாய்மாருக்கு விடுமுறையாக வழங்க வேண்டும். நோர்வே, கனடா, டென்மார்க், ஸ்வீடன் போன்ற நாடுகளில் பாலூட்டும் தாய்மார்க்கு, பாலூட்டும் நேரங்கள் என குறுகிய நேர விடுமுறைகள் அமுலில் உள்ளன. இப் பிரச்சினைக்கு மாற்றுத் திட்டங்களைப் பற்றி நாமும் யோசிப்பது அவசியம். பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு அதற்கான தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும். அதை விடுத்து கேலியாகவும் கிண்டலாகவும் குடும்பத்தை சீரழிக்கும் பாவிகளாகவும் பெண் சித்திரிக்கப்படுவது ஆணாதிக்கச் சிந்தனை முறையின் மேலாட்சியைக் காட்டுகிறது.

இன்றைய காலம் குடும்ப அமைப்பையே கேள்விக்குள்ளாக்குகிறது. கணவன், மனைவி, குழந்தைகள் என்ற குடும்ப அலகே பெண்களின் அடிமைத்தனத்துக்கும் அடக்குமுறைக்கும் காரணம் என்று தீவிரப் பெண்ணிய வாதிகள் கருதுகின்றனர். திருமணம் என்ற உறவுக்குப் பின்னர் குடும்பம் என்ற அலகு மிக இறுக்கமாகக் கட்டப்படுகிறது. உடைக்கப்படக்கூடாத புனிதமான அமைப்பாக இருக்கிறது. குடும்பத்துள் பெண்ணுக்கு எவ்வளவு மோசமான அடக்குமுறைகள் நடைபெறுவதாக இருந்தபோதும், அதன் ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்தும் கருத்தியல்புகளே சிறந்தது என்று கருதப்படுகிறது. ஆனால் குடும்பஉறவு குறித்த கருத்தாக்கங்கள் காலத்துக்கு காலம் மாறி வந்துள்ள என்பது பற்றியோ, அவை மாறக்கூடியவை என்றோ ஏற்றுக் கொள்ள பலர் தயங்குகிறார்கள். ஒருதார மணமுறை மனிதகுல வரலாற்றில் மிக அண்மைக் காலத்திய ஒன்று என்பதை பலர் மறந்து விடுகின்றனர். பல ஆண்களை ஒரு பெண் முடித்து குடும்பமாக வாழ்ந்ததற்கு பல சான்றுகள் இலக்கியங்களில் காணப்படுகின்றது.

சமுதாய உற்பத்தி முறைமை அதன் உறவுகள், கலாசார விழுமியங்கள் என்பவற்றிற்கேற்ப குடும்ப அமைப்பு காலத்துக்கு காலம் மாறி வந்துள்ளது. எமது இன்றைய சமூக முறைமை ஐம்பது அறுபதுகளில் இருந்ததை விடவும் எவ்வளவோ மாறி விட்டது. பெண்கள் சமுதாய வேலைகளில் பங்களிப்பதால் குடும்பம் சிதைவுறுவதாக கூறுவதாக மிகவும் தவறான கருத்தியல்பு ஆகும். குடும்பம் பற்றிய கோட்பாடுகள் முன்னைய சமூக வாழ்வு முறைக்கேற்ப இயல்பாக்கம் அடைந்ததாக இருப்பதால் இன்றைய வாழ்வு முறைக்கேற்ப அவை தம்மை தகவமைத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. தகவமைத்துக் கொள்ளும் வரையான காலத்தில் குடும்பம் சீரழிந்ததாகப் படுகிறது. இவை சிதைவுகளல்ல மாறாக அமைப்பு புதிய நிலைக்கு ஏற்ப மாற்றுருப் பெரும் போக்கில் ஏற்படும் உடைவுகள் அல்ல வளர்ச்சிகள் என்றே கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் வளர்ச்சியைக் கூட ஒரு பயன் விளைவுள்ள வளர்ச்சியாக மாற்றுவதில் எமது பங்களிப்பை வழங்க முடியும்.

இன்றைய குடும்ப அமைப்பின் போக்கை விமர்சித்து, மாறாக வேறுவழிகள் உருவாகிவருகின்றன. குடும்பம் இன்றைய ஜனநாயக சமூக அமைப்பினுள் உள்ள ஒரு வடிவம் என்பதால் குடும்பத்தில் கணவன் மனைவி குழந்தைகளுக்கிடையிலான உறவினையும் ஒரு ஜனநாயகப் பிரச்சினையாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்று மாக்ஸியப் பெண்ணிலைவாதிகளில் ஒரு பிரிவினர் கருதுகின்றனர். ''புதிய ஜனநாயகத்தை'' சீனாவில் அறிமுகப்படுத்துகையில் குடும்ப வேலைப் பிரிவினை மற்றும் பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையிலான உறவில் சமத்துவம் என்பவற்றைப் பேணுவது பற்றிக் குறிப்பிட்டார். ''ஜனநாயக பூர்வமான'' அடிப்படையில் குடும்பம் அமைதி காணமுடியும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

இன்னொரு சாரார் குடும்பம் என்னும் வழமையான முறைகளை மீறி, ஆணும் பெண்ணும் தம்மால் சேர்ந்து வாழ முடியும் என்று விரும்பும் போது எத்தகைய சம்பிரதாய பூர்வமான திருமண முறைகளுமற்ற புரிந்துணர்வு, சமத்துவம் என்ற அடிப்படையில் ''சேர்ந்து வாழல்'' (Living to gether) என்ற முறைமையினை மாற்றாகக் கருதுகின்றனர்.

இன்னொரு சாரார் குழந்தைப் பேறும், ஆண் பெண் இருபால் உறவுமுறையில் அமைந்த குடும்ப அமைப்புமே சமத்துவமும் ஜனநாயகமும் அற்ற குடும்ப அமைப்பிற்கு காரணமாகின்றன. எனவே ஒரு பால் உறவுக்குடும்பங்களே உண்மையான காதலையும் சமத்துவமான உறவையும் தரும் என்று கூறுகின்றது.

எவ்வாறெனினும் சமூகத்தில் பெண்களின் சம உரிமை, சம அந்தஸ்து என்ற விடயங்களில் அக்கறை இன்றி பெண்ணிலைவாதம் பற்றித் திறந்த மனதுடன் ஆராய யார் மறுத்தாலும் குடும்பம் பற்றிய கேள்விகள் எழுப்பப்பட்டுத்தான் வருகின்றன. காலச் சக்கரம் தனது பாதையில் நகர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதைத் தடுப்பது என்பது சூரியனை கைகளால் பொத்த நினைப்பது போலத்தான்! எனவே இவ்வாறான மாற்று அமைப்புகள் அல்லது மாற்று வழிமுறைகள் பற்றிய கணிப்பீட்டை நிதானமாக உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஆகவே சமுதாயம் தொடர்பான புதிய சிந்தனைகளுக்கு வழிகோலும் வாழ்வுக்கும் அர்த்தம் சேர்ப்பதாக அமையும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு சோடி சப்பாத்துக்கள்

ரூபராணி ஜோசப்



அந்த சோடி சப்பாத்துக்கள் மிகவும் அழகானவையாக இருந்தன. அதன் முன் ஓரங்களில் வைக்கப்பட்டிருந்த சுருக்கமும் அதன் நடுவில் செய்யப்பட்டிருந்த வலைப் பின்னலும் பார்ப்பதற்கு அழகானவைகளாகவும், கறுப்பு நிறத்திலான அந்த சப்பாத்துச் சோடி மிகவும் பளபளப்பானதாகவும் காணப்பட்டன. அவைகள் உயர்ந்த ரகத்திலான தோலினால் செய்யப்பட்டிருந்தது இன்னுமொரு விஷேசமான அம்சமாகும்.

ஸப்பாவுக்கு பெருமை பிடிபடவில்லை. ''கால் மேஸ்'' கூட மிக அழகாகத்தான் இருந்தது. இரண்டையும் வாங்கிக்கொள்ள ஆயிரத்தி நூறு ரூபாக்களாயிற்று. சப்பாத்துக்களை பலமுறை புரட்டிப் புரட்டிப் பார்த்தான். பூனைக்குட்டியை மடியில் வைத்து தடவி விடுவது போல சப்பாத்துக்களைத் தடவிப் பார்த்தான். அவனுக்கு ஒரு பூனைக் குட்டியும் உண்டு. அது இப்பொழுது ஏக்கமாய் சப்பாத்துக்களையும் ஸப்பாவையும் பார்த்துக் கொண்டிருந்தது.

நேற்றுவரை 'சோலாபுரி' செருப்பும் 'றபர்' செருப்பும்தான் அவன் அணிந்து வந்தான். இன்று சப்பாத்துக்கள் வாங்கச் செல்லும் போதும் 'றபர்' செருப்புகளைத்தான் அணிந்து செல்ல வேண்டியதாயிற்று. வெளியூர் பயணங்களில் மட்டும் 'சோலாபுரி' செருப்புகளை அணிவதுண்டு. அவன் பிறந்து இதுகாலவரை சப்பாத்துக்கள் அணிந்தது கிடையாது. இப்போது இருபது வருடங்களின் பின் சப்பாத்துக்களை வாங்கியிருந்தான்.

புதுச் சப்பாத்துக்களாக இருந்த போதிலும் அவைகளை அணிந்து அழகு பார்ப்பதற்கு அவனுக்கு வெட்கமாக இருந்தது. குடும்பத்தினர் முன்னால் இருபது வயதுடைய ஒருவன் புதிய சப்பாத்துக்களை அணிந்து நடந்து பார்க்கச் சங்கடப்பட்டதில் வியப்பேதுமில்லை. ஆனால் சப்பாத்துக்களை அணிந்து பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற ஆதங்கம் நிறைந்திற்று. சிறு குழந்தைகளுக்கு புத்தாடை வாங்கிக் கொடுத்தால் உடன் அணிந்து பார்க்க ஆவல் கொள்ளும் அதேநிலைதான் ஸப்பாவுக்கும் ஏற்பட்டிருந்தது.

இறைவன் ஸப்பாவின் மனநிலையை நன்கு புரிந்து கொண்டிருக்க வேண்டும் அல்லது அவன் அதிர்ஷ்டக்காரனாக இருத்தல் வேண்டும். அன்றுமாலை அவனது தந்தையும் தாயும் வெளியிற் சென்று விட்டார்கள். மூத்த சகோதரன் கூட வெளியிற் சென்று விட்டான். சப்பாத்துக்களை அணிந்து நடந்து பார்ப்பதற்கு சாதகமான நிலைமை ஏற்பட்டிருந்தது. முன்னெச்சரிக்கையாக கதவுகளைக்கூட அடைத்து விட்டான்.

எப்போதும் சப்பாத்துக்களை சாறனுடன் அணியும் போது அதன் அழகு வெளிப்படமாட்டாது. அதற்காக ஸப்பா 'ட்றவுஸர்' அணிந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானாலும் கூட அது அவனுக்கு சிரமமான ஒரு விடயமாகத் தெரியவில்லை. உடன் 'ட்றவுஸரு'ம் 'ஷேட்'டும் அணிந்து கொண்டதோடு நின்றுவிடாது, அண்மையில் வாங்கிய இடுப்புப் பட்டி ஒன்றையும் இடுப்புக்கு அணிந்து கொண்டான். அந்த இடுப்புப்பட்டியை வாங்க எழுபது ரூபா செலவிட்டிருந்தான்.

சப்பாத்துக்களை அணிய முன்னம் 'கால் மேஸ்'களை போட்டுக் கொள்ள வேண்டியிருந்தது. அது மிகவும் கடினமான ஒரு விடயம். இதற்கு முன் அணிந்த அனுபவம் இல்லாமையினால் கரண்டித் காலை கடப்பதற்கு ''கால்மேஸ்'' மிகவும் கவலைப்பட்டது. இரண்டு கால்மேஸ்களையும் முழுமையாக போட்டுக் கொள்வதற்கு பத்து நிமிடங்கள் போய் விட்டன.

சப்பாத்துக்களை மிகவும் மெதுவாக அணிந்தாக வேண்டும். புதுச்சப்பாத்துக்கள் அதில் எவ்விதமான காயங்களும் ஏற்பட்டு விடக் கூடாது. ஒரு வெள்ளைக் காகிதத்தை சுருங்க விடாமல் பாதுகாப்பது போன்று பாதுகாக்க வேண்டும். நிதானமாக கால்மேஸ்களுடன் சப்பாத்துக்களையும் அணிந்து முடிய பதினைந்து நிமிடங்கள் வரை ஆகி விட்டன.

எவ்வாறோ எங்கிருந்தோ அந்த கம்பீரத் தோற்றம் ஸப்பாவுக்கு வந்தது. தமிழ்த் திரைப்படங்களில் போன்று அவைகளை அணியும் வரை சாதாரணமாகத் தானிருந்தான். இப்பொழுது மட்டும் என்னவாயிற்று? ஒரு சோடி கறுப்பு நிற சப்பாத்துகளுக்கு இத்தனை சக்தி இருக்கும் என கனவில் கூட ஸப்பா நினைத்திருக்கவில்லை. அவன் கண்ட எந்தக் கனவுகளிலும் சப்பாத்துக்களின் மகிமை தென்படவில்லை ஸப்பா கனவுகள் காண்பது அதிகம்.

நடக்கும் பொழுது காலில் ஏதோவொரு மாயப் பொருளை கட்டிவிட்டது போலிருந்தது. ஆனாலும் இதனை சமாளித்துக் கொள்ளலாம். எல்லாமே புதிதில் கொஞ்சம் கஷ்டமானதாகத்தானிருக்கும். போகப் போக சரியாகி விடும் 'சோலா புரி' செருப்புக்களை முதன் முதலில் போட்ட போது கூட அப்படித்தானிருந்தது. செருப்புக்களை காலில் அணிந்து கொள்ளாத மாதிரி. ஆனால் இப்பொழுதெல்லாம் 'சோலாபுரி' அணியும் போது அப்படி ஒரு நிலைமை இல்லை.

நடக்கும் போது சிமெந்துத் தரையில் 'டொக்...டொக்'' என சத்தம் வந்தது. அது பிரபல தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளரின் புதிய பாடலொன்றுக்கான இசை போல இருந்தது. வீட்டின் எல்லா அறைகளுக்கும் நடந்து திரிந்து பழகினான். அதுவே அவனுக்கு மிகத் திருப்தி தரும் விஷயமாக இருந்தது. ஞாபகம் இல்லை. ஆனாலும் சிறுவயதில் நடக்கப்பழக எவ்வளவு தூரம் சிரமப் பட்டிருக்க வேண்டும். இப்போது கூட மீன் குஞ்சொன்று நீந்தக் கற்றுக் கொண்டிருந்தது.

வரவேற்பறையில் போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்து, இடது காலின் மேல் வலது காலைப் போட்டுப் பார்த்தான். மேலிருந்த காலின் சப்பாத்து அணிந்த பகுதிகளை ஆட்டிக் கொண்ட பொழுது ஒரு பெருமை வந்தது. கையில் ஒரு 'கோல்ட் லீஃப் சிகரட்டு'ம் இருந்தால் எப்படி இருக்கும். கால்களைத் தூக்கி ரீபோவில் வைத்து பாதிக்கண்களை மூடிச் சிந்தனை செய்வது போல பாசாங்கு செய்தான். நடிப்பதில் எவ்வளவு இன்பம் இருக்கின்றது.

கொழும்புக்குச் செல்வதற்காக உடுப்புக்களை ஸப்பா உடுத்திக் கொண்டாயிற்று. சப்பாத்துச் சோடியில் மெல்லிய தூசு படர்ந்து காணப்பட்டது. இப்போது தான் சப்பாத்துக்களுக்கு போடுவதற்காக 'பொலிஷ்' வாங்காதது ஞாபகத்துக்கு வந்தது. ஆனாலும் பரவாயில்லை. இன்று மட்டும் ஒரு பழைய புடவைத் துண்டால் துடைத்துக் கொள்ள முடியும். அவ்வாறு துடைத்து, ''கரல்மேஸ்''களையும் சப்பாத்துக்களையும் அணிந்து முடித்து கொள்வதற்காக -நேற்றுப்போல சுமார் பதினைந்து நிமிடங்கள் செலவழிக்க வேண்டியிருந்தது.

கொழும்புக்குச் செல்வதற்கு முன்னதாக தனது காதலியிடம் செல்வதை அவன் பெரிதும் விரும்பினான். அவன் காதலி ஒரு சோடி சப்பாத்துக்களை வாங்கி அணிந்து கொண்டே பயணங்கள் போகும்படி பல முறை வற்புறுத்தி வந்திருக்கின்றாள். அவளின் நச்சரிப்பும் ஸப்பா சப்பாத்துக்கள் வாங்குவதற்கு காரணங்களில் ஒன்று. தன் நண்பன் ஒருவனின் வீட்டுக்குச் சென்று விட்டு வருவதாக வீட்டாரிடம் கூறி விட்டு, தன் காதலியின் வீட்டுக்கு பைசிக்களில் சென்றான்.

காதலியின் வீட்டில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட காதலன் ஸப்பா. எனவே உள் நுழைய எவ்வித தடங்கலும் இருக்கவில்லை. எதிர்ப்பட்டவள் காதலி தான். அவளுக்கோ பெருமை பிடிபடவில்லை. உடன் ''இப்பொழுதே உங்களை கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் போலிருக்கின்றது'' என்றாள். கொஞ்சம் விட்டால் காலில் விழுந்து சப்பாத்துக்களை முத்தமிட்டு விடுவாள் போலிருந்தது. அவளிடமும் அவள் குடும்பத்தினரிடமும் விடை பெற்றுவர சுமார் அரை மணித்தியாலயங்களாயிற்று. அவளுக்கு சப்பாத்துக்கள் அணிந்திருக்கும் ஸப்பாவை பிரிவதற்கு சற்றேனும் சம்மதம் இருக்கவில்லை.

வீட்டுக்கு வந்து 'ட்ரவலிங்' பேக்கைத்தூக்கி தோளில் போட்டுக் கொண்டு வெளிக்கிட ஆயத்தமானான். தந்தைக்கும் தாய்க்கும் ஈன்ற பொழுதை விட ஸப்பா சப்பாத்துக்கள் அணிந்த பொழுது மிக மகிழ்ச்சிகரமான நிகழ்வாக அமைந்திற்று. சப்பாத்துக்கள் அணிந்த பின்னர் தான் ஒரு முழுமையான ஆண்பிள்ளை போன்று இருப்பதாக கூறிக் கொண்டார்கள். இதுவரை அரைவாசியோ அல்லது முக்கால்வாசியோ அளவிலான ஆண்பிள்ளையாகத்தான் தான் இருந்ததாக எண்ணி ஸப்பா சற்றுக் கவலையும் கொள்ள வேண்டியிருந்தது.

சகோதரன் கூட மிகவும் அழகாயிருக்கின்றது என்றான். அனைவரின்தும் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழியும் நிலையை எட்டியிருந்தது. ஆனால் கண்ணீர் இன்னும் வெளிவரவில்லை. கூட்டு மொத்தத்தில் ஸப்பா தான் இன்றைய நாளின் ஒரு புதுக் கதாநாயகனாக இருந்தான். ஒரு வெளிநாடு செல்பவனுக்கு வழியனுப்புவது போல அவனை கொழும்புக்கு வழியனுப்பி வைத்தார்கள். ஸப்பா கூட தான் விமானத்திலேயே ஏறி விட்டதாக மனதில் கொண்டு வலது கையை அசைத்தவாறே நடந்தான்.

பாதையில் பைசிக்களில் வந்த நண்பன் சட்டென 'பிரேக்' போட்டு நின்றான். அவன் சற்றும் தாமதிக்காது முதலில் கேட்ட கேள்வி. ''எப்போது நீ சப்பாத்துக்கள் வாங்கினாய்?'' என்றுதான் அவ்வேளை ஸப்பா ஒரு பேட்டி அளிக்கும் தோரணையில் ''நேற்றுத்தான்'' எனக் கூறினான். மீண்டும் நண்பன் ''இந்த கறுப்பு நிற சப்பாத்துக்கள் உனக்கு மிகவும் நன்றாக இருக்கின்றது'' என்றதோடு நின்று விடாது ''இப்போது நீ கார்த்திக் போல இருக்கின்றாய்'' எனவும் கூறினான். கார்த்திக் ஸப்பா மிக விரும்பும் தமிழ் சினிமாக் கதாநாயகர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. சப்பாத்துக்கள் அணிந்ததற்கு 'போனஸ்' பரிசாக அவன் நண்பன் பஸ் தரிப்பிடத்திற்கு பைசிக்களில் ஏற்றிச் சென்றான்.

பஸ் ஏறும் இடத்தில் பலர் நின்றார்கள். அதில் மற்றும் ஒருவரும் சப்பாத்துக்கள் அணிந்திருந்தார்கள். அவைகள் பத்தம் பழையவை, தரிப்பிடத்தில் நின்றவர்கள் கள்ளக்கண்களால் ஸப்பாவின் சப்பாத்துக்களையும் மற்ற நபரின் பழைய சப்பாத்துக்களையும் நோட்டமிட்டனர். குறிப்பாக சம்மாந்துறை தொழிநுட்பக் கல்லூரிக்கு போவதற்காக நின்ற பதினெட்டு வயதையுடைய மாணவியொருத்தி அதிகமாக நோட்டமிட்டாள். அவளிடம் சென்று ஏதாவது ஒரு தேவைக்காக ஸப்பா 'எக்ஸ்கியுஸ் மீ' எனக் கூறி கதைக்க ஆரம்பிக்கும் பட்சத்தில் அவள் ''ஐ லவ் யூ'' எனக்கூற மாட்டாள் என்று என்ன நிச்சயம். பளபளக்கும் புதிய சப்பாத்துக்களுக்காக அவள் எதையும் செய்யத் தயாராவாள் போன்றிருந்தது.

பஸ்ஸில் ஏறிய பின்பு தான் அந்தப் புதினம் நடந்தது.

பத்தம் பழையவைகளை அணிந்தவரும் பஸ்ஸில் ஏறி நின்று கொண்டிருந்த பிரயாணிகளில் ஒருவர். அவர் தவறுதலாக அல்லது கவலையீனமாக அவ்வாறில்லாவிட்டால் வேண்டுமென்றோ மாதரசியொருத்தியின் கால் விரல்களை மிதித்து விட்டார்.

அதற்கு அப்பெண் ''வடிவா சப்பாத்து போட்டுக் கொண்டு வருவானுகள் கண்மட்டும் குருடாய் இருக்கும்'' என மெதுவாக முணு முணுத்துக் கொண்டாள்.

கேவலம் அந்தப் பத்தம் பழைய நிறம் மங்கியசப்பாத்துக்களை 'வடிவா சப்பாத்து போட்டுக கொண்டு' என்றவள் சொன்னது ஸப்பாவுக்கு எள்ளளவும் பிடித்ததாக இல்லை. 'தனது புத்தம் புதிய கறுப்பு நிற, பளபளக்கும் சப்பாத்துக்களைப் பார்த்து அவ்வாறு கூறுகின்ற பட்சத்தில் அவன் மிகவும் மகிழ்ந்திருக்ககூடும். அதற்காக →

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டி மிகவும் நூதனமாக வைத்திருக்கும் தனது சப்பாத்துக்கள் அணிந்த கால்களை கவலையீனமாக விட்டுக்கொண்டிருக்க அவனுக்கு துளிகூட இஷ்டம் வரவில்லை.
கொழும்பில் சென்று இறங்கியாயிற்று. இங்கும் கூட எல்லோரும் இவனது சப்பாத்துக்களையே பார்த்துச் செல்வதாகப்பட்டது. கொழும்பில் உள்ள நபர்கள் அனைவரும் எப்போது பட்டிக்காட்டான் ஆனார்கள் என்பது ஸப்பாவுக்கு புரியாத புதிராகவே இருந்தது. சில மாயக் கதைகளைப் போல. அவர்களனைவரும் தனது சப்பாத்துக்களையே பார்த்துச் செல்வதால் ஒரு பெரிய மனிதன் நடப்பது போல நெஞ்சை நிமிர்த்தி நடக்க வேண்டி இருந்தது. அவ்வாறு நடந்து செல்லாத பட்சத்தில் தன்னைத்தான் எல்லோரும் பட்டிக்காட்டான் என நினைத்து விடுவார்கள் என்ற பயம் ஸப்பாவின் மனதில் எழுந்து நின்றது.
நெடுகவும் நடந்ததால் களைப்பாக இருந்தது. சுடச்சுட தேனீர் அருந்தும் நோக்கோடு 'கபே' ஒன்றினுள் நுழைந்தான். அந்தக் 'கபே'யின் 'வெயிட்டர்' கூட அவனது சப்பாத்துக்களை ஒரு முறை பார்த்துக் கொண்டதை நன்றாக அவதானிக்க முடிந்தது. அவனும் அதே மாதிரியான ஒருசோடி சப்பாத்துக்களை வாங்க நினைத்திருக்கலாம். 'என்ன வேண்டும்' எனக்கேட்டு 'ஓடர்' எடுத்துச் செல்லும் போதும் ஒருமுறை ஸப்பாவின் சப்பாத்துக்களைப் பார்த்துச் சென்றான். அதன் பளபளப்புத்தான் அவனைக் கவர்ந்திருக்க வேண்டும். அல்லது நடுவிலிருக்கும் வலைப்பின்னலாகவும் இருக்கலாம்.
ஸப்பா அமர்ந்திருந்த மேசைக்கு நேரெதிரே காணப்பட்ட மேசையில் கண்ணாடி போட்ட ஒருவர் அமர்ந்திருந்தார். அந்த மனிதர் ஸப்பாவை அடிக்கடி பார்த்தார். அவர் 'கோட்' அணிந்திருந்ததோடு சப்பாத்துக்களும் அணிந்து காணப்பட்டார். அவைகள் பழுப்பு நிறமானவை. அந்த சப்பாத்துக்கள் கூட ஸப்பாவினுடையதைப் போல பளபளப்பானதாகவோ அழகானதாகவோ இருக்கவில்லை. சுருக்கம், வலைப்பின்னல் கூட காணப்படவில்லை. அந்த மனிதர் ஸப்பாவைப் பார்த்து புன்னகைத்தார். அவர் புன்னகை கூட ஒரு பெரிய மனிதத் தோரணையில் அமைந்து இருந்தது. தனக்கு அவ்வாறு புன்னகை செய்ய முடியாததை இட்டு மிகவும் கவலைப்பட்டான்.
'வெயிட்டர்' சிவப்பு நிறமான தேனீரை தந்துவிட்டுப் போனான். அந்தக் கண்ணாடி மனிதர் ஸப்பா அமர்ந்திருந்த மேசையின் மற்றொரு கதிரையில் வந்தமர்ந்தார். அவர் மீண்டுமொரு முறை புன்னகை செய்தார். ''எக்ஸ்கியூஸ் மீ'' என்று அவர் ஸப்பாவைப் பார்த்துக் கூற ஸப்பாவுக்கோ ஆகாயத்தில் பறப்பது போலிருந்தது. அதே மாயையான கிறக்கத்தில் 'யேஸ்' என்றான். அது ஒரு பெரிய மனிதர் சொல்வது போலத்தானிருக்கும் என நினைத்துக் கொண்டான். ஆனாலும் போதை மருந்து பாவித்தது போல ஒரு மயக்க நிலை தனக்கு எவ்வாறு ஏற்பட்டது என அவனால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியவில்லை.
''இந்த சோடிச்சப்பாத்துக்கள் மிகவும் பளபளப்பாகவும் அழகானதாகவும் க...ப்படுகின்றதே எங்கே வாங்கிக் கொண்டீர்கள்'' என்று கேட்டார். தனது சப்பாத்துக்களுக்கு இத்தனை மதிப்பிருப்பதை எண்ணி அந்த மயக்கமான நிலையிலும் பூரித்துப் போனான்.
அந்தக் கேள்விக்கு பதில் சொல்வதற்கிடையில் தனது காலை யாரோ சுரண்டுவது போலிருந்தது. குனிந்து பார்த்த பொழுது கதிரையில் இருந்து விழப்பார்த்தான். பெரிய மனிதரையோ, 'கபே'யையோ காணவில்லை. பூனை அவனது காலை சுரண்டிக் கொண்டிருந்தது. ஒரு சோடி சப்பாத்துக்களுக்காக கதிரையில் சாய்ந்தவாறே கனவு கண்டதை எண்ணி ஸப்பா வெட்கித்தான்.
மறுநாள் ஸப்பா கொழும்புக்குச் சென்றான். எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு நான்கு நாட்களின் பின் வீடு திரும்பினான். சப்பாத்துக்கள் தனது பொலிவை இழந்து மங்கிப் போயிருப்பதை எண்ணி மிகவும் மனம் நொந்து போனான். ஆனாலும் இதனைவிட ஸப்பாவுக்கு மிகவும் கவலை தந்த விடயம் தனது புதிய ஒரு சோடி சப்பாத்துக்களைப்பற்றி யாரும் ஒரு வார்த்தை தானும் கேட்காமை தான்.

# மறுபக்கம்.




பெருவாரியாக வெளிவரும் ஜனரஞ்சக மசாலா தமிழ்ப்படங்களிடையேயும் நமது விஷேச கவனத்தைக் கோரும் சில திரைப்படங்களின் தொடர்ச்சியானது தமிழ்த்திரைப்பட வரலாற்றின் ஆரம்பமுதலே ஒரு மெல்லிய இழை போல் தொடர்ந்து வந்திருக்கின்றது. அந்த இழையின் கடைசிக் கண்ணியாக ''மோக முள்'' இயக்குனர் ஞான ராஜசேகரன் சேர்ந்து கொள்கிறார்.
''மோக முள்'' சிறந்த தமிழ் நாவல்களுள் ஒன்று. தி.ஜானகிராமன் எனும் பெருமைக்குரிய படைப்பாளியின் அற்புதமான நாவல். நாவல்களைத் திரைப்படமாக்கும் போது ஏனைய இயக்குனர்கள் எதிர்கொண்ட ஆபத்தை ஞான ராஜசேகரனும் எதிர்கொண்டுள்ளார்.
புனைகதையாளன் திரைப்பட இயக்குனரை விடவும் சில வகைகளில் பலம் வாய்ந்தவன். ''மோகமுள்'' நாவலிலும் திரைப்படத்திலும் இடம்பெறும் தி. ஜானகிராமன் அவர்களின் வார்த்தைகளில் ஒன்றை இங்கு சுட்டிக் காட்டுதல் பொருத்தமானது.
''கேட்கிற சங்கீதத்தை விட கேட்காத சங்கீதம் இனிமையானது'' இதையே கண்ணதாசனும் ''சொல்லாத சொல்லுக்கு விலையே தும் இல்லை'' என்கிறார்.
நாயகி ஜமுனாவைப் போல், விலை மதிக்கமுடியாத ஊமைச் சுகங்களை அள்ளித்தருவதில் ஒரு தேர்ந்த புனைகதையாளன் திரைப்பட இயக்குனரைவிடவும் பலம் வாய்ந்தவன். 'இந்த முக்கிய அம்சமே நாவல்கள் திரைப்படமாக்கப்படும் போது ஒப்பீட்டு அடிப்படையில் நாவலை தூக்கி நிமிர்த்தும் பிரதான காரணிகளுள் ஒன்றாக அமைகிறது.
கம்பெரலிய, பதேர் பாஞ்சலி, போரும் காதலும் போன்ற நல்ல நாவல்கள் அத்திரைப்படங்களை விடவும் பலம் வாய்ந்தனவாய் இருப்பதை நாம் அவதானிக்கலாம். அதே போல் திரைப்படத்தை விடவும் ''மோக முள்'' நாவல் மிகப் பலமடங்கு பலம் வாய்ந்ததாய் இருப்பதை நான் கண்டேன்.
ஞான ராஜசேகரன் கூடிய சிரத்தை எடுகொண்டு இத்திரைப்படத்தை உருவாக்கியுள்ளார் என்பது உண்மையே. ஆனாலும்.......
தி. ஜா. அவர்கள் பெண்ணிலை வாதிகளால் கடுமையாக விமர்சிக்கப்படுபவர். ஆனால் திரைக்கதையாக்கத்தில் ஞானராஜசேகரன் செய்துள்ள தவறு காரணமாக, அவர் தி. ஜா. வை விடவும் மிகவும் காட்டமாக பெண்ணிலைவாதிகளில் கண்டிக்கப்பட ஏதுவாகின்றது.
ஞான ராஜசேகரன் மிக முக்கிய..... மிகமிக முக்கியமான பகுதிகளை திரைக்கதையிலிருந்து நீக்கியிருக்கிறார்.

ஒன்று - வடக்கத்திய பாடகர்களின் பிரசன்னம் பாபுவின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம்.

இரண்டு - ஜமுனா பாவுவைத் தேடி வரும் போது ஜமுனாவின் தாழ்ந்த பொருளாதாரநிலை. உறவு, ஆதரவு என்பவற்றில் அவளது புகலற்ற நிலை. (ஜமுனா பாபுவிடம் சரணடைவதற்கு உண்மைக்காரணங்கள் அவையே)

மூன்று - ஜமுனா, பாபு ஆகியோரின் சேர்க்கையின் பின்னர் பாபு அவளையும், அவளை விட்டு அழியும் அவளது யௌவனத்தையும் பிரிந்து சங்கீத சிட்சைக்காக சில நீண்ட ஆண்டுகள் செல்லுதல்.

இம் மூன்றுமே நாவலில் பிரதானமாக எம்மை குத்தும் முட்களாகும். இம் மூன்று முட்களுமே திரைப்படத்தில் ஒடிக்கப்பட்டுள்ளன.

திரைப்படம் முனை முறிந்த மோகமுள் ஆகிவிட்டது.

85 நாட்கள் இத்திரைப்படம் ஓடியுள்ளது. வெற்றிதான். அடுத்த படத்தின் வேலைகளை இயக்குனர் ஆரம்பித்திருப்பதா கேள்வி. அடுத்த படத்திலும் இவ்வாறான தவறுகள் செய்யாதபடிக்கு யாராவது சுட்டிக்காட்டுவார்களா?

## கிராமங்களின் மீது நகரங்களின் ஆதிக்கம்!

கிராமத்துக் கதைகள் என்று கூறப்படுபவை அதிகமாக படங்களாகும் காலம் இது. இந்தக் கிராமத்துக் கதைகளை உற்று நோக்கினால் முக்கியமான ஒரு ஒத்த அம்சத்தை நாம் காணலாம். கிராமத்தின் அமைதியான வாழ்வு, நகரத்தின் ஒரு கூறு கிராமத்தின் மீது நிகழ்த்தும் திடீர்த்தாக்குதலினால் திடீர் உந்துதல் பெற்று விடுதலே அது. அதன் பிறகுதான் கதையே(!) ஆரம்பமாகும்.

நல்ல(!) திரைப்படங்களாகச் சிலாகிக்கப்படும் எந்தத் திரைப்படத்தையும் இதற்கு உதாரணமாக காட்டலாம்.

அன்னக்கிளி - பட்டணத்து ஆசிரியரின் பிரவேசம். அதற்குப் பிறகு தான் ''அன்னக்கிளி ஒன்னைத் தேடுதே'' என்று கதை சூடு பிடிக்கும்.

பதினாறு வயதினிலே - பட்டணத்து வைத்தியன் பிரவேசம். அதற்குப்பிறகுதான் ''ஆத்தா ஆடுவளத்தா, கோழிவளத்தா'' என்று பிரலாபம் ஆரம்பமாகும்.

புதியவார்ப்புக்கள் - ஆசிரியர், சமூகசேவகியின் பிரவேசம். அதன் பிறகுதான் கதை சூடுபிடிக்கும். இன்னும் கொஞ்சம் பின்னே சென்றால்........

பாகப்பிரிவினை - சிங்கப்பூரிலிருந்து மைத்துனன் வருகை. அதற்குப்பிறகுதான் சிங்கப்பூரான் குடியைக் கெடுக்கிற கதை தொடங்கும். இது தமிழில்......

சிங்களத்தில் பார்த்தாலும் இவற்றை நாம் காணலாம். ஆனால் தமிழ் இயக்குனர்களை விடவும் சிங்கள இயக்குனர்கள் இதை சற்று பிரக்ஞை பூர்வமாகவும் மிதமாகவும் கையாள்கிறார்கள்.

உதாரணமாக:

மல்தெனிய சிமியோன்:- பொலிஸ்காரர்களின் பிரவேசம். அதன் பிறகு நாயகியின் பட்டணப் பிரவேசம் ஆகியனவே கதையை நகர்த்திச் செல்கின்றன.

மீஹரக்கா:- பட்டணத்திலிருந்து வரும் சாரதிகள் பிரவேசம். பட்டணத்து ஆசிரியை கிராமத்தில் ஏற்படுத்தும் தாக்கம் ஆகிய வற்றை துல்லியமாக உணரலாம்.

செய்லம:- பட்டணத்திலிருந்து வரும் வியாபாரிகளே கிராமத்துப் பெண்களின் வாழ்வைச் சிதறச் செய்கின்றனர்.

ஆதர ஹசுன:- இராணுவ வீரர்கள், தீவிரவாதிகளின் பிரவேசம் ஒரு பெண்ணின் வாழ்வை அடியோடு மாற்றுகிறது.

நீங்களும் இவ்வாறு ஆராய்ந்து பார்க்கலாம்.

கிராமம் ஒரு உலகம். நகரம் இன்னொரு உலகம். இரண்டும் கலக்கும் போது கதைகள் பிறக்கின்றன. கலகங்கள் பிறக்கின்றன. யுத்தங்கள் நிகழ்கின்றன.

எமது கதைகளையும், கலகங்களையும், யுத்தங்களையும் பற்றி எப்போது நாம் பிரக்ஞை பூர்வமாக உன்னதப்படைப்புக்களாக தரப்போகிறோம்...... எப்போதும்?

ஜெர்மனியத் திரைப்பட இயக்குனரான ''எட்கார் ரெயிட்ஸ்'' ஒரு தரம் கூறியிருக்கிறார்.

''மாபெரும் வரலாற்று நிகழ்வுகளுக்குள்ளே எமது சின்னஞ்சிறு கதைகள், சின்னஞ்சிறிய ஆசைகள், சின்னஞ்சிறிய துக்கங்கள், சின்னஞ்சிறிய காதல்கள், சின்னஞ்சிறிய தோல்விகள், சின்னஞ்சிறிய சிரிப்புகள் எல்லாமே மறைந்து போயுள்ளன''

எமது இன்னைய யதார்த்தமும் அது தான். அதை யாராவது வெளியே கொண்டு வருவார்கள்.

ஆழ்வார்க்குட்டி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## இடதுசாரிகள் மீது ஏன் இந்த வசைபாடல்?

என்னுடைய கடிதம் வந்த இதழிலேயே (சரிநிகர் 73) என் வேண்டுகோளுக்கு இணங்கத் துடைப்பானின் ஐரோப்பிய நாடக அரங்கம் பற்றிய நகைச்சுவைக் கட்டுரையை வெளியிட்டமை பாராட்டுக்குரியது. (நகைச்சுவைப் பகுதி என்ற தலைப்பை ஏனோ மறந்து விட்டீர்கள்) நாடகம் பாராமலே விமர்சனம் எழுதும் ஆற்றல் நம்மிடையே மிகுதியாக உண்டு. அது போலவே, கலந்துரையாடல்களில், காதில் விழுகிற விஷயங்களைக் குழப்பிக் கொண்டு எழுதும் ஆற்றலும் நம்மிடையே உண்டு. பாரிஸ் நாடக விழாவிற்கு வந்தோர் அனேகரல்லர் எனவும் கலந்துரையாடலில் பங்குபற்றினோர் தொகையும் சிறிதே என்றும் அவைக்காற்றுக் கலைக் கழகத்தினர் மூலம் அறிந்தேன். நோர்வே நிலவரம் அதற்கு மாறானது. எனினும் பாரிஸில் நாடகம் நடத்துகிறவர்களில் பெரும்பாலானோரை காணக் கிடையாமையையிட்டு பாலேந்திரா குறைப்பட்டுக் கொண்டார். அவைக் காற்றுக் கலைக்கழகம் லண்டனுக்கு வந்த பின்பு பாரத தர்மம், தரிசனம், பிரத்தியேகக் காட்சி, போகிறவழிக்கு ஒன்று, எரிகிற எங்கள் தேசம் ஆகிய மேடை நிகழ்வுகளை புதிதாகத் தயாரித்தது. அவற்றை விடத் தப்பி வந்த தாடி ஆடு சிறுவர் நாடகம் புதிதாகத் தயாரிக்கப்பட்டது. சமூக விரோதியும் இன்னுமொரு தழுவல் நாடகமும் (ஹவெல்) மலைகளை அகற்றிய மூடக் கிழவன் என்ற சிறுவர் நாடகமும் தயாரிப்பில் உள்ளதாக அறிகிறேன்.

துடைப்பான் என்ன சொல்ல முனைகிறாரென்று விளங்குவது சிரமமாகவே உள்ளது. ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு குறிப்பிட்ட (?) தத்துவார்த்த உணர்வுகளையும் பண்புகளையும் பிரதிபலிக்கும் நாடகங்கள் வேண்டாம் என்கிறாரா? அவற்றை மேடையேற்றும் கலைஞர்கள் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருப்பது(?) தான் அவரது கவலையா? இவ்வாறான கவலையைத் தாஸீஸியஸோ பாலேந்திராவோ வெளிப்படுத்தவில்லை.
ஔவையார், மயானகாண்டம் சுவடிகளை யாராவது தேடி எடுத்து அனுப்பி வைத்து ஐரோப்பிய நாடக உலகைப் பாதுகாப்பானதாக்க உதவுவார்களா? அனைத்திலும் முக்கியமாக ஒகஸ்தோ போல், டென்னிஸ் வில்லியம், ஆங்கார ஒயில்ட் எனும் மூன்று புதிய நாடக மேதைகளை நமக்கு அறிமுகம் செய்துள்ள துடைப்பான் அவர்களது ''நாடகப் பிரதிகளைப் படித்து அவற்றினை தமிழில் தழுவல் நிலை கொண்டு தயாரித்து'' அளித்து நம்மை மேலுஞ் சிரிப்பில் ஆழ்த்த வேண்டுமென மனமார வேண்டிக் கொள்கிறேன்.

இடதுசாரி அரசியல் வாதிகளுக்கு அரிச்சனை பாடும் பருவம் இன்னொரு காற் தொடங்கி விட்டது. ஓதுகிறவர்கள் முதலில் எந்தப் பாராளுமன்ற அரசியல் தலைமை தான் யோக்கியமாக இருந்தது என்று சொல்லிவிட்டு அரிச்சனையைத் தொடர்வது பயனுள்ளதாக இருக்கும். மு. கார்த்திகேசன், நா. சண்முகதாசன், கே. ஏ. சுப்பிரமணியம் போன்றோரது அரசியல் நேர்மை பற்றித் தமிழர்கள் அறியாமலிருக்க முடியாது. எந்தத் தமிழ் தேசியவாதத் தலைமையினதும் யோக்கியம் அதற்கு உறைபோடக் காணாது. வொட்ஸன் ஃபெர்ணான்டோ மிக நேர்மையான ஒரு தொழிற்சங்கத் தலைவராயிருந்தார். எட்மண்ட் சமரக் கொடியை எவ்வளவு எளிதாக மறந்து விடுகிறோம். இனவாத அரசியலின் எழுச்சியின் பின்பு அதற்குத் தாக்குப் பிடித்துப் பாராளுமன்ற அரசியலில் நிலைப்பது எளிதல்ல. பல குறைபாடுகள் இருந்த போதும் சரத் முத்தெட்டுவேகம 80களில் தமிழ் மக்களுக்கு நியாயம் கோரும் தனிக் குரலாகப் பாராளுமன்றத்தில் ஒலித்ததை நாம் மறந்து விடலாம். சந்திரிகா வகைறாயக்களை இடதுசாரிகளாகக் கருதலாம் என்றால் அது இடது சாரிகள் பற்றிய நமது புரிதலின் கோளாறு. தமிழர்கள் என்றேனும் இடது சாரி அரசியல் வாதிகளை நம்பி ஏமாந்ததாகக் கூற இடமில்லை. அவர்கள் நம்பியது தமிழ்த் தேசிய தலைவர்களையே. அவர்கள் தமிழர்களை ஏமாற்றினார்கள். அவர்களைச் சிங்களப் பேரினவாதிகள் ஏமாற்றினார்கள். இடதுசாரி இயக்கத்தின் சீர் குலைவிற்குப் பாராளுமன்ற அரசியலின் பங்கு பெரிது. இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கான பாதை நிச்சயமாகச் சிங்கள தேசியவாதிகளிடம் இல்லை. வலது சாரிகளிடமும் இல்லை. சகட்டு மேனிக்கு இடதுசாரிகளின் மீது வசைபாடுவது சுகம். மாற்றாக உருப்படியாக என்ன இருக்கிறது என்று தேடுவது சிரமம். தமிழ்த் தேசியவாதிகளின் அரசியலின் யோக்கியதையை விமர்சிப்பது தமிழரது நிலைமைக்கு ஒருவேளை கூடப் பொருத்தமானதும் அவசியமானதுமாகலாம். (சில சரிநிகர் கட்டுரைகள் இவ்வகையில் மிகவும் வரவேற்கத் தக்கன).

**சிவசேகரம்**
**லண்டன்**




## பின் கதவால் எப்படிப் போகும்?

தங்களின் சரிநிகர் இதழ் 74ல (ஜுன்15-ஜுன்28, 1995) தவறான ஒரு கடிதம் இடம்பெற்றுள்ளது. ''பின்கதவால் போய்விடும் மருந்து'' என தலைப் பிட்ட கடிதமே அதாகும். அப் புகாரின்படி திருமலை மடத்தடிச் சந்தியில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலையில் மருந்துகள், பெரும் தொகையாக இருப்பது போலவும், அது மாயமாக மறைந்து விடுவதாகவும் நினைத்து விசாரியாது, தவறான மேலோட்டமான எழுந்தமான ரீதியில் கடிதம் பிரசுரித்து இருப்பது வேதனையானதும், பிழையானதுமாகும் என தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலில் சில உண்மைகளைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.
1. வைத்தியசாலைக்கு ஏதோ தொகையான மருந்துகள் அனுப்பப்படுவதான தவறான நோக்கு.
2. வைத்தியசாலை அரசாங்கத்தால் பராமரிக்கப்படுவது இல்லை. திருகோணமலை நகராட்சி மன்றத்தால் தான் நடாத்தப்படுகின்றது.
3. நகராட்சி மன்றங்கள் போதிய நிதி வசதியின்றிக் கஷ்டப்படுகின்றன.
4. கஷ்டத்தின் மத்தியிலும், நகராட்சி மன்றம் இயன்றளவு மருந்துகளை விநியோகித்து பரிபாலித்து வருகின்றது.
5. வரும் ம்ருந்துகள், இங்குவரும் தொகையான நோயாளிகளுக்கு போதுமானது இல்லை.
6. ஆகவே மருந்துகளை எழுதி வெளியில் வாங்கும்படி கூறவேண்டி ஏற்படுகின்றது.

எனவே மேற்கூறிய உண்மைகளை கருத்தில் எடுக்கவேண்டும். மேலும் ஆயுர்வேத திணைக்களம் ஒரு நோயாளிக்கு ரூபா இரண்டு வீதம் வழங்குகின்றது. இன்றைய் மருந்துகள் விற்கும் நிலையில் ரூபா இரண்டு மூக்கு பொடி போடக் கூடக் காணாது. ஒரு நோயாளிக்கு மருந்து வழங்கும் போது, இன்றைய நிலையில் சராசரி ரூபா நாற்பதுக்குக் கிட்ட செலவு ஆகிறது.

ஆகவே நகராட்சி மன்றம் தான் இச் செலவைப் பொறுப்பேற்க வேண்டியுள்ளது. இன்று நகராட்சி மன்றம் போதிய வருமானம் இன்றி தன் செலவுகளைக் கட்டுப்படுத்தமுடியாது, கஷ்டப்படுகிறது. இந்நிலையில் அவர்கள் தமது நிதிவசதிக்கு ஏற்ப மருந்துகளை காலத்துக்குக் காலம் எடுத்து அனுப்புகின்றார்கள்.

இங்கு வரும் நோயாளர் எண்ணிக்கை அதிகமாகும், அதனால் மருந்துகள் வந்தவுடனேயே ஒரு சில வாரங்களில் முடிவடைந்து விடுகின்றன. இனி எண்ணெய் வகை சரியான விலையாதலால் அவை வருவதும் குறைவாகும்.

இந்நிலையில் வரும் நோயாளர்க்கு ஏதோ இயன்றளவு மருந்துகளைக் கொடுத்து திருப்திப் படுத்துகின்றோம். இதனால் பல நோயாளர்கள் இங்கு தேடி வருவதும் குறிப்பிடவேண்டியதும் ஆகும். இல்லாத மருந்துகளை வெளியில் வாங்கிப் பாவிக்கும்படி எழுதிக் கொடுத்து விடுகின்றோம். விருப்பமானவர்கள் வாங்கிப் பாவிக்கின்றார்கள். ஆங்கில மருந்து பாமர்சிகள் நிறையவே உள்ளன. அவற்றில் எதிலும் மருந்துத் துண்டை கொடுத்து வாங்க முடியும். ஆனால் ஆயுர்வேத மருந்து பாமர்சிகள் என்று தனியாக ஒன்றுமில்லை. சமீபத்தில் தான் ஒன்று திறந்துள்ளார்கள், அதில் மட்டுமே ஆயுர்வேத மருந்து, கூட்டுத்தாபன மருந்து வாங்க முடியும். எனவே எங்கே மருந்து வாங்க முடியும் எனக் கேட்பவருக்கு அங்கு போய் வாங்குங்கள் எனக் கூறி விடுகின்றோம். இதில் தவறான நோக்கம் ஒன்றும் இல்லை என்பதை அறியத்தருகின்றேன்.

ஆகவே தங்கள் சரிநிகரில் பிரசுரிக்கப்பட்ட விடயம், தவறான மேலோட்டமான கருத்தில் எழுதப்பட்டது என்றே எண்ணவேண்டியுள்ளது. அக்கூற்றையும் நாம் வன்மையாக மறுக்கின்றோம்.

**வைத்திய பொறுப்பதிகாரி,**
**இலவச ஆயுர்வேத மருத்துவ நிலையம்,**
**மடத்தடி,**
**திருகோணமலை.**

## பொலிஸில் முறையிடுவதே பொறுப்பான செயல்

சரிநிகர் ஜுன் 15, ஜுன் 28, 1995க்குரிய 74ம் இதழில் இரண்டாம் பக்கத்தில் ''மட்டு.செஞ்சிலுவைச் சங்கம் இன்னொரு ஊழல் தலைவர்'' எனும் தலையங்கத்தின் கீழ் என்னையும் நான் சார்ந்த கட்சியையும் உண்மைக்குப் புறம்பாக அவசியமில்லாமல் தொடர்பு படுத்திக் கூறப்பட்டிருக்கின்றது. இதனை நான் வன்மையாக ஆட்சேபிக்கின்றேன்.

அண்மையில் வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் ஆரையம்பதி பிரதேச சபைத் தலைவர் ரொபர்ட் நவரெத்தினராசாவின் உறவினர்களுக்கு வழங்கப்பட்டது என்ற வாசகம் உண்மைக்குப் புறம்பானது.

கிராமசேவை உத்தியோகத்தர்களினதும், பிரதேச செயலாளரினதும் சிபார்சின் படியே மேற்குறிப்பிட்ட பொருட்கள் வழங்கப்படுவது நடைமுறை ஒழுங்கு என அறிகிறேன். இதற்குப் புறம்பாக மேற்காட்டிய தலைவர் நடந்திருந்தால் அவர் மீது குற்றம் சுமத்தி மேலதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்ய வேண்டியதும், மேலதிகாரிகள் அம்முறைப்பாட்டை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டியதும் அவர்களுக்குரிய கடமையாகும். நடைமுறை ஒழுங்கின் படிதான் மேற்கூறிய உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டிருந்தால் வழங்கப்பட்ட பட்டியலை பரிசீலனை செய்து அப்பட்டியலில் மேற்காட்டிய பிரதேச சபைத் தலைவரின் உறவினர்களுக்கு தகாத முறையில் (உறவினர்கள் என்ற ஒரே காரணத்துக்காக) வழங்கப்பட்டிருந்தால் அதை பகிரங்கமாக அம்பலப்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு மேலதிகாரிகளைக் கேட்பதே முறை. அதைவிட்டு உண்மைக்குப் புறம்பான முறையில் என்னை அவமானப்படுத்த முற்படுவது நேர்மைக்குப் புறம்பான அநாகரிகச் செயலாகும். எனவே, மேற் கூறிய முறைகெட்ட செயல் பற்றிய புகாரை உரியவர்களுக்கு அறிவித்து உண்மையைக் கண்டறிவதே உரிய பரிகாரமாகும். இன்னும் காலம் கடந்து விடவில்லை. எனவே உரிய முயற்சியை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து வன்செயலால் பாதிக்கப்பட்ட சலவைத் தொழிலாளரும், சவரத்தொழிலாளருமாகிய வறிய மக்களுக்கு உதவுவதற்காக கொடுக்கப்பட்ட பொருட்கள் மண்முனைப் பற்று செஞ்சிலுவைச் சங்க தலைவரின் உறவினர் வீட்டில் இரகசியமான முறையில் வைக்கப்பட்டிருந்தால், அது இரகசியமான முறையில் பொலிஸிற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டுமல்லவா? அதுவே புத்திசாலித்தனமான செயல். அதைச் செய்யாமல் செய்யக்கூடாததைச் செய்யலாமா? செஞ்சிலுவைச் சங்கத் தலைவரின் உறவினர்களுடைய வீட்டுடன் தொடர்புபட்ட சம்பவத்துடன் எமது கட்சியை உண்மைக்குப் புறம்பான முறையில் சம்பந்தப்படுத்துவதால் எந்தவித பயனும் ஏற்படப்போவதில்லை.

**கே. நவரட்னராஜா ஜே.பி**
**ஆரையம்பதி.**

## உண்மையே அல்ல!

தங்களது ஜுன் 15 - ஜுன் 28, 1995ந் திகதிய பத்திரிகையில் 15ம் பக்கத்தில் வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக பதவி வகிக்கும் என்னைப் பற்றி தங்களால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு ஒன்றை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கப்பெற்றது.

அச்செய்திக்குறிப்பில் என்னைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் முற்றுமுழுதும் உண்மைக்குப் புறம்பானவையாகவும், எனது உத்தியோக வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும் மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்துவனவாயும் அமைகின்றன.

எனது பணிமனையிலும் என்னோடு தொடர்புபட்டுள்ள உள்ளூராட்சி மன்ற விடயங்களிலும் நீதியான முறையிலும், நேர்மையான முறையிலும், ஒழுக்கமான முறையிலும், ஊழல், கைலஞ்சம் அற்ற முறையிலும், நிர்வாகத்தை வழிநடத்தி செல்வதிலும், அபிவிருத்தி நடவடிக்கைகளில் முக்கிய கவனமெடுத்து, அபிவிருத்தி முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதிலும், கருமங்களை ஆற்றுவதிலும் நான் ஈடுபட்டிருக்கின்ற வேளையில், தங்களது மேற்படி செய்திக் குறிப்பு எனக்கு கௌரவத்தையும், அபகீர்த்தியையும் ஏற்படுத்துவதாக உள்ளது.

என்னுடைய நிர்வாகத்தில் ஊழல் அடிப்படையில் நியமனங்கள் இடம் பெறுவதாகவோ, பொதுப்பணத்தை தகாத முறையில் கையாடல் செய்வதாகவோ அமையாது ஊழியர்கள் காரியாலயத்தில் அதி உயர் தரத்தில் ஒழுக்கமாகவும் காரியாலய நடைமுறைகளை பின்பற்றுவதில் ஊக்கம் நிறைந்தவர்களாகவும் இருப்பதற்கு என்னால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதே நேரத்தில், மேற்படி செய்திக் குறிப்பு என்னை அவமானப்படுத்தும் நோக்கில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

எனது சொந்த வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் ஊழலற்ற வாழ்க்கையை நடைமுறையில் வாழ்ந்து காட்டி ஏனையவர்கட்கு முன்மாதிரியாக இருக்கவேண்டுமென்ற நோக்கில் இருக்கும் போது இது எனது பெயருக்கும் பதவிக்கும் அழிக்கமுடியாத களங்கத்தை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

மேற்படி விடயங்களுக்காக. எனது கடுமையான ஆட்சேபத்தை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன். எனவே தங்களால் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்திக் குறிப்பை மீளப்பெறுவதோடு எனது இந்த ஆட்சேபனைக் கடிதத்தை தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

***க. சபாபதிப்பிள்ளை***
***உள்ளூராட்சி ஆணையாளர்,***
***வடக்கு கிழக்கு மாகாணம்.***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பணம் பிடுங்கி லொஜ்காரர்!

கொஞ்சநாட்களாக சற்றே தணிந்திருந்த லொட்ஜ்காரர்களது பணம் கறக்கும் நடவடிக்கைகள் இப்போது திரும்பத் தொடங்கி விட்டன. கொழும்பிலுள்ள லொட்ஜ் ஒன்றில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு புறக்கோட்டைப் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு பெண்மணியை விடுவிப்பதற்கு அந்த லொட்ஜின் உரிமையாளர் அறுபதினாயிரம் ரூபா வரை அப்பெண்ணின் உறவினர்களிடம் வாங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

கொழும்பு டாம் வீதியில் அமைந்துள்ள லொட்ஜ் ஒன்றிலேயே இச் சம்பவம் நடந்துள்ளது. ஆனாலும் இப்பெண் நாலைந்து நாட்களின் பின் நீதிமன்றம் கொண்டு செல்லப்பட்ட பின்னரே விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொலிசுக்குக் கொடுக்க வேணும், சீ.ஐ.டிக்கு கொடுக்க வேண்டும் இல்லையேல் ஆமிக்குப் பாரம் கொடுத்து விடுவார்கள் எனக் கூறியே இப் பெண்களின் உறவினர்களிடம் அறுபதினாயிரம் ரூபா பணத்தை வாங்கியுள்ளார் லொட்ஜ்காரர். ஒன்றுமே தெரியாத அப்பாவியான அவர்களும் சுவிஸிலிருந்து தமக்கு வந்த பணத்தை அப்படியே கொடுத்து விட்டிருக்கிறார்கள்.

புறக்கோட்டை லொட்ஜ்காரர்களில் பலர் பொலிஸாருடன் இணைந்து இதை ஒரு தொழிலாகவே செய்து வருகின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது..

# STF பயங்கரம்

படுத்தும் விதத்தில், இவை இளைஞர்களின் நடமாட்டத்தைக் குறைக்கும் என்றும் புலிகளும் நடமாடுவதற்கு அஞ்சுவர். இதனூடாக புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதே எமது நோக்கம் என்றும் பிரதி பாதுகாப்பமைச்சர் பத்திரிகையினர் ஒருவருக்கு விளக்கமளித்துள்ளார் என்று தெரியவருகிறது.

எவ்வாறெனினும்,காணாமல் போவோர் அல்லது கடத்த முயற்சிக்கும் போது தப்பி வந்தோர் பொலிஸில் முறைப்பாடு செய்தபோது அதனை ஏற்றுக் கொள்ள சம்பங்கள் எத்தனையோ நடந்திருக்கின்றன. இதற்கு காரணம் என்ன? விசாரணையில் அக்கறை காட்டாததன் காரணம் என்ன? பத்திரிகையாளர் இதுபற்றி தகவல் சேகரிக்க முயன்றபோது அதற்கு தடையாக இருந்ததன் காரணம் என்ன? (உதாரணத்திற்கு சரிநிகள் சார்பில் மோதற கடற்கரை சடலம் பற்றி தகவல் சேகரிக்க முயன்ற போது நடந்த சம்பவம்)

புல்லஸ் வீதி அதிரடிப்டை தலைமையகத்தில் இத்தனை கொலைகள் நடப்பதற்கு வாய்ப்பளிக்கும் அளவிற்கு அரசு பாதுகாப்புத்துறை இயங்கி வருகிறது என்றால் அரசின் பாதுகாப்பு நிலை எந்தளவு மோசமான கட்டமைப்பு உடையனவாயிருக்கிறது. இன்னும் எத்தனை இராணுவப்பிரிவு இப்படித் தெரியாமல் இருக்கிறது. அரசின் போர்வைக்குள்ளேயே இத்தனை கொலைகாரர்களும் இருந்திருக்கிறார்கள் - இருக்கிறார்கள் என்றால் காணாமல் போனோர் கொமிஷன் எல்லாம் வெறும் கண்துடைப்பு தானா?

கைது செய்பவர்கள் எவராயிருந்தாலும் பொலிஸிலேயே ஒப்படைக்கப்படல் வேண்டும், அங்குதான் காவலில் வைக்க வேண்டுமென விதி இருக்க விசேட அதிரடிப்படை முகாமில் இவர்கள் வைக்கப்பட காரணம் என்ன? பொலிஸ் மா அதிபரின் கருத்தின்படி கொலை செய்யப்பட்டவர்கள் அவசர காலச் சட்டத்தின் பேரிலேயே தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அவசர கால சட்டத்தின் பெயரால் பாதுகாப்பு துறையிலுள்ள எவரும் எவரையும் கொலை செய்யக்கூடிய வாய்ப்புகளும் இருக்கிறதா?

கடந்த காலங்களில் காணாமல் போனோர் விசாரணை ஆணைக்குழு விசாரணை கூட 3ம் ஈழயுத்தத்தின் பின் படுத்து விட்டதாகவே பேசப்படுகிறது. காரணம் காணாமல் போனோர் பற்றிய சம்பவத்தில் இராணுவத்தினரே காரணமாக இருந்ததால் அவர்களை எதிர்த்து விட்டு யுத்தம் புரிய முடியாது என்பதனாலேயே. அப்படியாயின் இந்த விசாரணைகள் எந்தளவு முன்னேற்றத்தை தரும் என்று சந்தேகப்படுவதில் தவறில்லையா?

# பெண்களின்...

சியல் முடிவுகளை எடுக்கும் போது அம்முடிவுகளை எடுப்பதில் பெண்களும் பங்கு கொள்ளல்; பெண்கள் அபிவிருத்தி வறுமை ஒழிப்பு உட்பட பல பிரச்சினைகள் பற்றிய முன்வைப்புகளை அவ்வறிக்கையில் சேர்த்திருக்கிறோம்.

இதைவிட நாங்கள் சமர்ப்பிக்கவிருக்கிற அறிக்கையில் முக்கியமாக ஆயுதப் போராட்டத்தின் மத்தியில் வாழுகின்ற பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவமளித்துள்ளோம். ஆயுதப் போராட்டம் இடம் பெறுகின்ற காலங்களில், இடங்களில் பெண்கள் மேலதிக பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். எனவே நாங்கள் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, சமாதானம் என்பன குறித்தும் எமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறோம்.

இதைவிட மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில்புரியச் செல்லுகின்ற பெண்களது உரிமைகள், சுகாதாரம் என்பன குறித்தும் குடும்பங்களில் பெண்களுக்கெதிராக இடம் பெறுகின்ற வன்முறை -இது இன்னும் தனிப்பட்ட அல்லது குடும்பப் பிரச்சினையாகவே கொள்ளப்படுகிறது; இதனை ஒரு சமூகப்பிரச்சினையாக கருதி அதற்கு சட்டரீதியிலான தீர்வு வழங்கப்படல் வேண்டும் என்பன குறித்தும் குறிப்பிட்டுள்ளோம்.

நாங்கள் இதனை பீஜிங்கில் சமர்ப்பித்ததன் பின் மாநாட்டு முடிவில் அங்கு பெண்கள் பிரகடனம் ஒன்று வெளியிடப்படும். அதை ஒவ்வொரு நாடும் ஏற்றுக் கொண்டதாக கையெழுத்திடும்.

ஏற்கனவே சர்வதேச பெண்கள் பிரகடனம் ஒன்று வெளியிடப்பட்டு அதை இலங்கையும் அங்கீகரித்திருந்ததாகத் தெரிகிறது. அந்த பிரகடனம் தொடர்பாக இலங்கை அரசு எந்தளவு அக்கறை காட்டுகிறது?

பெண்கள் பற்றிய ஐ.நாவின் பெண்கள் மீதான பாரபட்சத்தை இல்லாதொழிப்பதற்கான பிரகடனம் The Convention For the Elimination of Descrimination of Women) எனும் பிரகடனத்தில் இலங்கையும் கையெழுத்திட்டிருக்கிறது. அப்பிரகடனத்தில் மிகத் தேவையான நல்ல விடயங்கள் அடங்கியிருக்கின்றன அப்பிரகடனத்தில் கையெழுத்திட்டிருக்கின்ற சகல அரசாங்கங்களும் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பது விதி. அதன் செயற்பாடு குறித்த அறிக்கையொன்றை ஐ.நாவுக்கு ஒவ்வொரு நாடும் வழங்க வேண்டும்.

இலங்கை அரசாங்கமும் பெண்கள் அமைப்புகளின் வற்புறுத்தலின் காரணமாக (Women Charter)'பெண்கள் பிரகடனம்' ஒன்றை 1993இல் அமைச்சரவைக்கு கொண்டு வந்து அதனை அங்கீகரித்தமிருந்தது. அத சட்டரீதியிலான அந்தஸ்தைப் பெறுவதற்கு பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படல் வேண்டும். ஆனால் அந்த மசோதா இன்னமும் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்படவில்லை. நாங்கள் இயலுமானவரை அதை செய்யுமாறு அரசை வற்புறுத்த வேண்டும்.

**✱இதை செய்வதில் இந்த அரசாங்கம் கூட ஏன் தாமதப்படுத்துகிறது?**

அரசாங்கம் மாறிவிட்டதே. இந்த அரசாங்கம் அதை செய்யுமென நம்புகிறோம். Women Charter இன்னமும் ஒட்டுமொத்தமாக நடைமுறைக்கு வராவிட்டாலும் கூட ஆங்காங்கு வெவ்வேறு சட்டங்களுக்கூடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. உதாரணத்திற்கு தொழில் புரியும் கர்பிணிகளுக்கு மாத லீவு வழங்கப்படல் வேண்டும் என்பது தொழிற் சட்டத்திற்கூடாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஆனாலும் அரசின் செயற்பாடு குறித்து பூரண திருப்தியடைவதற்கில்லை. ஆனால் பிரகடனம் சிறப்பானது. எப்படியிருந்தபோதும் அரச அதை செயற்படுத்த வேண்டும். முன்னைய அரசாங்கம் கொண்டு வந்த பிரகடனம் எனக்கூறி இந்த அரசாங்கம் அதை செய்யாமல் விட்டுவிட முடியாது. செயற்படுத்தும் என நம்புகிறேன். இன்னமும் அதை ஒதுக்கிவிடாமல் இருப்பதே ஒரு நல்ல அடையாளம்.

**✱முன்னைய சர்வதேச பெண்கள் பிரகடனத்துக்கும் இப்போது பீஜிங்கில் வெளியிடப்படப் போகும் பிரகடனத்துக்குமிடையில் என்ன அடிப்படை வித்தியாசமிருக்கப் போகிறது?**

வித்தியாசமொன்று பெரியளவில் இருக்கப் போவதில்லை. ஆனால் முன்னைய பிரகடனத்தை விட மேலும் சிறப்படையக்கூடும்.

**✱அப்படியென்றால் முன்னைய பிரகடனம் போய் பீஜிங் பிரகடனம் முன் நிலையை அடையும் என்கிறீர்களா?**

பீஜிங்கில் கலந்து கொள்ளுகின்ற நாடுகள் பல பிரகடனத்தில் சிலவற்றுடன் உடன்படும் உதாரணத்திற்கு வீடுகளில் பெண்களுக்கு எதிராக செயற்படுத்தப்படும் வன்முறையை 'குற்றம்' என அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அங்கீகரிக்குமெனக் கொள்வோமே. அது ஒரு குற்றம் என ஏற்றுக் கொண்டால் அதை சட்டமாகக் கொண்டு வரும்படி அவ்வவ் நாடுகளில் போராட்டம் நடத்தலாம். அப்படிச் செய்தால் குடும்பங்களில் இடம் பெறும் வன்முறையை பொலிஸில் முறையிட வழக்கு தொடர, வழக்கின் பின் அதுபற்றி தீர்வு காண பெண்ணுக்கும் முடியும்.

பெரும்பாலும் நாங்கள் அரசாங்கள் தாமாகவே எல்லாவற்றையும் செய்யுமென எதிர்பார்க்கிறோம். அது தவறு. நாங்கள் அரசாங்கத்தை தூண்டிக் கொண்டேயிருக்க வேண்டும். அரசாங்கள் நடைமுறைப்பத்தாததையிட்டு 'உடன்பட்டமை செயற்படுத்தவில்லை என ஐ.நாவுக்கு முறையிடவும் முடியும்.'

செவ்வி: என்.சரவணன்

# யுத்தத்தின்...

ளத்துணை மூலம் அவர்களது வாழ்க்கையில் திரும்பவும் விசுவாசம், நம்பிக்கை, அர்த்தம் முதலியவற்றை காணவைப்பதாகும். இவ்வாறான நடவடிக்கைகளில் கடன் வசதி, தொழில் பயிற்சி, வேலைவாய்ப்பு, வதிவிடம், சுய உதவித்திட்டங்கள் முதலிய புனர்வாழ்வுக்கான முறைகள் இன்றியமையாதன. இந்த நோக்கத்தில் இவர்களையும் மற்றும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு பயன்பெறக்கூடிய மனநோயாளர்களையும் பொருத்தமான அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எங்களது சிபார்சுகளுடன் வழிகாட்டி விடுகின்றோம். நீங்களும் இவர்களுக்குத் தேவையான உதவிகளை உங்களால் இயலுமான எல்லைக்குள் செய்வீர்கள் என்று நம்புகிறோம்.

### சித்திரவதை

சமூகரீதியாக நாம் நோக்கும் போரின் இன்னொரு விளைவு சித்திரவதைக்கு உட்பட்டோரின் உள சமூகவியல் பாதிப்புக்களாகும். ஏனெனில், இந்த நீண்ட போரின் முரண்பாடுகளில் சிக்கிய பலர் குறிப்பாக இளம் வயதினர் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு ஆளாகியிருக்கின்றனர். தற்காலத்தில் சகல பகுதியினராலும் உபயோகிக்கப்படுகின்ற கொடிய முறைகளால் பாதிக்கப்படுபவர்களில் பாரிய உடலியல், உள சமூகவியல் விளைவுகள் ஏற்படுகின்றன. தெற்கில் தடுத்து வைக்கப்பட்ட 160 வவுனியா வாசிகளில் மேற்கொள்ளப்பட்ட் ஆய்வில், சகலரும் சித்திரவதைக்கு உட்பட்டிருந்தனர். அவர்களில் காணப்பட்ட சில குணங்குறிகள் அட்டவணை 11 இல் தொகுக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஏற்படும் மனச்சோர்வு, ஆளுமையின் சீர்குலைவு, ஒதுங்கும் தன்மை, உறவு கொள்வதில் சந்தேகம் போன்றவற்றால் முன்வந்து சிகிச்சை பெறத் தயங்குவர். சிகிச்சை பெற்று குணமடையலாம் என்றும் தெரிந்திருக்கமாட்டார்கள். ஆகவே, அவர்களுக்கான சிகிச்சை வழிகள், புனர்வாழ்வு வாய்ப்புக்கள், பராமரிப்புத் ஸ்தாபனம் போன்றவற்றை அமைத்தல் சமூகத்தின் கடமை என்று எடுத்துக் கொள்ளலாம். சித்திரவதையினால் ஏற்படும் விளைவுகளை குணமாக்குவதிலும் பார்க்க இவ் அநாகரிக முறையினைத் தடுப்பதே உகந்தது. ஆயினும் சமூக மட்டத்தில் இதற்கு எதிராக ஒரு மனப்பான்மை தோன்றுமளவும் சித்திரவதை தொடரும் என்றே எதிர்பார்க்கலாம்.

முற்றிற்று.

# முஸ்லிம்...

தீர்வை தெரிவு செய்து கொண்டாலும் வடகிழக்கு மாகாணங்களின் ஒருங்கிணைந்த நலன்களை பிரித்திருத்தல் சாத்தியமில்லை. வரலாறு நெடுக வடகிழக்கு மாகாணத்தின் சகல நெருக்கடிகளும் தமிழர்களையும் முஸ்லீம்களையும் இணைந்தே பாதித்து வந்துள்ளது. இனியும் அவ்வண்ணமே அமையும். தமிழ் முஸ்லீம் மக்கள் ஒற்றுமையில் வடகிழக்கு மாகாண நீர்நில வளங்கள் பாதுகாக்கப்பட்டதும் வேற்றுமையில் அவை குறிப்பாக முஸ்லீம் மக்களது பங்கு அபகரிக்கப்பட்டதும் வரலாறு தரும் படிப்பினைகளாகும்.

முஸ்லீம் காங்கிரஸ் தென் இலங்கையில் உள்ள தனது அமைப்புகளை கலைத்து விட்டு தனது தென்னிலங்கை மனித பொருளாதார வளங்களை பாராளுமன்ற அரசியல் சாராத பெரியாரின் தி.க.பாணி -சமூக இயக்கமொன்றை கட்டி எழுப்ப பயன்படுத்த வேண்டும்.

இத்தகைய ஒரு சமூக மைப்பினால் மட்டுமே சிதறிய முஸ்லீம் தொகுதிகளில் விரக்தியடைந்துள்ள இளைய தலைமுறை முஸ்லீம்களை அதிதீவிரவாத வழிதவறல்களில் இருந்து காப்பாற்றக்கூடும். முஸ்லீம் பிரதேசங்களை இரத்தக் காடாக்கக்கூடிய அதிதீவிரவாத வழிதவறல்களில் இருந்து இளைய தலைமுறையை மீட்டு பயனுள்ள வாழ்வுக்கு இட்டுச் செல்வது மிக மிக அவசரமான வரலாற்று கடமையாகும்.

பயனுள்ள வகையில் வாழ வகுப்பதாக அமைந்திருத்தல். இத்தகைய ஒரு அமைப்பே அரசியலுக்கு வெளியில் முழு இலங்கை முஸ்லீம் மக்களையும் அணிதிரட்டும் அமைப்பாக வளரமுடியும். அது தன்னகத்தை சமூக கலாசார கலை இலக்கிய அணிகளையும் சமூக பொருளாதார ஆய்வு அபிவிருத்திக்கு அடிப்படையான அரசு சாராத நிறுவனங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

முதலில் குறைந்தபட்சம் திரு அஸ்ரப் அவர்களாவது அமைச்சர் பதவியிலிருந்து விலகி சரணாகதி நிலையில் இருந்து முஸ்லீம் காங்கிரஸை மீட்டிடவும் அடிமட்ட தொண்டர் அமைப்பாக முஸ்லீம் காங்கிரஸை வடகிழக்கு மாகாணங்களில் மீள கட்டி எழுப்பிடவும் உழைத்திட வேண்டும்.

வடக்கு முஸ்லீம்களின் உரிமைக்கான அமைப்புடன் முஸ்லீம் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடத்துவது இத்தகைய ஒரு அமைப்புக்கான நல்ல ஆரம்பமாக அமையலாம். வடபகுதி முஸ்லீம்களின் அமைப்பும் ஒரு பாராளுமன்றம் சாராத சமூக இயக்கமாக வளர்ச்சி பெற வேண்டும். எதிர்காலத்திலேனும் தமிழர்களது தலைமைக்கும் அரசுக்குமிடையில் முழு வடகிழக்கு மாகாணத்தின் நலன்களையும், முஸ்லீம் மக்களது நலன்களையும் காப்பாற்றக்கூடிய ஒரு மூல உபாயத்தின் அடிப்படையிலான நிலைபாட்டை முஸ்லீம் காங்கிரஸ் எடுத்திட வேண்டும்.

முழு வடகிழக்கு மாகாணத்தையும் பாதுகாக்கிற ஒரு போராட்டமே வடகிழக்கு மாகாண தமிழர்களையும் முஸ்லீம்களையும் நீண்ட கால அடிப்படையில் பாதுகாக்கும். இது அடிப்படையான ஒரு யதார்த்தமாகும்.

போர் நிறுத்தம் மற்றும் சமாதான பேச்சுவார்த்தைகளில் முஸ்லீம் மக்களது பங்களிப்பு என்பவற்றுக்கு முஸ்லீம் காங்கிரஸில் போராடுவதுடன் நீண்டகால அடிப்படையில் முஸ்லீம் மக்களது நலன்களை உறுதிப்படுத்துகிற ஒரு தீர்வுத்திட்டத்தை அடிமட்ட முஸ்லீம் மக்களது முஸ்லீம் இளைஞர்களது பெண்களது பங்குபற்றுதலுடன் உருவாக்கிட வேண்டும்.

மூன்று இனங்களும் சமத்துவமாகவும் மீள முடியாத அரசியல் பாதுகாப்புடனும் அரசியல் அலகுகள் அதிகாரங்களுடனும் வாழுகிற ஒரு வடகிழக்கு மாகாணமே நீண்டகால அடிப்படையில் முஸ்லீம் மக்களது நலன்களுக்கு வழிவகுக்கும் என்பது எனது கருத்து. எனினும் பரந்துபட்ட முஸ்லீம் மக்கள் மட்டுமே தமக்கு எது தேவை என்பதை முடிவு செய்ய வல்லவர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்

## கழுதை, கிழவன், ஜனாதிபதி!

பாலர் வகுப்பு பாடப்புத்தகங்களில் ஒரு கதை வரும்.

ஒரு தகப்பனும் மகனுமாக ஒரு கழுதையில் ஏறிச்சென்று கொண்டிருப்பார்கள். வீதியில் நிற்கின்றவர்கள் 'பாவம் கழுதை, இருவருமாக ஏறி இருந்து போகின்றார்களே' என்று செல்வார்கள்.

இதைக் கேட்ட தகப்பன் தான் கழுதையில் இருந்து இறங்கி மகனை மட்டும் கழுதையில் இருக்க விட்டு, கூட நடக்கத் தொடங்குவான்.

இதைக் கண்ட சிலர் 'பாவம் அந்தக் கிழவன். அவனை நடக்க விட்டு விட்டு அந்தச் சிறுவன் ஜோராக கழுதையில் ஏறி போய்க் கொண்டிருக்கிறான்' என்று சொல்வார்கள்.

இதைக் கேட்ட தகப்பனோ மகனை இறக்கவிட்டு தான் கழுதை மீது ஏறிக் கொள்வான்.

மகனை நடக்க விட்டு தகப்பன் கழுதையில் போவதை மட்டும் விட்டுவிடுவார்களா? ''பாருங்கள் இந்தத் தகப்பனை! பாவம் அந்தச் சிறுவனை நடக்க விட்டுவிட்டு தான் கழுதையில் சவாரி செய்கிறான்' என்பார்கள்.

கடைசியில் தகப்பனும் மகனுமாக இறங்கி கழுதையை வெறுமனே நடத்திக் கொண்டு போவார்கள். இதைக்கூட பாதையில் நிற்பவர்கள் விடமாட்டார்கள்.

அடி முட்டாள்கள் இவர்கள்.... தகப்பனும் மகனும், கழுதையையும் வைத்துக்கொண்டு நடந்து போகிறார்கள் என்பார்கள்.

மற்றவர்கள் போடும் தாளத்திற்கு ஆடுபவர்களது நிலையைப் பாலர் வகுப்பு மாணவர்களுக்கு விளங்க இந்தக் கதை சொல்லப்படுகிறது.

இலங்கை ஜனாதிபதியின் நிலையும் இந்த நிலைதான்.

அரசியல் தீர்வுக்கான யோசனைகளை போதாது என்கிறார்கள் தமிழ் அரசியல்வாதிகள்.

நாட்டை எட்டுத் துண்டாக பிரித்து விடுகிற நடவடிக்கை என்றும், ஈழத்தை பிரித்து புலிகளிடம் கையளிக்கும் நடவடிக்கை இது என்றும் கூறுகின்றார்கள் எதிர் தரப்புவாதிகள். குறிப்பாக சிங்கள பேரினவாத அரசியல் வாதிகளும், பத்திரிகைகளும்.

எல்லாரையும் திருப்திப்படுத்த நினைக்கும் ஜனாதிபதியோ, இதனால் தனக்கு தானே குழி வெட்டிக் கொண்டிருக்கிறார்.

புலிகளுக்கு இந்த ஆலோசனைகளை அனுப்பப் போவதில்லை என்றும்; எல்லோரும் பயப்பிடுவது போல அப்படி ஒன்றும் நடக்கப் போவதில்லை என்றும் சிங்கள இனவாதிகளை தாஜா பண்ணப் புறப்பட்டிருக்கிறது அரசாங்கம்.

ஆலோசனைகளை மசோதாவாக்குவதற்கான கால எல்லையை மூன்று மாதத்திற்கு பிற்போட்டும் உள்ளது.

சிங்கள இனவாதிகள் தம்மை மீள வடிவமைத்துக் கொண்டு களத்தில் இறங்குவதற்கான வாய்ப்புக்களையே இவ்வாறு பின்போடுவதன் மூலம் அரசாங்கம் ஏற்படுத்தி வருகிறது.

தேர்தலில் வெற்றி பெற்ற போது மக்களிடையே இருந்த எதிர்பார்ப்புகளையும், ஆர்வத்தையும், ஆதரவையும் உதாசீனம் செய்துவிட்டு எல்லோரையும் திருப்திப்படுத்துவது என்று நடைமுறையில் இறங்கியதன் மூலம் தனது ஆலோசனைகள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பை தானே கெடுத்துக் கொண்டிருக்கிறது அரசாங்கம்.

நாட்கள் செல்லச் செல்ல எதிர்ப்பும் தவறான வியாக்கியானங்களும் வளர்ந்து வருகின்றன; ஆலோசனைகள் நார் நாராக கிழிபட்டுக்கொண்டிருக்கின்றன; அரசாங்கத்திற்குள்ளும் அதற்கு எதிரான போக்கு பலம் பெற்று வருகிறது.

எடுத்த காரியத்தை முடிப்பதில் அரசாங்கம் காட்டும் அக்கறை, எதிர்தரப்பாளர் அவற்றை எதிர்ப்பதில் காட்டும் அக்கறையை விட எவ்வளவோ குறைந்த அளவிலேயே உள்ளது. ஜனாதிபதி ஒருவரை விட்டால் இந்த ஆலோசனைகளுக்காக பேச அரச தரப்பில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

சுது நெலும் இயக்கம் வடக்கு கிழக்கு மீதான யுத்தம், யுத்த நெருக்கடிகளை நியாயப்படுத்தல் பழைய அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஆராய்தல் என்று அது தனது இருப்பை நியாயப்படுத்தும் வேலைகளில் இறங்கி இருக்கும் அளவுக்கு, சமாதானத்திற்கான யோசனைகளை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் இறங்கவில்லை. இறங்கியுள்ள நடவடிக்கைகள் எல்லாம் இந்தத் தீர்வு ஆலோசனைகளையும் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளாகவே உள்ளன.

அரசாங்கம் நடந்து கொள்ளும் இந்த விதத்தைப் பார்த்தால், உண்மையிலேயே அதற்கு இந்த விடயத்தில் அக்கறை இருக்கிறது தானா என்ற சந்தேகம் எழுவதை தவிர்க்க முடியவில்லை.

இந்தத் தீர்வுப் பொதி தோல்வியடையுமானால், நான் விலகிவிடுவேன் என்று ஜனாதிபதியே கூறும் அளவுக்கு நிலைமை மோசமாக உள்ளது!

சிக்கல்களை கண்டு ஓடிப்போபவர்கள் வரலாற்றைப் படைப்பவர்கள் அல்ல. அவர்களை வரலாறு கணக்கெடுப்பதும் இல்லை.

வரலாறு உறுதியான, சரியான முடிவுகளுக்காக திட்டமிட்டு இயங்குவதன் மூலமாக மட்டுமே எழுதப்பட்டு வந்திருக்கிறது. ஒன்றுக்கொன்று முரணான பல்வேறு விளைவுகளின் இழுப்புக்கு உள்ளாகும் எந்தப் பொருளும் தனது நோக்கத்திற்கு ஏற்ற நிலையில் நகர முடியாது. ஒன்றில் அது சமநிலையில்- தேக்க நிலையில் இருக்கும். அல்லது பலம் கூடிய திசை நோக்கி இழுபட்டு போகும்.

முன்வைத்த காலை பின்வைக்காத உறுதியும், சரி எதுவோ அதைச் செய்யும் தற்துணிவும் கொண்ட தலைவராக ஜனாதிபதி இல்லையென்றால் தமது சுயநலன்களை பிரதானப்படுத்தும் நபர்களும், கட்சிகளும் அவரை படுகுழிக்குள் தள்ளி விடுவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை; அவர் என்னதான் தீர்வு ஆலோசனைகட்கு ஆதரவாக இருந்த போதும்.

ஓட்டத்தோடு ஒத்து ஓடுபவர்கள் மாற்றத்தை ஏற்படுத்துவதில் இல்லை. வரலாறு அவர்களை குறித்துக் கொள்வதில்லை.

அது சொல்வதெல்லாம் இதைத்தான்:

கழுதையின் மீது வந்த அப்பனுக்கும் மகனுக்கும் பாதையோரத்தில் நின்றவர்கள் வழங்கிய பட்டத்தை வழங்குவதுதான்.

''முட்டாள்கள்!''

## STF பயங்கரம்:

# யார் இந்த முனாஸ்?

மார்மக்கொலைகளின் சூத்திரதாரிகள் என நம்பப்படும் பலர் இதுவரை கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மை எதுவரை வெளிவந்திருக்கிறது என்பது இன்னும் மர்மமாகவே இருக்கிறது.

கைது செய்யப்பட்டவர்களில் மிக முக்கியமானவர் கப்டன் முனாஸ். இராணுவ புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய இவர் பெயர் மாட்டின், கொழும்பைச் சேர்ந்தவர். ஆனால் இவர் தன்னை கப்டன் முனாஸ் என்று தான் கூறிக் கொள்ளுவார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவில் 2வது லெப்டினட்டாக இருந்த இவர் 1990 இல் மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பல்கலைக்கழக அகதிமுகாமில் வைத்து பெண்கள் குழந்தைகள் இளைஞர்கள் உட்பட 185 பேர் கைது செய்யப்பட்டு காணாமல் போன விவகாரத்தின் பின்னரே, முன்னைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா, ஜனாதிபதி பிரேமதாச ஆகியோருக்கு மிகவும் வேண்டியவராகி கப்டன் பதவி உயர்வு கிடைக்கப் பெற்றவர் என்று இவரின் நெருங்கிய சகபாடிகள் கூறிக் கொள்வர்.

வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்தில் கைது செய்யப்பட்ட 185 பேரும் கால்களும், கைகளும் கட்டப்பட்ட பின்னர் பஸ்ஸில் ஏற்றப்பட்டு சத்துருக்கொண்டான், கல்வியங்காடு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் இராணுவ மருத்துவர்களால் கண்களும், சிறுநீரகமும் அகற்றப்பட்ட பின்னர் ரயர் போட்டு எரிக்கப்பட்டதாக இப்போது நம்பப்படுகிறது.

இதைவிட 90இன் இறுதியில் மட்டக்களப்பு வாவியிலும், நகருக்குள்ளும் தலையில்லாமல் கிடந்த பல முண்டங்களும் கண்கள் தோண்டியெடுக்கப்பட்ட பின்னரே வீசியெறியப்பட்டதாக கூறப்பட்டது. இவ்விரு சம்பவங்களின் பின்னணியிலும் பிரதான பங்காற்றியவர் கப்டன் முனாஸ் தான்.

மட்டக்களப்பு நகரின் வீதிகளிலும் ரியூட்டரிகளுக்கு முன்னாலும் திடீர் திடீரென வந்து நிற்கும் வெள்ளைவான் ஆண்களையும் பெண்களையும் தூக்கிக் கொண்டு சிறைச்சாலை முகாம் பக்கம் அல்லது கல்வியங்காட்டுப் பக்கம் பறந்து விடும். இவ்வாறு தூக்கிச் செல்லப்பட்ட பலரே பின்னர் முண்டங்களாய் கிடந்தார்கள்.

இக்கடத்தல் விவகாரத்துக்கு பெரிதும் உதவியவர்கள் புளொட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட புளொட் குழுவினரே!

புளொட் மோகனே முனாஸின் வலது கரமாக இருந்தவர். சிறைச்சாலை முகாம்கள் முனாஸின் வாசஸ்தலமாக இருந்தன. இம்முகாம்களில் வைத்தே கைது செய்யப்படுபவர்கள் சித்திரவதை செய்யப்படுவார்கள்.

மட்டக்களப்பு வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் உட்பட பதினைந்துக்கு மேற்பட்டோர் இவ்வீதியில் வைத்து கைது செய்யப்பட்டனர். இதுவரை அவர்களுக்கு என்ன நடந்ததென்று தெரியாது. இவர்கள் கூட கப்டன் முனாஸ், புளொட் மோகன் ஆகியோரால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள்.

கப்டன் முனாஸ் இருந்த காலங்களில் இச் சிறைச்சாலை முகாமில் இரவு முழுவதும் இளைஞர்களின் ஓலங்களே கேட்டுக் கொண்டிருக்கும் என அயலிலுள்ளோர்களிடம் இப்போது கேட்டாலும் சொல்வார்கள். இந்திய இராணுவமும் இச் சிறைச்சாலை முகாமைத்தான் சித்திரவதைக்கு பயன்படுத்தியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வந்தாறுமூலை 185பேர் கைது சம்பவத்தில் மற்றைய முக்கியமானவர் மேஜர் மஜீத். இவர் வாழைச்சேனை முகாம் பொறுப்பதிகாரியாக இருந்தவர். இன்னொருவர் பிரிகேடியர் ரொகான்.

கப்டன் முனாஸ் பற்றிய நிறைய உண்மைகள் புளொட் மோகனிடமே உள்ளது. இவர் இப்போது இராணுவ உயரதிகாரி ஒருவரின் பாதுகாப்புடன் கொழும்பில் சுகபோக தலைமறைவு வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பதாக தெரியவருகிறது. இவரின் இருப்பிடம் கப்டன் முனாசுக்கு தெரிந்திருக்கும் என்றும் தெரிய வருகிறது.

இதைவிட ஆமர்வீதி சந்தியிலுள்ள ஸ்டார் லொட்ஜ்க்கு முன்பாக வைத்து கப்டன் முனாஸின் சகபாடியான குட்டி குழுவினரால் கடத்தப்பட்ட ஜோசப் கனகலிங்கம் கிளிநொச்சி (முந்திய சரிநிகரில் இவர் கடத்தப்பட்டது பற்றி எழுதியிருந்தோம்) என்பவருடன் வைத்து கண்ணன் என்ற இன்னுமொரு இளைஞரும் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிய வருகிறது.



இவர்கள் இருவரையும் விடுவிக்க வேண்டுமெனில் கப்டனுக்கு (முனாஸ்) ஐந்து லட்சம் கொடுக்க வேண்டுமெனக் கூறி இரண்டு இலட்சம் ரூபா கொட்டாஞ்சேனையிலுள்ள ஜோசப்பின் நண்பர் ஒருவரிடம் குட்டி வாங்கிச் சென்றதாகவும் தெரியவருகிறது. ஆனால் ஜோசப்பும், கண்ணனும் கொல்லப்பட்டிருக்கலாமென தாங்கள் நம்புவதாக அவரின் நண்பர்கள் கூறுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குட்டி புளொட் மோகன் குழுவினருடன் மட்டக்களப்பில் பல அடாவடித்தனங்களில் ஈடுபட்டவர். பின்னர் கொழும்பில் ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்.

அண்மையில் நடந்த பம்பலப்பிட்டி வர்த்தகர் ஒருவரின் கடத்தல் நடவடிக்கையிலும் பொலிஸாரால் தீவிரமாகத் தேடப்பட்டவர். இவருடன் சேர்ந்து செயற்பட்ட இரு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டார்கள். குட்டி 30க்கு மேற்பட்ட ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்காக குற்றம் சாட்டப்பட்டுள்ளார் எனத் தெரிய வருகிறது. இன்றைய மர்மக் கொலைகளில் மட்டுமன்றி முன்னைய ஐ.தே.க அரசு காலத்தில் நடந்த பல ஆட்கடத்தல்கள் மட்டக்களப்பில் காணாமல் போய் கண் தோண்டப்பட்டதாகக் கூறப்படும் பல வேறு சம்பவங்கள் என்பவற்றின் பிதாமகன் தான் கப்டன் முனாஸ்.

கொழும்பில் முனாஸ் குழுவினரின் கடத்தல் நடவடிக்கைளில் பிரதான பங்கேற்றவர் குட்டி. 94ஆரம்பத்தில் குட்டியினால் கூட்டிச் செல்லப்பட்ட ஒரு தமிழ் யுவதி மருதானையில் உள்ள சாலிமார் ஹோட்டலில் பயமுறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் இங்கு முனாஸ், குட்டி உட்பட பலரால் அவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இவ்யுவதி தற்போது ஐரோப்பிய நாடொன்றில் வசித்து வருகிறார் என்றும், சாலிமார் ஹோட்டல் முனாஸ் குழுவினரின் இரகசிய சந்திப்பு இடமாக சில காலமாகப் பாவிக்கப்பட்டு வந்ததாகவும் இது அப்பகுதியிலுள்ள ஆட்டோச் சாரதிகள் அனைவருக்கும் தெரிந்திருக்கிறது.

மட்டக்களப்பில் முனாஸ், புளொட் மோகன் குழுவினருக்கு தங்கள் பிள்ளைகளை விடுவிப்பதற்காக பணம் கொடுத்தோர் நூற்றுக்கணக்கில் இருந்த போதும், இவர்கள் இப்போதும் தங்கள் பெயர் விபரங்களை வெளியிடத் தயங்குகிறார்கள்.

''அடுத்த அரசாங்கம் வந்தால் முனாஸ் பிரிகேடியராக ஆக்கப்பட்டாலும் ஆக்கப்படுவார் என்பதால் இத் தகவலைக் கூறிவிட்டு நானும் எனது குடும்பமும் எங்கே போவது'' என்று எரிச்சலுடன் கேட்கிறார் கப்டன் முனாசுக்கு கப்பம் கொடுத்த மட்டக்களப்பைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர்.

இன்னுமொரு விடயம்; புளொட் மோகன் மட்டுமல்ல, முன்னைய மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மௌனகுருசாமியும் முனாஸின் நெருங்கிய நண்பர் என்பது பலருக்குத் தெரியாத விடயம். (இனிமேலாவது பயப்படாமல் தெரிந்து கொள்ளுங்கள். கப்டன் முனாஸ்தான் இப்பொழுது உள்ளுக்குள் அல்லவா!)

சரிநிகர் தனது ஆரம்ப காலத்திலிருந்தே கப்டன் முனாஸ், புளொட் மோகன் ஆகியோரின் கடத்தல் நடவடிக்கைகள், அடாவடித்தனங்கள் என்பவை தொடர்பான செய்திகளை தொடர்ந்து வெளியிட்டு வந்தது என்பது தெரிந்ததே.

[redacted]

-குருஷேத்ரம்,

பிரதம ஆசிரியர்:- சேரன். எல்லாத் தொடர்புகட்கும்: இல.4, ஜெயரட்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. 593615
வெளியீட்டாசிரியர்: ச.பாலகிருஷ்ணன், மேர்ஜ் 18/2 அலோசாலை, கொழும்பு -03. அச்சுப்பதிவு: நவமக அச்சகம்.334 காலி வீதி இரத்மலானை

07/02/1995

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்